

# அப்பா

ள்ளை நடராஜா

JPL
C10990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு
ஆறு. கை. நாகேந்திரன்
23-07-2013

3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா

தில்லை நடராஜா

மல்லிகைப்பந்தல்

201-1/1, ஸ்ரீகதிரேசன் வீதி,
கொழும்பு - 13.
தொலைபேசி: 2320721

KOHA JPL

10990 CC

236766

236,766 CC.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு மல்லிகைப் பந்தல் வெளியீடு

முதற் பதிப்பு : நவம்பர் - 2003

© S. Thillai Nadarajah

2/920

விலை: **120/=**

பக்கங்கள் : 96 + vi

KOHA JPL

அட்டை வடிவமைப்பு : எஸ். திவாகரன்
கணினி அச்சமைப்பு : எஸ். லிகோரின் றோசி

**ISBN: 955-8250-30-9**

அச்சிட்டோர்:
**யு. கே. பிரின்டர்ஸ்,**
**98 A,** விவேகானந்த மேடு,
கொழும்பு - 13.
தொலைபேசி: 2344046, 074-614153

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகள் உண்மையில் எத்தனை ஆழமானவை!

~ டொமினிக் ஜீவா

'அப்பா' என்ற பெயர் தாங்கி முன்னரும் ஒரு வாழ்க்கைச் சரித நூல் வெளிவந்துள்ளதாக ஞாபகம். பிரபல கோவை விஞ்ஞானி திருமிகு ஜி. டி. நாயுடு அவர்களினது வாழ்வுப் பின்னணி பற்றியும் அவர் ஆற்றியுள்ள விஞ்ஞானத் துணிகரச் சாதனைகள் பற்றிய உள்ளடக் கத்தைத் தாங்கியவாறு அந்த நூல் வெளிவந்திருந்தது அந்தக் காலத்தில்.

அந்த நூலை எழுதியவர் பிரபல எழுத்தாளரான சிவசங்கரி அவர்கள்.

அதைத் தவிர, எனக்குத் தெரிய, நானறிந்தவரை, மல்லிகை ஆண்டு மலர் ஒன்றில் பிரபல புத்தகசாலையான பூபாலசிங்கம் புத்தக சாலை அதிபர் திருமிகு. பூ. ஸ்ரீதரசிங் அவர்கள் 'அப்பா' என்ற தலைப்பில் தனது தந்தையாரைப் பற்றிய ஒரு வாழ்வியல் கட்டுரை ஒன்றை வரைந்திருந்தார். அது அவரது அநுபவ வட்டத்தை விவரித்தது.

எனது ஞாபகத்துக்கெட்டிய வரைக்கும் 'அப்பா' என்ற பெயரில் வெளிவந்த, நான் படித்துச் சுவைத்த இந்த இரண்டு எழுத்துக் கட்டுரை வடிவங்களைத்தான் இந்தக் கட்டத்தில் என்னால் நினைவுத் தளத்திற்குக் கொண்டுவர முடிகிறது.

இன்று இந்த 'அப்பா' என்ற புதிய நூலை வெளியிட்டு வைக்கும் போது, எனக்கு மேலே கண்ட வாழ்வியல் கட்டுரைகள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கட்டுரைத் தொடர் மல்லிகை இதழ்களில் ‘படிக்காதவர் படிப்பித்த பாடங்கள்’ என்ற தலைப்பில் வெளிவந்த போது, அவரது தந்தையாரின் எழுத்து உருவத்துடன் சேர்ந்து கலந்து தன்னையும் மறைவு உருவமாகக் காட்டி வந்த எனது தகப்பனாரையும் இடை யிடையே நான் எனக்குள் இனங்கண்டு கொண்டேன்.

இந்த மென்மையான ஞாபக உணர்வுதான் இந்தக் கட்டுரைத் தொடரை ஒரு நூலாக ஆக்கித் தரவேண்டுமென்ற ஆவலை என்னுள் தூண்டியது.

இதற்கு வேறொரு காரணமும் உண்டு.

இதில் வரும் நிஜமான அப்பா தொழில் புரிந்த தில்லைப்பிள்ளை கிளப் என்ற லக்ஷ்மி பவான் நான் தொழில் பார்த்த நிலையத்திற்கு வெகு சமீபமாக இருந்த காங்கேசன்துறை வீதியில் அமைந்திருந்தது.

அன்று யாழ்ப்பாண நடுத்தர வர்க்க மக்களால் பிரபலமாகப் பேசப்பட்டு வந்த இந்தத் தில்லைப்பிள்ளை கிளப்பில்தான் நான் முதல் முதலில் மசாலாத் தோசையைச் சுவையறிந்து ரசித்துச் சாப்பிட்டவன் என்பதுதான் முதற் காரணம். அதன் தனிச் சுவை இன்னமும் என் அடி நாக்கில் படிந்துள்ளது.

அந்தச் சுவை மிகுந்த உணவுப் பண்டத்தை தயாரித்தளித்தவர் இதில் வருகிற அப்பாதான் என்பதை என்னால் அப்போது அறிந்திருக்க வாய்ப்பில்லை. யாருமே அப்படிக் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை.

அத்துடன் காலை பதினொரு மணியளவில் தயாராகி நெய் கம கமக்கப் பரிமாறப்படும் சேமியாக் கேசரிக்காகவே ஒரு பெரும் ரசிகர் கூட்டம் காவலிருக்கும், தில்லைப்பிள்ளை கிளப்பில்.

அப்படிக் காவலிருந்தவர்களில் நானும் ஒருவன். பல நாட்கள் அந்தக் கேசரியின் தனிச் சுவையில் அகமகிழ்ந்தவர்கள் பலரைக் கண்டிருக்கிறேன்.

அந்தத் தின்பண்டங்களின் தனிச் சுவையில் மயங்கிய நான், அத்தகைய சிற்றுண்டிகளைத் தயாரித்தளிக்கும் ஊழியர்களைப் பற்றி எப்பொழுதுமே தனிக் கவனம் சொலுத்தியது கிடையாது.

ஏன் இப்பொழுது கூட சுவையான உணவு வகைகளை ஹோட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோட்டலாகத் தேடி உண்ணும் உணவுச் சுவைஞர்கள் அவற்றைத் தயாரிக்கும் தயாரிப்புக் கலைஞர்களைப் பற்றிச் சற்றுக் கூடக் கவலைப் படுகிறார்களா என்பது கூடச் சந்தேகம்தான்.

அன்று, அன்றைய காலகட்டத்தில் தில்லைப்பிள்ளை கிளப்பின் பிரிக்கப்பட்ட ஒரு பகுதியில் இந்த உணவு தயாரிக்கும் மத்திய தர வயதுக் கலைஞனைக் கண்டிருக்கிறேன் எனச் சொல்வது கூடச் சரியான தகவலாக இருக்க முடியாது. இப்பொழுது ஆழமாக யோசித்துப் பார்க்கும் வேளையில், மெல்லிசாக - மிகமிக மெல்லிசாக - பனிப் புகாரில் தெரியும் மங்கலான சந்திரனைப் போல, இவரது முகம் ஞாபகத்திற்கு வருகிறது.

பிரபல எழுத்தாளர் செ. கணேசலிங்கன் இவரை அடிக்கடித் தேடிப் போய்ச் சந்தித்து வருவது எனக்கு ஏற்கனவே தெரியும்.

இந்தக் கட்டுரைத் தொடரைத் தொடர்ந்து படித்து வந்த சமயம் என் மனதில் ஒருவித ஏக்கம் படராமலுமில்லை.

அந்தக் கலைஞரை அந்தக் கோலத்தில் ஒருதடவை தரிசித்து, அன்னாருடன் சிலமணி நேரமாவது கலந்துரையாடியிருக்கலாமோ என்ற நப்பாசை இன்று என் நெஞ்சில் சுடர் விடாமலுமில்லை.

இந்தக் கட்டுரை மல்லிகையில் ஆரம்பித்த கால கட்டத்தில் நானும் நண்பர் தில்லை நடராஜா அவர்களும் வவுனியாவில் நடைபெற்ற சாஹித்திய விழாவொன்றில் கலந்து கொண்டுவிட்டுக் காரில் கொழும்பை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தோம். காரின் பின் இருக்கையில் என்னுடன் நாடகக் கலைஞர் மட்ராஸ் மயிலும் உடனிருந்தார்.

கார் கொழும்பிற்குச் சமீபமாக வந்து கொண்டிருந்த வேளையில், கிரிபத்கொட என்ற இடைப்பட்ட ஒரு சிற்றூரின் நடுத் தெருவில் மோட்டார் சைக்கிளில் மனைவியுடன் பிரயாணப்பட்டுக் கொண்டிருந்த வாகனத்துடன் நமது கார் சற்று மோதி, இடைவழியில் நின்று கொண்டிருந்தது.

எனவே, போலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டு விட்டது. அரச வாகனம் அது. எனவே பொறுப்பான ஓர் அதிகாரி என்கின்ற முறையில் அவர் நடுத் தெருவில் பொலிஸ் விசாரணைக்காகக் காத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டப்பட்டிருந்த ஒரு கடையின் முன் விறாந்தையில் விசாரணைக் காக நாம் காத்திருந்த சமயம்தான், நான் மல்லிகையில் வெளிவந்திருந்த அவரது கட்டுரை பற்றிப் பிரஸ்தாபித்தேன். தொடர்ந்து அந்தக் கட்டுரையை எழுதி முடிப்பது இன்றைய இளந்தலை முறையினருக்கு ஒரு பாடமாகவே அமையலாம் என எனது கருத்தை வெளியிட்டேன்.

அவரும் எனது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து எழுதச் சம்மதித்தார்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

இன்றைய யாழ்ப்பாணச் சமூகச் சூழமைப்பில் இந்த நாட்டில் மிக உயர்ந்த உயர்பதவி வகிக்கும் ஒருவர் ஆவணமாக எதிர்காலத்தில் பதியப்பட வைக்கத்தக்க எழுத்தில் 'எனது தந்தையார் எழுதப் படிக்கத் தெரியாதவர். ஒரு ஹோட்டலில் சம்பளத்திற்குச் சமையற்காரராக இருந்து தான் சிறு வருமானத்தின் மூலம் என்னைப் படிப்பித்து வாழ்க்கையில் உயரச் செய்தவர்?' எனப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்த ஒரு மனிதனுக்கு எத்தனை அசாத்திய நெஞ்சுரம் வேண்டும்.

சும்மா வாயோதியாக 'அமெரிக்காவைப் பார், ஜப்பானைப் பார், இங்கிலாந்தைப் பார்' என உயர்கல்வி போதிக்கும் இன்றைய ஆசிரியர்கள் உலகத்தின் வளர்ச்சி பெற்ற நாடுகளைக் காட்டித்தான் மாணவர்களுக்கு இதுவரை கற்பித்து வருகின்றனர்.

'இதோ யாழ்ப்பாணத்தைப் பார், அந்தச் செம்பாட்டு மண்ணின் தனிச் செழுமையையும் அதன் வீரியத்தையும் ஆழத்தையும் பார்!' என ஏன் இன்றைய காலகட்டத்தில் கூட - சர்வ யுத்த நாசங்களிலிருந்து சுதாரித்துக் கொண்டு முகிழ்ந்தெழும்பி வரும் 'புதிய யாழ்ப்பாணத்தைப் பார்' என ஏன் இவர்கள் சொல்லத் தயங்குகின்றனர்.

இப்படி எதிர்காலத்தில் உயர்கல்வி மாணவர்களுக்கு வகுப்பறையில் பாடம் போதிக்க வேண்டும் என்ற தீர்க்க தரிசன உணர்வுடனேயே இந்த நூல் மல்லிகைப் பந்தல் பிரசுரமாகிறது.

தங்களது மைந்தர்களும் எதிர்காலத்தில் தலை நிமிர்ந்து தனிப் பாதையில் நடைபோட விருப்பமுள்ள தந்தையர்களுக்கு இக்கருத்துக்கள் சமர்ப்பணம்.

3.11.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா

எனது ஆசிரியர்கள், மேலதிகாரிகள், நண்பர்கள் காட்டிய வழிகள் உயர்ந்த நிலையைப் பெற உதவினாலும் இன்னுமொருவர் படிப்பித்த பாடங்கள் நாளாந்த நடவடிக்கைகளைச் சிறப்பாகச் செய்வதற்கு உதவுகின்றன. அவர் பள்ளிக்குச் சென்று படித்ததில்லை. ஐந்தாறு வயதில் இரண்டு மைல் தூரம் நடந்து சென்று தொழில் பார்த்து தினக் கூலியாக இரண்டு சதம் பெற்று, எட்டு வயதில் பெற்றோரையும் பிறந்த ஊரையும் விட்டு வெகு தொலைவுக்கு அப்பால் தொழில் தேடிக் கொண்டவர். சொந்த முயற்சியால் எழுத்துக் கூட்டிப் பத்திரிகை சஞ்சிகை வாசிப்பின் மூலம் பல விடயங்களைக் கிரகித்து நல்லவற்றையும் நல்லவையல்லாதவற்றையும் எடைபோடத்தக்க தகைமை பெற்றவரானார்.

அவர்-

திரு. சிங்காரம்பிள்ளை - எனது தந்தையார்.

யாழ்ப்பாணத்தில் ஒரு சாதாரண சாப்பாட்டுக் கடையில் 'சமையல்' அவரது தொழில்.

யாழ்ப்பாண நகரில் குறுக்கும் நெடுக்குமாகப் பல வீதிகள் அமைந்த போதும், பிரசித்தமான வீதிகள் மிகச் சிலவே. அத்தகைய பிரசித்தமான சில வீதிகளில் கண்டி வீதி, பருத்தித்துறை வீதி, மானிப்பாய் வீதி, காங்கேசன்துறை வீதி என ஊர்களுக்குச் செல்லும் பாதைகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகின்ற வீதிகளில் ஒன்று காங்கேசன்துறை வீதி. காங்கேசன்துறை வீதியை ஆங்கிலத்தில் சுருக்கமாக கே.கே.எஸ். றோட் என அழைப் பார்கள். ஆங்கில மொழி தெரியாதவர்கள் நாவிலும், கே.கே.எஸ். றோட் நடம் புரிந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான சாப்பாட்டுக்கடைகளில் 'லக்ஷ்மி விலாஸ்' குறிப்பிடத்தக்கது. தில்லைவனம்பிள்ளை என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட 'லக்ஷ்மி விலாஸ்' அநேகமாக எல்லோராலும் 'தில்லைப் பிள்ளை கிளப்' என்றே அழைக்கப்பட்டது. வீதியால் போவோர் வருவோரைக் கவர்ந்திழுக்கக் கூடிய காட்சிப் பெட்டிகள் அமைந்த கடையல்ல, 'தில்லைப்பிள்ளை கிளப்!' வாடிக்கையாளரின் சைக்கிள் வண்டிகள் நிறுத்தக்கூடிய சிறு ஒழுங்கை போன்ற முகப்பைக் கொண்ட தில்லைப்பிள்ளை கிளப்பில் அலங்காரப் பொருட்கள், கவர்ச்சிப் பொருட்கள் என எவற்றையும் காண முடியாது. டிக்காசன் காப்பி, எண்ணெய்த் தோசை, மசாலாத் தோசை என்றதும் நினைவுக்கு வரும் முதல்தர ஹோட்டலாக தில்லைப்பிள்ளை கிளப் விளங்கியது.

கலப்படம் இல்லாத சுத்தமான உணவுப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்யும் 'தில்லைப்பிள்ளை கிளப்'பில் அப்பா சிங்காரம் பிள்ளையும் ஒரு தொழிலாளி.

இரண்டாவது வகுப்பில் நான் படித்துக் கொண்டிருந்தவேளை புகைப் படம் பிடித்துக் கொள்வதற்காக யாழ்ப்பாணம் வாஸன் ஸ்டுடியோவுக்கு அழைத்துச் சென்றனர்.

படப்பிடிப்பாளர் - ''கண் வெட்டாமல் பார்க்க வேணும்; அச்சாப் பிள்ளை ஸ்மைல் பிளீஸ்'' - எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். கமராவைப் பார்த்த வண்ணம் அதற்கு முன்பாக என்னை இருத்திப் படம் பிடிக்க எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

தந்தையார், புகைப்படக் கருவியில் பொருத்தப்பட்டிருந்த வட்டக் கண்ணாடியைக் காட்டி, ''தம்பி சிரித்துக் கொண்டே இந்தக் கண்ணாடியைப் பாருங்கோ. இதிலையிருந்து ஒரு குருவி பறந்து வரும்'', என்றார்.

குருவி பறந்து வரும் என்ற எண்ணத்துடன் சிரித்த முகத்துடன் இருந்தேன். படப்பிடிப்பாளர், 'ரெடி', 'தாங் யூ' சொன்னது எனக்குக் கேட்கவில்லை. சில நாட்களில் அழகான புகைப்படம் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரும் சில சந்தர்ப்பங்களில் புகைப்படக் கருவியிலிருந்து குருவி பறந்து வரும் எனக் காத்திருந்தேன். குருவி வராவிட்டாலும் படங்கள் நன்றாக அமைந்து விட்டன.

முதன் முதலாக தொழில் வாய்ப்புத் தேடி விண்ணப்பம் அனுப்பிய போதுதான் நான் எப்போது பிறந்தேன் என அறிந்து கொண்டேன். பிறந்த திகதி எனக் குறிப்பிட்டிருந்த கூட்டில் எழுத வேண்டிய தகவலுக்காகவே பெற்றோரிடமிருந்து பிறந்த திகதியைத் தெரிந்து கொண்டேன். எனது பள்ளிப் பருவத்தில் பிறந்தநாள் கொண்டாட்டம் என்று நடைபெற்ற சம்பவங்கள் எதுவும் இருந்ததாக நினைவில் இல்லை. என் வீட்டில் மட்டுமல்ல... கல்லூரியில்... ஊரில்... இல்லை. இல்லவேயில்லை.

இப்போதெல்லாம் சாதாரண வாழ்வுக்குக் கஷ்டப்படும் குடும்பங் களில் கூட, வீடியோ, புகைப்படம் இத்தியாதிகள் இல்லாவிட்டால் பிறந்தநாள் கொண்டாட்டம் நிறைவுள்ளதாக அமையாது. தின் பண்டங்கள் மத்தியிலும், விளையாட்டுப் பொருட்களுக்கு மத்தியிலும் குழந்தைகளை விதவிதமான புது உடைகளுடன் படமெடுப்பதை எல்லோரும் விரும்புகின்றனர். பிறந்தநாள் நிகழ்ச்சிகளுக்கு என்னை அழைப்பவர்களின் நோக்கங்களில் ஒன்று தந்தை சொன்ன மந்திரத்தைச் சொல்லி தந்திரமாக அழுகின்ற குழந்தைகளையும் சிரிக்க வைத்து புகைப்படத்தினுள் விழுத்தி விடுவேன்.

கல்லூரி நாட்களில் தந்தையாருடன் கடையில் தங்கியிருந் திருக்கிறேன். காலை ஐந்து மணிக்கு முன்பாகக் கடமைகளை ஆரம்பித்து விடுவார். சாதாரணமாக இரவு பத்து மணிவரை கடையில் வியாபாரம் நடைபெறும். அதன்பின் தந்தையார் தினசரிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிப்பார். யாராவது 'பகல் பொழுது முழுவதும் வேலை செய்வதால் சிறிது ஓய்வு எடுக்கக் கூடாதோ?' என்று கேட்டால் - 'பகல் முழுவதும் வேலை செய்கிறேன். வாசிப்புத்தான் எனக்கு ஓய்வு' என்பார். சாதாரணமாக அவர் வேலை செய்யும் வேளைகளில் கடையில் வேலை செய்வோர் மட்டுமல்ல - வேறு பல முதலாளிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பல தரத்தவர் அவருடன் உரையாடி நாட்டு நடப்புகளைத் தெரிந்து கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாரும் மற்றவர்களும் உரையாடும் போது தெரிந்து கொண்டவை தான் பொது அறிவையும் விவேகத்தையும் என்னுள் உருவாக்கியது.

கல்யாணக் காலங்களில் விசேட பலகாரங்களை தயாரிக்கும் பொறுப்புத் தந்தையாருக்குக் கொடுக்கப்படும். வழமையான வேலைக்குப் பின்பே அதாவது இரவு பத்து மணிக்குப் பின் விசேட வேலைகள் ஆரம்பமாகும். இடையில் மின்சாரம் தடைப்பட்டாலும் கடமை தொடர்ந்து நடைபெற வேண்டுமென்பதற்காக 'பெற்றோல் மக்ஸ்' - 'அரிக்கன் லாம்பு' என்பவை மட்டுமல்ல - பற்றறியுடன் கூடிய மின்விளக்கும் தயாராக வைத்திருப்பார். உணவுகளைத் தயாரிக்கும் போது எந்த இடையூறுகளாலும் சுவையும் தரமும் கெட்டுவிடக் கூடாது என்பார். அவரிடம் கற்ற பாடம்தான் கடமைகளைச் செய்யும் போது எந்தெந்த இடையூறுகள், தடைகள் ஏற்படும் என்பதை முன்கூட்டியே உணர்ந்து மாற்று ஒழுங்குகள் பலவற்றைத் தயார் செய்தால் ஒன்றில்லா விட்டால் இன்னொன்று மூலம் நோக்கங்களை அடையக் கூடியதாயிருக்கும்.

குறிப்பாக வன்னியில் கிளிநொச்சி நகரில் போர் மேகங்கள் சூழ்ந்த போது பாதுகாப்பான பகுதிகளுக்கு அலுவலகங்களைக் கொண்டு சென்றதும் பெறுமதியான கோவைகள், கடிதங்கள், சாதனங்கள் சேத மின்றித் தக்க வைத்திருப்பதற்கும் முன்கூட்டியே மாற்று ஒழுங்குகளைத் தீர்மானித்துச் செயற்படுத்தியதுதான் காரணம்.

திடீரென இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையே முல்லைத்தீவில் 'போர்' பெரிதாக வெடித்தபோது முக்கியமான சாதனங்களைக் கூட எடுக்க முடியாமற் போய் விட்டதாகத் தெரிந்து கொண்ட செய்தி என் மனதில் நன்றாகப் பதிந்திருந்தது.

1995இல் கிளிநொச்சி அரச அதிபர் பதவியை ஏற்ற நாள் தொடக்கம் ஏற்படலாமென எதிர்பார்த்த எந்தவித அசம்பாவிதங்களுக்கும் முகம் கொடுக்க கிளிநொச்சி மாவட்ட அரச உத்தியோகத்தர்களைத் தயார் படுத்தி வைத்திருந்தேன். 1996 நடுப்பகுதியில் கிளிநொச்சி நகரில் போரினால் அவலங்கள் ஏற்படுவதற்கு முன்பாக மாற்று ஒழுங்குகளின் பிரகாரம் அரசாங்க அலுவலகங்கள் யாவும் அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதிகளுக்கு அவசரம் அவசரமாகக் கொண்டு செல்லப்பட்டன. அதற்கு முன்பாக கடிதங்கள் கோவைகள் சாதனங்கள் ஆகியவற்றைப் பகிரங் கப்படுத்தாமல் பாதுகாப்பாக எடுத்துச் சென்றதால் எந்தவொரு சாதனமும் தொலையவில்லை - சேதப்படுத்தப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1961ம் ஆண்டு யாழ்ப்பாணச் சத்தியாக்கிரகத்தை அடுத்து இராணுவத்தினர் குவிக்கப்பட்ட நேரத்தில் - ஒரு விருந்துக்காக இரண்டாயிரம் உழுந்து வடைகள் தயாரிக்கும் பொறுப்பு தந்தையாரிடம் ஒப்படைக்கப்பட்டது. கூடவே ஒரு நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

நிபந்தனை இதுதான் - 'ஒவ்வொரு வடைக்குள்ளும் ஐந்து துண்டு மிளகாய் இருக்க வேண்டும்'.

சாதாரணமான கடையில் மிளகாய்த் துண்டுகளை எண்ணி வடையில் வைத்துச் சுடுவதும் - இராணுவத்தினர் தொடர்பும் பிரச்சினை என்பதால் இந்த ஓடரை எடுத்துக் கொள்ள முதலாளி விரும்பவில்லை. ஆனால் தந்தையார் துணிந்து விட்டார்.

இரண்டாயிரம் வடையையும் வாங்கிச் செல்ல வந்த இராணுவ அதிகாரி, "ஒவ்வொரு வடையிலும் சரியாக ஐந்து மிளகாய்த் துண்டுகள் இருக்குமா?" எனக் கேட்டார்.

"ஓ... அதெல்லாம் சரியாக இருக்கும்" என்று தந்தையார் பதிலளித்ததுதான் தாமதம் - இராணுவ அதிகாரி வடையை மெதுவாகக் கிள்ளி மிளகாய்த் துண்டுகளை எண்ணிப் பார்த்துவிட்டு, கோபமாக "நாலு துண்டுகள்தான் இருக்கு" என்றார்.

தந்தையார் சிறிதும் பதட்டப்படாமல், "இரண்டொரு வடையில் நாலு துண்டுகள் வைத்ததாக நினைவு. மற்றதெல்லாத்துக்கும் சரியாக ஐந்து துண்டு மிளகாய்" என்று சொல்லிக் கொண்டே ஒரு வடையை எடுத்து, மெதுவாக நுள்ளி மூன்று மிளகாய்த் துண்டுகளை அதிகாரியின் கையில் கொடுத்து, மிகுதி வடையைத் தமது வாயில் போட்டு, "அம்மா உறைக்குதே. நாலு ஆ... ஐந்து... ஸ்..." என்று கணக்குக் காட்டினார். பணம் கொடுத்து முதலாளியின் வயிற்றில் பால் வார்த்தார்.

"தொழிலைச் சரியாகச் செய்கிறோமென்றால் ஆமிக்கு மட்டுமில்லை - யாருக்குமே பயப்பிட வேண்டாம்", என்பது தந்தை கூறியது. போராட்டப் பிரதேசங்களில் பொறுப்பான வேலைகளைச் செய்யும் போதும் இராணுவத்தினருடன் உரையாடும் போதும் நினைவுக்கு வரும் அப்பேச்சு. என்னைப் பொறுத்தளவில் தொழிலைச் சரியாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றேன்.

சில வேளைகளில் பெரிய விருந்துகளில் கலந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கின்றன. எனது நண்பர்கள் விழுந்தடித்துச் சாப்பிடுவார்கள். 'Must Enjoy The Meals' 'வயிற்றுக்கு வஞ்சகம் செய்யக் கூடாது' என்றெல்லாம் சொல்வார்கள். பின்னர் மாத்திரை களையும் அடிக்கடி கழிப்பறைகளையும் நாடுவதையும் கண்டிருக்கிறேன்.

இரண்டொரு தினங்கள் வெளியூரில் தங்க வேண்டிய வேளை களிலும், பிரயாண நேரங்களிலும் தந்தையாரின் 'விக்கினமில்லாச் சாப்பாடு' - வாழைப்பழமும் - அக்காலத்தில் பரவலாக அறிமுகமாயிருந்த 'ஒரேஞ் பார்லி' சோடாவும் அவை மனதில் தோன்ற எளிதாகச் சீரணமாகக் கூடிய இரண்டொரு கறிகளுடன் விருந்தை முடித்துக் கொள்வதால் வேறு வில்லங்கங்களை வாங்கிக் கொள்வதில்லை.

மட்டக்களப்பில் கூட்டுறவு உதவி ஆணையாளராகக் கடமை யாற்றிய போது, திறந்த வெளியரங்கில் காலை ஆறுமணிக்குக் கொடியேற்ற நிகழ்வுடன் சர்வதேச கூட்டுறவாளர் விழாவை ஆரம்பிப்பதாக ஒழுங்குகள் செய்யப்பட்டன. திறந்த வெளியரங்குக் காவலாளிகள் இல்லாததால் காலை ஐந்து மணிக்குக் கொடிமரம், கயிறு இதர பொருட்கள் ஆகியவற்றை லொறியில் கொண்டு சென்றோம்.

ஆறுமணிக்குச் சில நிமிடங்கள் இருக்கையில் பல உத்தி யோகத்தர்கள், பொது மக்கள் வந்து விட்டனர். சிற்றூழியர் ஒருவரும் வரவில்லை. ஒவ்வொருவரது முகத்தையும் பார்த்தேன்.

ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்தவரை - வராத சிற்றூழியரை இடைநிறுத்துவது, சேவையிலிருந்து விலக்குவது பற்றிக் கதைத்தார்கள்.

எனது நினைவு தந்தையார் வேலை செய்த சாப்பாட்டுக் கடையை நோக்கிச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ பிரச்சினை. இரண்டு நாட்கள் நகரச் சுத்தித் தொழிலாளர் வரவில்லை. எச்சில் இலைத் தொட்டியில் நிரம்பியுள்ளது. மாற்று வழி இல்லாததால் கடையைப் பூட்டுவோம் என்றார் முதலாளி.

''தேவையில்லை'' என்று சொன்ன சிங்காரம்பிள்ளை ஒரு பெரிய காட்போட் பெட்டியை எடுத்து வந்து இலைகளை அள்ளிப் பின்புறம் கொண்டு சென்றார். குழிவெட்டி அவற்றைப் புதைத்தார். முதலாளிக்கு மட்டுமல்ல - வழக்கமாகச் சாப்பிட வருபவர்களுக்கு ஆச்சரியமும் மகிழ்ச்சியும்.

சிங்காரத்தின் மகனல்லவா - தில்லை; கையிலிருந்த மணிகூட்டைக் கழற்றி ஒருவரிடம் கொடுத்துவிட்டு, அலவாங்கை எடுத்துக் கொண்டு நிலத்தில் குந்தினேன். எத்தனை பேர் என்னைச் சுற்றி வந்தார்கள் என்று தெரியாது. கணப் பொழுதில் கொடி மரங்கள் நாட்டப்பட்டுக் கடமைகள் முடிவடைந்தன. இச்சம்பவத்தின் பின் இக்கட்டான வேளைகளில்...

'இது ஒரு குறைவான தொழில் - எப்படிச் செய்வது?

'அது பெரிய வேலை - எப்படிச் செய்வது?'

என எண்ணுவதில்லை. முந்திக் கொள்வேன். விடயம் பூர்த்தியாகி விடும்.

இன்னுமொரு சம்பவம். தொலைபேசி உட்பட எதுவித நவீன சாதனங்களும் கிளிநொச்சிக் கச்சேரிக்குக் கிடைக்காத 90களின் பிற்பகுதியில் கச்சேரி கடிதத்தலைப்பு செல்வாக்குள்ள அங்கீகரிக்கப்பட்ட சாதனமாகத் திகழ்ந்தது. முக்கியமான பொருட்களைக் கிளிநொச்சிக்குக் கொண்டு வரவும், கிளிநொச்சியிலிருந்து பிற இடங்களுக்கு கொண்டு செல்லவும் மாத்திரமன்றி கச்சேரிக் கடிதத்தலைப்பில் அரச அதிபரின் சிபார்சுடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடிமாடியோர் மீது கெடுபிடிகள் இல்லையென்று சொல்லலாம். கடிதத்தலைப்பின் தேவை அதிகமாக இருந்தாலும் அவற்றைக் கொழும்பிலேயே அரச அச்சகக் கூட்டுதாபனம் மூலம் அச்சிட வேண்டிய நிலை. கூட்டுத்தாபன விநியோகப் பகுதி விமானப்படைத் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக அமைந்திருந்ததால் வாகனத்தை நிறுத்தி வைக்க முடியவில்லை. 5000 கடிதத்தலைப்புகளைப் பொறுப்பேற்று கிளிநொச்சிக்கு கொண்டு செல்ல வேண்டும். முப்பது வருடங்களுக்கு முன்பாக கிளார்க்காக வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த கொழும்பில் தவறுதலாகப் பென்சில் கீழே விழுந்தாலும் விழுந்த மறுகணமே அதை எடுத்துக் கொடுப்பதற்கு பியோன் ஓடிவந்த சம்பவங்களைச் சுகமாக நினைத்துக் கொண்டு, சட்டைக் கொலரின் மத்தியில் தொங்கிக் கொண்டிருந்த கழுத்துப் பட்டியைத் தூக்கி பின்புறமாகப் போட்டுவிட்டு இருகைகளையும் நீட்டினேன். அவற்றின் மேல் தூக்கி வைக்கப்பட்ட 5000 கடிதத்தலைப்புகளையும் பிரதான வீதியொன்றினூடாக சுமந்து கொண்டு சுமார் 400 யார் தூரம் நடந்து சென்று வாகனத்தில் ஏற்றினேன்.

உலகம் பழித்து ஒதுக்கும் வேலையானால் செய்யாமல் விடலாம். மற்றவற்றைச் செய்ய ஏன் வெட்கப்பட வேண்டும்.

நான்காம் வகுப்பில் நான் படித்துக் கொண்டிருந்த போது, தந்தையாருக்குக் கொதிக்கிற எண்ணெய் கண்ணில் தெறித்துக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் இருக்கும் செய்தி அறிந்து அம்மாவுடன் ஆஸ்பத்திரி சென்றேன்.

வழமையாகப் பெரிய பாத்திரமொன்றில் தேங்காய் எண்ணெயைச் சூடாக்கி பலகாரங்கள் செய்த பின், பாத்திரத்திலுள்ள தேங்காய் எண்ணெய்யை ஒரு தகரத்தில் ஊற்றிவிட்டு அடுத்த வேலைகளை ஆரம்பிப்பது வழக்கம். அன்றைய தினம் தவறுதலாகப் பலகாரங்களைப் பாத்திரத்தினுள் போட்டபோது கொதிக்கின்ற எண்ணெய் தெறித்து கண்களிலும் முகத்திலும் பட்டுவிட்டது. யாரும் கிட்ட வரவேண்டாம் என்று சொல்லிய தந்தை, பாத்திரத்தைத் தூக்கிச் சூடான எண்ணெயைத் தகரத்தில் ஊற்றி விட்டு எண்ணெய் பாத்திரத்தைக் கிணற்றடியில் வழமையாக வைக்கும் இடத்தில் வைத்துவிட்டு நடந்ததைச் சொல்லி, மற்றவர்களின் துணையோடு ஆஸ்பத்திரிக்குச் சென்றார்.

கொதி எண்ணெய் தெறித்து, பார்க்க முடியாத நிலையிலும், தந்தையாரின் செயல் பலருக்கு வியப்பைக் கொடுத்தது. அவர் சொன்னார், ''அடுப்பிலிருந்து ஏழு அடி தள்ளி எண்ணெய் ஊற்றி வைக்க வேண்டிய தகரம், பின்னர் இடது புறம் திரும்பி நாலு அடி நடக்க வாசல் - பின்னரும் இடது புறமாக நடக்கக் கிணற்றடி''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரம், திசை ஆகியவற்றைக் கவனித்தால் இருட்டிலும் நடக்க முடியும் என்பார்.

அரசாங்க வேலையில் சேர்ந்த பின் விடுதலையில் ஊருக்குச் சென்று மீண்டும் புறப்பட ஆயத்தமான போது, தந்தையார் பல் விளக்கும் தூரிகையையும் சவர அலகையும் கொண்டு வந்து தந்தார். அவை குளியலறையில் நான் எடுத்து வர மறந்த பொருட்கள். அப்போது அவர் சொன்ன அறிவுரை -

'ஓரிடத்திற்குப் புறப்படுவதற்கு முன்பாக - அந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டதாகக் கற்பனை செய்து என்ன செய்யப் போகிறோம் என்பதை எண்ணித் தேவையான பொருட்களைப் பட்டியல் போட்டு அவற்றை எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும்' என்று சொன்னார்.

பற்பசையிலிருந்து உத்தியோக பூர்வக் கூட்டத்துக்குத் தேவையான சகல பொருட்களையும் - அதாவது காலையில் எழுந்து பல் துலக்குதல், முகச்சவரம், குளியல், உத்தியோக உடை எனப் பட்டியல் போட்டு எடுத்து வைத்து விடுவேன். காலையில் எழுந்து சவர அலகு தேடித் திரியும் உத்தியோகத்தர்கள், கூட்டத்துக்கு முன்பாக கழுத்துப் பட்டி(டை) தேடும் உத்தியோகத்தர்கள் போன்றோரின் நிலை எனக்கு ஏற்படாததற்குக் காரணம் தந்தையின் வழிகாட்டுதலேயாகும். அது மட்டுமல்ல பிரயாணப்பையில் முகச்சவரம் செய்வதற்குரிய பிளேட்டைத் தீப்பெட்டிக்குள் வைக்க வேண்டும் என்பது போன்ற சின்னச் சின்ன விடயங்களைக் கூடச் சொல்லித் தந்ததை, ஒரு முறை நண்பர் ஒருவர் பிளேட் தேட பையில் கையை விட்டுத் துளாவி இரத்தம் சிந்தும் கையுடன் துடித்ததும், உடுப்புக்களில் இரத்தக் கறை படிந்ததும் நினைவுக்கு வர எப்படித் தந்தையாரால் சிறு விடயங்களையும் அவதானித்து அறிவுரை வழங்க முடிகிறது என ஆச்சரியப்பட்டிருக்கிறேன்.

பொருட்களைப் பயன்படுத்த வேண்டும், சிந்தக் கூடாது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வார். பாடசாலை நாட்களில் பற்பசையில்லை. பற்பொடிதான் பாவனையில் இருந்தது. ஒரு சிறு துகள் கூட வீணாகக் கூடாது என்பதற்காக முகப்பவுடர் பயன்படுத்திய பின் எறியும் சிறு தகரப் பேணியைத் துப்பரவாக்கி அதனுள் பற்பொடியைப் போட்டு வைக்கச் சொல்லுவார். மூடித் துவாரங்களூடாக வரும் பற்பொடியின் அளவு போதுமானதாக இருக்கும். அப்போது பற்பொடியின் விலை பத்துச் சதம் தான். ஆனாலும் அதையும் வீணாக்கக் கூடாது என்பதே தந்தையின் கொள்கை.

இப்போதுள்ளது போல குமிழ்முனைப் பேனாவும், பிளாஸ்டிக் போத்தலும் இல்லாத காலம். எழுதுவதற்கு மையும் தலை அலங்காரத்துக்கு எண்ணையும் கொண்டு செல்லக் கண்ணாடிப் போத்தல் பயன்படுத்தப் பட்ட காலம். அதற்காக அளவில் சிறிய நன்கு மூடத்தக்க போத்தல்களை சிறிய அட்டைப் பெட்டியில் பழைய சீலைகளைச் சுற்றி வைக்கும் படி சொல்லித் தந்தார். அதனால் போத்தல் உடைந்து பொருள் பழுதாக வாய்ப்பில்லை.

வெளியே ஓரிடத்தில் தங்கியிருந்து புறப்படுவதற்கு முன்பாக எல்லாப் பொருட்களையும் மேசையில் அல்லது கட்டிலில் அடுக்கி வைத்துப் பின்னர் இவற்றைப் பையில் எடுக்க வேண்டும். குளியலறை, அலுமாரி போன்றவற்றில் பொருட்கள் ஏதாவது வைத்து விட்டோமா என்று சரி பார்க்க வேண்டுமென்றும் சொல்லுவார்.

அண்மையில் மிகமிக முக்கிய இடத்தில் இருக்கும் ஒரு பிரமுகர் அண்டைய நாட்டுக்கு மனைவியுடன் சென்று உத்தியோக பூர்வ விடயத்தை முடித்துக் கொண்டு திரும்பிய போது விமான நிலையம் வரை வந்து அவசரம் அவசரமாகத் தங்கியிருந்த ஹோட்டலுக்குத் திரும்பிச் சென்றதற்குக் காரணம் குறிக்கும் போது கழற்றி வைத்த சங்கிலியை எடுக்க மறந்ததேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிடத்திற்குப் போவதற்கு முன்பாக இட அமைவு பற்றியும் தெளிவான தகவல்களைப் பெற வேண்டுமென்று வற்புறுத்துவார். தந்தையாரின் இந்த அறிவுரையைக் கடைப்பிடிக்காததால் இரண்டு முறை தடுமாறியிருக்கிறேன்.

ஒரு முறை வவுனியாவிலிருந்து கொழும்புக்கு வந்து கொண்டிருந்த போது இலங்கையில் தயாரான 'இதயராகம்' படத்தைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்துடன் விரைந்து வந்த போது வழியில் சிறிது தாமதம். இரவு ஏழு மணிக்கு தியேட்டருக்குள் நுழைந்து சில நிமிடங்கள் சென்ற பின்தான் வேறு ஒரு தியேட்டருக்கு மாறி வந்துவிட்டதையும், இதயராகம் படத்துக்குப் பதிலாக ஏற்கனவே பார்த்த 'ஒளி விளக்கு' படம் ஓடிக் கொண்டிருப்பதையும் அறிய முடிந்தது.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மண்டபத்தில் எனது பழைய கல்லூரியான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூயின் வருடாந்த பொதுக் கூட்டம் நடப்பது வழக்கம். திகதியையும் நேரத்தையும் மட்டும் குறித்துக் கொண்டு வழக்கம் போல சென்ற பின்னர் தான் கூட்டம் நடைபெற்ற இடம் வேறோரிடம் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

சாப்பாட்டுக் கடையில் இளைஞரொருவர் இடையிடையே தும்மிக் கொண்டு மிளகாய் வெட்டும் வேலையைச் செய்து கொண்டிருந்தார். இதனைப் பார்வையிட்ட தந்தை இருமல் - தும்மல் வருவது போலத் தோன்றும் போது ஆயுதங்களைப் பாவித்து எந்த வேலையையும் செய்யக் கூடாது. இருமல் - தும்மல் அடக்க முடியா விட்டால் கையிலுள்ள ஆயுதங்களைத் தரையில் வைக்க வேண்டும் என்று சொல்லுவார். தந்தையின் சொல்லை, 'சும்மா போங்கய்யா' என்று எள்ளி நகையாடிக் கொண்டு இளைஞர் மிளகாய் வெட்டும் வேலையைத் தொடர்ந்தும் செய்தார். திடீரென்று ஒரு பெரிய தும்மல், மிளகாய் வெட்டிக் கொண்டிருந்த வலது கை இடது கை விரலை வெட்ட வலி பொறுக்காது கையிலிருந்து விழுந்த கத்தி அவர் காலையும் பதம் பார்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமல், தும்மல் வரும்போது மட்டுமல்ல, தலைவலி, மயக்கம், உடல் அசதி இருக்கும் போது ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்வதோடு, கண்ணாடியில் முகம் பார்த்தல், முகச்சவரம் செய்தல் ஆகியவற்றையும் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்பார்.

ஐம்பதுகளில் ஒரு சதம் இரண்டு சதம் போன்ற சில்லறைக் காசுகளுக்கும் பெறுமதி இருந்தது. ஒரு தடவை அப்பா பத்து ரூபா பெறுமதியான ஒரு சதம் இரண்டு சதம் அடங்கிய நாணயங்களை ஒரு சிறு அட்டைப் பெட்டியில் வைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார். 'ஏதாவது உண்டியல் உடைத்தீங்களா? என்று உறவினர் கேலி செய்த போது பள்ளிக் கூட மாணவனாக இருந்த எனக்கும் ஏதோ போலத் தெரிந்தது. ஒரு பத்து ரூபா தாள் கொண்டு வந்திருந்தால் அம்மாவும் சந்தேஷப்பட்டிருப்பா போலத் தோன்றியது. ஆனால் அப்பாவோ இதன் உண்மையான பெறுமதி பத்துரூபாவை விடப் பல மடங்கு. பெறுமதி என்பதை விடச் சில்லறையால் வரும் திருப்திக்கு அளவில்லை என்றார்.

அடுத்த நாள் தந்தையுடன் யாழ்ப்பாணத்துக்கு பஸ்சில் புறப்பட்டேன். தந்தையார் தந்த ஒரு ரூபாவை பஸ் கொண்டக்ரரிடம் கொடுத்து ஒன்றரை டிக்கட் வாங்கினேன். முழு டிக்கட் 55சதம் - அரை டிக்கட் 28 சதம். மிச்சக் காசு மிச்சக் காசு என்று பல முறை கத்தி அழாக்குறையாகக் கெஞ்சி 10 சதம் தான் கொண்டக்ரரிடமிருந்து வாங்க முடிந்தது. ஏழு சதம் கிடைக்கவேயில்லை. எனக்கோ சரியான கவலை.

'கட்டி! மூன்று சதம் சில்லறையிருந்திருந்தால் ஏழு சதத்தை இழக்க வேண்டியிருக்காது. இதைத்தான் சில்லறையின் பெறுமதி அதிகம் என்றேன். சிறு இழப்புக் கூட இல்லாவிட்டால், அது திருப்திதானே என்றார். உண்மைதான். இதனால் இப்போது கூட எப்போதும் வீட்டில் சில்லறைக் காசு வைத்திருப்பேன்.

அதனால் காலையில் பத்திரிகை, பாண் வாங்கும்போது கூட பிரச்சினையில்லை. சில்லறையில்லையென்று விற்பனையாளரிடம் பணத்தை இழக்கும் நெருக்கடியும் இல்லை.

*தில்லை நடராஜா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கட்டி!" இப்படித்தான் அப்பா என்னை அழைப்பார். அம்மாவை 'ராசா' என்று அழைப்பார். வீட்டிலும் கடையிலும் எல்லோருடனும் மரியாதையாக பழகுவார். 'எடேய்..... எடியே! வாடா...... போடா........ சொற்கள் ஊர் முழுவதும் கேட்டாலும் எங்கள் வீட்டு அகராதியில் இல்லை.

236766

கோவில் திருவிழாவில் பகல் நேரத்தில் எல்லோரையும் தன்பால் கவரும் கடை 'சர்பத் கடை', சிவப்பு, ஒரேஞ், பச்சை, மஞ்சள், ஊதா என பல வர்ணங்களில் சர்பத் கடையில் வைத்திருப்பார்கள். நிறமும் மணமும் கவரும். பாடசாலை மாணவனான நான் எப்படியோ காசை திரட்டிக் கொண்டு அடுத்தடுத்து ஒவ்வொரு நிறங்களில் சர்பத் குடிப்பதை அப்பா கவனித்து விட்டார்.

அன்பாக அழைத்து 'சர்பத் தயாரிப்பதற்கான மூலப் பொருட்கள் ஒன்றுதான். நிறத்தில் ஒன்றுமில்லை. ஏறக்குறைய எல்லாம் ஒரு வகையான சுவைதான். ஆனால் எல்லாவற்றிலும் இரசாயனப் பொருள் இருக்கும். சுத்தமான தண்ணீர் தான், தாகத்தைப் போக்கும். உடம்புக்கும் விக்கினமில்லை' என்றார்.

இன்றும் கூட பல விருந்துகளில் பல வகையான குளிர்பானங்கள் பரிமாறப்படும் போது எனக்கு விருப்பமானது "மினரல் வோட்டரே"!

1990

ஒரு தடவை அம்மாவுக்கு வருத்தம். 'நெஸ்பிறே' பால்மாவைக் கரைத்தேன். பால்மா கட்டி கட்டியாக மிதந்து கொண்டிருந்தது. அதைப் பக்குவமாகக் கரைக்க தந்தைதான் சொல்லிக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளாஸில் முதலில் சீனியைப் போட்டு பின்னர் மாவைப் போட்டு இரண்டையும் நன்கு கலக்கிய பின் சுடு தண்ணீர் ஊற்றிக் கலக்கினால் பால் கட்டிபடாது.

சுவையாக இருக்க வேண்டுமானால் இன்னொரு கிளாஸை எடுத்து சற்று உயரத்திலிருந்து மறு கிளாஸுக்கு ஊற்ற வேண்டும். இரண்டு தரம் ஊற்றி ஆற்றினால் சூடு குறைந்து சுவை பெருகுமாம். காற்றுத் தேநீருடன் சேர்ந்து விடுமாம். அதுதான் கடையில் பருகும் தேநீர் சிலவேளையில் சுவையாக இருக்கிறதோ?

சித்திரை வருடப் பிறப்பன்று இரவு சாமி கும்பிடும் அறையில் குத்து விளக்கை ஏற்றிவைத்து அப்பா அம்மாவுக்கும் எங்களுக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் கைவிசேடம் தருவார். வெற்றிலையில் நெல்மணி, மஞ்சள், தாள்காசு, சில்லறைக்காசு வைத்துத் தருவார். அம்மா மட்டும் காசோடு நெல்லு, மஞ்சள் எல்லாவற்றையும் எண்ணிப் பார்ப்பார். எண்ணும் போது உருப்படிகளின் எண்ணிக்கை ஒற்றை எண் உடையதாக இருக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்ப்பு.

நான் சிறுவனாக இருந்தபோது அம்மா கைவிசேடம் வாங்கி உருப்படிகளை எண்ணி இருபத்தியெட்டு என்று சொல்லிக் கொண்டே என்னையும் எண்ணிப் பார்க்கச் சொன்னார். நானும் எண்ணியபோது இருபத்தியெட்டு தான் இருந்தது. ஆனால் அவற்றை அப்பா வாங்கி எண்ணும் போது இருபத்தியொன்பது இருந்தது.

எனக்குத் திருமணமாகிய பின்னரும் சிலகாலம் அப்பாவிடம் கை விசேடம் வாங்கினேன். அப்போது ஒரு நாள் அம்மா உருப்படிகளை எண்ணியபோது இருபத்தியெட்டு. நானும் எண்ணினேன் - இருபத்தியெட்டு. ஆனால், அப்பா அவற்றை வாங்கி எண்ணும் போது இருபத்தொன்பது. அப்பா வெகுஇலாவகமாக விரல்களிடையே மறைத்து வைத்திருந்த ஒருநெல் மணியையும் சேர்த்து இருபத்தொன்பதாக்கியதைக் கண்டு விட்டேன்.

'என்ன செய்வது. ஒற்றை விழத்தக்கதாக இருந்தால் அதிஷ்டம் என்பது அம்மாவின் எதிர்பார்ப்பு. அவரைத் திருப்திப்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விஷயத்தில் மட்டும் அம்மாவை ஏமாற்றியிருக்கிறேன்' என்றார்.

''ஏன்! ஒரு நெல்லை சுகமாக மறைத்து விடலாம் தானே' என்றேன் - இந்த விடயத்தில் ஒரு உருப்படி குறைந்தாலும் அம்மாவின் யோசனை கூடும். கூடினால் சந்தோஷமாயிருப்பார். அதற்காக ஒரு நெல்லை விரல்களுக்கிடையே தந்திரமாக வைத்திருப்பேன்'' என்றார்.

அப்பா சாப்பாட்டுக் கடையில் சமையல் வேலை செய்தாலும் எனக்கு அத்தொழிலை பழக்கக் கூடாது என்று வற்புறுத்தி வந்தார். வீட்டுக்கு வரும் நாளிலும் சும்மா இருக்கமாட்டார். மண்வெட்டி, கோடரி, கத்தி, அலவாங்கு என்று ஏதாவது ஒரு ஆயுதத்தைப் பயன்படுத்திக் கொண்டிருப்பார்.

வேலைக்குச் சேர்ந்த பின் விடுதலையில் செல்லும் நான் வீட்டு வேலைகள் செய்யப் பின்வாங்கி வாசிப்பு, எழுத்து என்று பொழுது போக்கும் போது அப்பா சொல்லுவார் - ''பேனாவை மட்டும் பிடித்தால் போதாது. மண்வெட்டி, கோடாரியும் பிடித்துப் பழக வேண்டும். குனிந்து நிமிர்ந்து வேலை செய்யப் பழகினால் வருத்தம் வராது. வீட்டு வேலைகளை நாங்களே செய்ய வேண்டும்'' என்று சொல்லுவார்.

'கொத்தும் போதும் வெட்டும் போதும் சிந்திக்கலாம். பிறகு அந்தச் சிந்தனையை எழுதலாம்' என்பார்.

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இடையில் ஒரு போட்டி. அம்மா இறப்பதற்கு முன்பாக தான் இறக்க வேண்டும் என்பார் அப்பா. அப்பா இறப்பதற்கு முன்பாக தான் மஞ்சள் குங்குமத்துடன் போக வேண்டும் என்பார் அம்மா. அம்மா இறந்தபோது அப்பாவால் எப்படி அந்தத் துக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடிந்தது என்பது ஆச்சரியமே!

இறுதிக் கிரியைகள் - பல வேலைகள் - அந்தியேட்டிக்கான ஆயத்தங்கள். எனக்கு பெருமளவில் நண்பர்கள். எனவே சமையலுக்கு விறகுக்காக லொறியில் பெரிய மரங்களைக் கொண்டு வந்தேன்.

'கூலி ஆட்களைக் கொண்டு வந்து கொத்தக் கூடாது' அப்பாவின் உத்தரவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே கொத்தத் தொடங்கினார். எனக்கு மனம் கேட்கவில்லை.

''பணத்தை மிச்சம் பிடிப்பதற்காக கூலி ஆட்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. அம்மாவோடு வாழ்ந்த வாழ்க்கை நல்ல வாழ்க்கை. பிள்ளைகளாகிய நீங்கள் பணத்தைச் செலவழிப்பீர்கள். என்னிடம் உடல் வலு இருக்கிறது. மனம் சோர்வடையவில்லை. அம்மாவுக்கும் எனக்கும் நடந்த போட்டிகளிலெல்லாம் நானே வெற்றி பெற்றிருக்கிறேன். முதலில் யார் போவார்கள் என்ற போட்டியில் நான் தோத்துப் போயிட்டேன். ஆனபடியால் அம்மாவின் நினைவுச் சமையலுக்கு நானே விறகு கொத்துவேன்.''

அப்பாவை யாராலும் தடுக்க முடியவில்லை. ஏனென்றால் பேனா பிடிக்கும் எனக்கு மண்வெட்டியோ கோடரியோ பிடிக்கத் தெரியாது!

மூன்றாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது அப்பா வேலை செய்யும் கடைக்குச் சென்றிருந்தேன். சுமார் பத்துப் பதினைந்துபேர் ஒரு பொருளைச் சுற்றவரப் புதினம் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆவல் மிகுதியால் நானும் அவர்களுக்கிடையே நுழைந்தபோது மூன்றுபேர் புதிய மின்சார விசிறியைக் கூரையில் பொருத்திக் கொண்டிருந்தனர். மூன்று நீளமான சிறகுகள் கொண்ட அழகான விசிறியை மேசை மேல் ஏறி நின்ற இருவர் பிடித்துக் கொண்டிருக்க நிலத்திலிருந்து கூரையைத் தொட்டுக் கொண்டிருந்த ஏணியில் ஏறி நின்றவர் நீளமான குழாயை வளைந்த கொழுக்கியில் கொளுவி மின்சார வயரை இணைத்தார். சுழல ஆரம்பித்த மின்விசிறியிலிருந்து வந்த காற்றை அனுபவிப்பதற்காக காரண காரியம் இல்லாமல் அடிக்கடி மின்விசிறிக்குக் கீழே வந்தவர்களுள் நானும் ஒருவன்.

என்னைப் பொறுத்தளவில் மின்விசிறியிலிருந்து வந்த காற்று குளிராகவும் சுகமாகவும் இருந்தது. ஆனால் அப்பாவோ அக்காற்று உஷ்ணமானது எனவும் அதிக நேரம் மின்விசிறிக்குக் கீழ் நிற்பது உடலுக்குக் கூடாது எனவும் தெரிவித்ததை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சிறிது நேரம் நிற்கவே சுகமாயிருந்தால் அதன் கீழ் படுத்திருந்தால் எப்படியிருக்கும் என எண்ணிக் கற்பனைச் சுகம் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கற்பனைகேற்றவாறு அன்றிரவு அப்பா இரவு முழுவதும் கண் விழித்துக் குசினியில் வேலை செய்ய வேண்டியிருந்தது. நான் மேசைகளை மின்விசிறிக்குக் கீழே போட்டுக் கொண்டு விசிறியையும் ஆகக் கூடியளவு வேகத்தில் சுழலவிட்டேன். அதையாரும் பார்க்கக்கூடாது என்ற எண்ணத்துடன் கதவையும் யன்னலையும் இறுக்கிப் பூட்டினேன். நித்திரை என்றால் அப்படியொரு நித்திரை. காலைப்பொழுது விடிவதற்கு சற்றுமுன்பாக அப்பா எழுப்பிய போது என்னால் சரியாகக் கதைக்கக் கூட முடியவில்லை. தொண்டை கட்டியிருந்தது. கண்கள் சிவந்திருந்தது. உடம்பெல்லாம் ஒருமாதிரிக் கணகணவென்றிருந்தது. மின்விசிறியிலிருந்து சூடான காற்றுத் தான் வரும் என்பதை உணர முடிந்தது. அப்பா சொன்னார். "மின்சார விசிறி சுழலும்போது அறைக்கதவு ஜன்னல்களை முடிந்தளவுக்குத் திறந்து வைத்தால் காற்றோட்டம் சீராகி உடல் அலுப்பாவதையும் சூடாவதையும் குறைக்கும்." அதன் பின்பு மின்சார விசிறிக்குக் கீழ் இருக்கும் போது சூடான காற்றை அறையில் குறைப்பதற்காக கதவு ஜன்னல்களை நன்றாகத் திறந்து விடுவதால் முதல் நாள் ஏற்பட்ட திக்குமுக்காடல் இல்லை.

ஆச்சி சொன்ன அப்பாவின் கதை இது:-

தைப்பொங்கலன்று காலை மழை இடையிடையே மெதுவாகத் தூறிக் கொண்டிருந்தது. முதல் நாள் பெய்த மழையினால் நிலம் ஈரமாகவே இருந்தது. இருந்தாலும் முற்றத்தில் பொங்க வேண்டும் என்பதற்காக நீள வாங்கொன்றை கதிரை மேல் சாய்வாகப் போட்டு அதன் கீழ் அம்மா பொங்கிக் கொண்டிருந்தார். நிலத்தில் போத்தல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பொங்கல் இறக்குவதற்கு முன்பாக கொழுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் அம்மா வீட்டிலிருந்து கொண்டு வந்த சீன வெடிகள் சில கதிரையில்.

கிணற்றிலிருந்து தண்ணீர் குடத்துடன் பொங்குமிடம் நோக்கி வந்து கொண்டிருந்த அப்பாவின் பார்வையில் - நிலத்தில் தவழ்ந்து கொண்டிருந்த சிறு குழந்தையாகிய நான் மெதுவாக எழும்ப முயன்று எட்டி கதிரையிலிருந்த வெடியை எடுத்து நிலத்திலிருந்த போத்தல் விளக்கு நெருப்பில் வெடித்திரியைக் கொளுத்தி விட்டேனாம். யாருமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் கவனிக்கவில்லை.

ஒரே ஓட்டமாக ஓடி வந்த அப்பா என் முதுகில் ஓங்கி ஓர் அடி. ''அம்மா'' என்ற அலறலுடன் விரிந்த என் கையிலிருந்து விழுந்த வெடி வெடித்த போது தான் அம்மாவுக்கு நடந்தது தெரியுமாம். ஒரு பெரிய விபரீதம் தவிர்க்கப்பட்டது. சற்று தாமதித்திருந்தாலும் என் கையிலிருந்து தான் வெடித்திருக்குமாம். சில வேளைகளில் போத்தல் விளக்கு கூட சிதறியிருக்குமாம்.

இந்தக் கதையைத் தந்தையிடம் கேட்ட போது -

''இப்படியான சந்தர்ப்பங்களில் மற்றவர்களுக்கு கட்டளையிடாமல் உடன் செயற்பட வேண்டுமெனவும், ஏதாவது அதிர்ச்சியை ஏற்படுத்தி காரியத்தை சாதிக்க வேண்டும். சில வேளைகளில் தம்பி நல்ல பிள்ளை வெடியைக் கீழே போடு என்று சொல்ல நினைத்தால் - சொல்வதற்கு முன்பாக வெடி வெடித்து விடவும் கூடும்.'' எனவும் தெரிவித்தார்.

பாடசாலை நாட்களில் கட்டுரைகள் வாசிப்பதிலும் சொற்பொழிவுகள் கேட்பதிலும் ஆர்வம் அதிகம். அநேகமாக எல்லோரது பேச்சிலும் எழுத்திலும் திருக்குறளும் குறள் கூறும் கருத்துக்களும் முக்கிய இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தது. திருக்குறள் மாநாடுகளும் தடல்புடலாக நடந்த காலம் அது. திருக்குறளைப் பாடமாக்கினால் எழுத்தும் பேச்சும் பொருள் நிறைந்ததாக அமையும் என எண்ணினேன்.

''கட்டி வீட்டில் இருக்கிற திருக்குறள் கலண்டரில் தினமும் கலண்டர் திகதியைக் கிழிக்க முன் திருக்குறளையும் அதன் கருத்தையும் படித்துப் பாடமாக்கும். கிழித்த திகதியை அன்று முழுவதும் சட்டைப்பையில் வைத்திருந்தால் ஏதாவது மறந்துபோகும் போது திரும்ப எடுத்துப் பார்க்கலாம்,'' என்றார் அப்பா. கலண்டரில் குறள் படிக்கத் தொடங்கி தினசரிப் பத்திரிகைகள், வானொலி நிகழ்ச்சிகள் மூலமாக தனியான நேரமொதுக்காமலே பெரும்பாலான குறள் மனப்பாடம்.

எழுதுவதற்கும் பேசுவதற்கும் மட்டுமல்லாமல் இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையிலும் முகாமைத்துவம் தொடர்பாக கேட்கப் பட்ட கேள்விக்கு.'' இதனை இதனால் இவன் முடிக்கும் என குறளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கி விரிவாக எழுதி அதிக புள்ளிகள் பெற முடிந்தது.

தினம் ஒரு திருக்குறள் என ஆரம்பமாகி குறிப்பாக நேரம் ஒதுக்காமலே பல விடயங்களைப் படிக்கவும் பாடமாக்கவும் பழகிக் கொண்டேன்.

மாலை ஐந்து ஐந்தரை மணிக்கு முன்பாக இருட்டு பரவும் மழைக் காலத்தில் ஒரு நாள் அரிக்கன் லாம்பைக் கொளுத்தி வைப்பதற்காகச் சென்ற அம்மா ''ஐயோ பூரான்'' எனக் கத்தினார். தடியொன்றைத் தேடி நான் அலைந்த போது அப்பா வீடு கூட்டும் ஈர்க்கில் விளக்குமாற்றினால் அம்மாவை அலற வைத்த புலிமுகச் சிலந்தியின் கதையை முடித்து விட்டார். அது பெரிய விடயமல்ல. - சிறிது நேரத்தின் பின் வீட்டு வாசலுக்கு முன்னால் படமெடுத்தாடிக் கொண்டிருந்த பாம்புக்கு ஒரே போடு. தலை நசிந்து மெல்லிய துடிப்புடன் பாம்பின் கதையும் முடிந்தது. விஷ ஜந்துக்களைக் கொல்லுவதற்கும் சில வழிமுறைகள் இருக்குதாம் - எட்டுக்கால் பூச்சியான புலிமுகச் சிலந்தி நிலத்திலோ சுவரிலோ அல்லது மரத்திலோ தத்திப் பாய்ந்து தப்பி விடக்கூடியது. தடியால் அடிக்கும் போது கூட தந்திரமாகத் தப்பி விடக்கூடியது. சில வேளை ஒரு காலோ அல்லது இரண்டு காலோ தடிக்கு அகப்படும். பூச்சி தப்பிவிடும். ஈர்க்கிலான விளக்குமாற்றால் அமத்தி அடிப்பது சுகம்.

பாம்பை ஓட விடாமல் அடிப்பதானால் முதல் அடி தலையில் ஓங்கி அடிக்க வேண்டும். நடுப்பகுதியில் அல்லது வாலில் விழும் அடி பாம்பைக் கொல்லாது. உருளை வடிவான தடியால் பாம்பை அடிப்பதுதான் சுகமாம். வேறுவகையான தடி என்றால் கை வலிக்குமாம், விஷபாம்புகள் அதிகமுள்ள இடங்களில் பாரம் குறைந்த உடையாத உருண்டைத்தடியை எளிதாக எடுக்கக் கூடிய இடத்தில் வைத்திருக்க வேண்டுமெனச் சொல்லித் தந்தார், அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா வேலை செய்த சாப்பாட்டுக் கடைக்கு வரும் வாடிக்கை யாளர்களுள் சிறிது குடித்து விட்டு பெரிதாக மிரட்டிச் சண்டித்தனம் செய்வோரும் அடங்குவர். அப்படிப்பட்டோர் வரும் போது முதலாளியைப் பார்க்கப் பாவமாக இருக்கும். அவர்களையும் பகைக்க விரும்பாமல் வியாபாரத்தையும் கெடுக்க விரும்பாமல் சில தின்பண்டங்களையோ அல்லது சிறிது பணத்தையோ கொடுத்து அவர்களைச் சமாளிப்பதில் அப்பாவுக்கு உடன்பாடில்லை. ஒரு நாள் குடிகாரச் சண்டியனொருவன் கடையைக் கலக்கிக் கொண்டிருந்த போது திடீரொன அந்த இடத்துக்கு வந்த அப்பா அவன் கழுத்தெலும்பை இறுக அமத்திக் கொண்டு காலால் ஒரு பலமான உதை. கணப்பொழுதில் குசினிக்குள் நுழைந்து வெளியே வந்த அப்பாவின் கையில் எரிந்து கொண்டிருந்த கொள்ளிக் கட்டையைப் பார்த்ததும் அவன் வெறி முறிந்திருக்க வேண்டும். ஒரே ஓட்டம். அதன் பின்னர் யாராவது கடையில் கலாட்டா செய்யும் வேளை அப்பா அவர்களை முறைத்துப் பார்த்து விட்டு வேகமாக குசினிக்குள் நுழைவார். கலாட்டா செய்ய வருபவர் எப்படிக் கடையைவிட்டு நழுவுகின்றார் என யாருக்கும் தெரியாது.

''எப்போதும் முந்துகின்றவன் சண்டிக்காரனாக இருப்பான். வெற்றியும் கிடைக்கும். அதற்காகப் பயப்படக் கூடாது. திடீரென பெரிதாக ஏதாவது செய்து அச்சுறுத்தல் நிலையை உருவாக்கி, 'சாதுவுக்கு கோபம் வந்தால் அவ்வளவு தான்....' என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்திய பின் அமைதியாக இருந்து விட வேண்டும் என்பதும் அப்பா சொல்லித் தந்ததில் ஒன்று.

1960களின் ஆரம்பத்தில் நாட்டின் தலைவியின் படத்தையும் அவர் காலில் அணிந்து கொள்ளும் சாதாரண இறப்பர் செருப்புகளின் படத்தையும் பல தினசரி பத்திரிகைகள் பிரசுரித்து தலைவி மிக எளிமையானவர். இரண்டு ரூபா எழுபத்தைந்து சதம் பெறுமதியான செருப்பைத்தான் விரும்பி அணிகின்றார் என்ற குறிப்பையும் வெளியிட்டது. செருப்பு வாங்க அப்பா தந்த பத்து ரூபா பணத்தில் ஏழு ரூபாவுக்கு மேல் மிகுதி கொடுத்த போது அவருக்கு கோபம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''குளியலறைக்கும் படுக்கையறைக்கும் இடையே போடக்கூடிய செருப்புத்தான் இறப்பர் செருப்பு. விலை குறைவானதாயிருக்கலாம். காலுக்கு சொகுசானதாயிருக்கலாம். ஆனால் வெய்யிலுக்கோ அல்லது வெளியிடங்களுக்கோ அணிவதற்கேற்ற செருப்பல்ல. ஏனென்றால் சூட்டை உள்ளிழுத்து பின்னர் சூட்டைக் கடத்தும் தன்மை கொண்டதால் அதை வெய்யிலுக்கு அணியக் கூடாது என்றார். அதே செருப்புடன் பள்ளிக்கூடம் சென்ற போது அப்பா சொல்லியதையே ஆசிரியரும் சொன்னார். பகல்பொழுது பள்ளியிலிருந்து வீட்டுக்குச் சென்று திரும்பி வந்த போது கண்கள் சிவந்திருந்ததையும் தொண்டை கரகரத்ததையும் உணர்ந்த போது தான் அப்பாவை நினைத்துக் கொண்டேன். அவர் ஆலோசனைப்படியே ஏழு ரூபா பெறுமதியான தோல் செருப்பு நீண்ட காலம் பயன்பட்டது.

எனது அலுவலக அறைக்கு வந்து என்னுடன் உரையாடிய அதிகாரியொருவரையும் அழைத்துக் கொண்டு கணக்காளரின் அறைக்குச் செல்வதற்கு முன்பாக எனது சிற்றூழியரிடம் நான் கணக்காளரின் அறைக்குச் செல்வதாகவும் சுமார் அரைமணி நேரத்தில் திரும்பி வருவதாகவும் சொன்னேன். என்னுடன் உரையாடிய அதிகாரி ஏளனமாகச் சிரித்தார் - ''என்ன இதே கட்டிடத்தில் இருக்கிற கணக்காளரைச் சந்திக்கிறதுக்கும் பியோனின் பெர்மிஷன் தேவையா?'' ''இது அனுமதியல்ல தகவல். அலுவலகத்துக்குக் கடமைக்கு வந்த பின் வெளியே செல்லும் போது எங்கே? என்ன விடயம்? எத்தனை மணிக்கு மீண்டும் திரும்புவேன், என்ற தகவலே தவிர பியோனிடமிருந்து அனுமதியல்ல'' என்றேன்.

அதிகாரியுடன் கணக்காளரின் அறையில் அறிக்கை தயாரித்துக் கொண்டிருந்த போது ஒலித்த தொலைபேசியை எடுத்த கணக்காளர் - ''உங்களை அமைச்சர் வரட்டுமாம்'' என்று சொல்லி விட்டு, ''என்னடைய அறையில் இருப்பது எப்படி அமைச்சருக்குத் தெரியும்?'' எனக் கேட்ட போது ஐந்தாம் வகுப்பு அனுபவத்தை சொன்னேன்.

அதிகாலையிலேயே எழுந்து விடுவதால் அப்பா மாலை இரண்டு மணியிலிருந்து மூன்று மணி வரை தூங்குவது வழக்கம். அப்பா தூங்கி சில நிமிடங்களுக்குள் அங்கே கடமையாற்றிய தொழிலாளி திருவலை



10990
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தி ஆகிய உபகரணங்களை எடுத்துக் கொண்டு அவற்றைச் செப்பனிட இரும்புத் தொழிற்சாலைக்குச் செல்ல ஆயத்தமானார். சிறிது நேரத்தில் திரும்பி விடலாம் என்ற அவர் சொல்லை நம்பி நானும் அவருடன் சேர்ந்து சென்றேன். தொழிற்சாலையிலிருந்த இயந்திரங்களைப் பார்த்ததில் நேரம் போனது தெரியவில்லை. மணி ஐந்தாகி விட்டது. மூன்று மணிக்கு எழுந்த அப்பா என்னைத் தேடியிருக்கிறார். கடையிலிருந்த யாரும் சரியான பதில் சொல்லவில்லை. பொழுது போக்காக நான் செல்லும் தமிழ்ப் பண்ணை புத்தகசாலை, ஜெஸிமா படக் கடை முன்னாலுள்ள புடவைக்கடை எல்லாவற்றிலும் முதலில் தேடல். அடுத்து வின்ஸர் ராணி என படமாளிகைகளில் தேடல்.

ஐந்து மணி போல் நான் கடைக்குச் சென்றபோது எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். அப்பா வெகு சாதாரணமாக சொன்னார் ''ஆண்பிள்ளை நாலு இடத்துக்குப் போக வேணும் நாலு பேரோடு பழக வேணும். அதற்கெல்லாம் அனுமதி எடுக்க வேண்டுமென்பதில்லை ஆனால் எங்கே போகின்றேன்? எப்போது திரும்பி வருவேன் என்ற தகவலைச் சொல்லிப் போனால் யாரும் பதட்டப்படாமல் பயப்படாமல் இருப்பார்கள். நான் நித்திரையென்றால் வேறொருவரிடம் சொல்லி விட்டுப் போயிருக்கலாம். அல்லது ஒரு கடிதத்தை எழுதி வைத்திட்டுப் போயிருக்கலாம்.''

அன்று முதல் நான் போகுமிடமும் திரும்பி வரும் நேரமும் சிலருக்காவது தெரிந்திருக்கும்.

நவம்பர் மாதக் கடைசியில் வகுப்பேற்றப் பரீட்சையை அடுத்து டிசம்பரில் வரும் நீண்ட பாடசாலை விடுமுறை மகிழ்ச்சியான நாட்கள். ஆழமாகப் படிக்க வேண்டிய விடயங்கள் இருக்காது. ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள் தீபாவளி மலர்கள் மகிழ்வைத் தரும். தீபாவளியை யொட்டி வெளியான புதுப் புதுத் திரைப்படங்கள் பார்க்கலாம். இந்தியாவில் நடைபெறும் இசைவிழா வானொலி அஞ்சலும் நெஞ்சத்தை மகிழ்விக்கும்.

கடைக்கு விறகு கொத்த வரும் மாமாவின் மகன் என்னை விட உயர்ந்த வகுப்பில் படிப்பதால் மார்கழி விடுதலையில் அவரின் பாடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்களை இரவலாக வாங்கி வாசிக்க வேண்டும் என்பதும் அப்பாவின் ஏற்பாடுகளில் ஒன்று. குறிப்பிட்ட நாட்களுக்குள் அந்தப்புத்தகங்களை வாசித்து விட்டு திருப்பி கொடுக்க வேண்டுமென்பது கண்டிப்பான கட்டளை.

பல சுவையான பொழுது போக்குகளுக்கிடையே பாடப் புத்த கங்களை முழுமையாக வாசித்து முடிக்காததால் ''வாசிக்க நேரமில்லாமல் போய் விட்டது'' என்று சொல்லி முடிக்கு முன்பாக அப்பா கேட்டார் - ''நேரமில்லாததால் வாசிக்கவில்லையா?''

ஆமெனத் தலை அசைந்தது.

அடுத்த கேள்வி- ''நேற்றிரவு முதல் நாளிரவு சாப்பிட்டதா?'' - ''ஓம். சாப்பிட்டனான்'' இன்னுமொரு கேள்வி- ''நேற்றிரவு நித்திரை கொண்டதா? அதற்கு முதல் நாளிரவு நித்திரை கொண்டதா?'' எல்லாவற்றுக்கும் பலமாகத் தலையை ஆட்டினேன். அப்பா சிரித்தார் - ''கட்டிக்கு சாப்பிட நேரமிருக்கு, நித்திரை கொள்ள நேரமிருக்கு. பாடப்புத்தகம் வாசிக்க நேரமில்லை.'' ஒரு கணம் யோசித்தேன். 'நேரமில்லை' என்பது சாட்டு, நேரத்தை சரியாகப் பங்கிட்டு முன்னுரிமை அடிப்படையில் வேலைகளை நிறைவேற்றப் பழகிவிட்டால் குறுகிய நேரத்துக்குள் எவ்வளவோ காரியங்கள் செய்யக்கூடியதாயிருக்கும். 'நேரமில்லை' என்று கூறி எம்மை நாம் ஏமாற்றுகின்றோம். அல்லது வேலைகளையும் கடமைகளையும் சரிவர செய்யாமலிருக்கின்றோம்.

நத்தாருக்கும் புதுவருடத்துக்கும் இடையில் கடைகடையாக ஏறி இறங்குவோருடன் நானும் இணைந்து கொள்வேன். எல்லாம் புதுக் கலண்டர் சேகரிப்புக்காகத்தான். 'ஒரு கலண்டர் போதும்' என்பது அப்பாவின் தீர்மானம். எத்தனை கலண்டர் கிடைத்தாலும் திருப்தி தருவதாகக் காணோம். இரண்டு பெரிய காட்போட் பெட்டிகளில் நூற்றுக்கு மேற்பட்ட கலண்டர்களின் பாரம் கழுத்தை நெரித்து துன்பம் தரவும் சாதனை நிலை நாட்டுபவன் என்ற நினைப்புடன் யாழ்ப்பாண நகரிலிருந்து கிராமமான உடுப்பிட்டிக்குச் சென்றேன். ஒவ்வொரு கலண்டருக்கும் நூல் கோர்த்துக்கட்டி சுவரிலும் ஆணிகள் உள்ள இடங்களிலும் மாட்டிப் பார்த்த அழகு அதிக நாள் நிலைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரவர் உறவினர் என ஒவ்வொருவரும் அம்மாவுக்கு ஒவ்வொரு தடவையும் வேண்டுகோள் விடுக்க ஒவ்வொரு கலண்டராகக் குறைந்து சென்றது.

பெருத்த சிரமங்களுக்கு மத்தியில் ஒரேயொரு கலண்டரைக் காப்பாற்ற முடிந்தது. 'கட்டி நல்லதாக வீட்டுக்கு ஒரு கலண்டர் இருந்தால் போதும். கடை கடையாக ஏறிக் கெஞ்ச வேண்டுமா?' இது மீண்டும் மீண்டும் எதிரொலித்தது. அடுத்த வருடம் முதல் யாரிடமும் கலண்டருக்காக அலைவதில்லை

கலண்டர் தானாக வராவிட்டால் பணம் கொடுத்து ஒரு பெரிய கலண்டர் வாங்கி முன் பக்கச் சுவரில் மாட்டி விடுவேன். எந்தக் கலண்டரைப் பார்த்தாலும் அன்றைய திகதியை அறிவதில் தான் ஆர்வம் காட்டுகின்றோம். எல்லாக் கலண்டரும் ஒரே திகதியைத் தான் காட்டுகின்றது.

தங்கைக்கு பேச்சுக்கால் நடந்த போது வரன் பார்ப்பதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் வண்டி மூலம் மாங்குளம்வரை அப்பாவின் தலைமையில் சில உறவினர்களுடன் நானும் பயணித்த போது பஸ் முருகண்டிப் பிள்ளையார் ஆலயத்தருகே நிறுத்தப் பட்டது.

வழிபாடு தேநீரின் பின் அப்பா பொதுக்கழிப்பிடத்தில் சிறுநீர் கழிக்கச் சென்றார். இது ஒரு தொற்று வியாதி. ஒருவரைப் பார்த்து ஒருவர் தொடர கடைசியாக நானும்.

எதையோ அவதானித்த அப்பா ஓடி வந்து கழிப்பிடத்துக்கு பக்கத்திலிருந்த தொட்டியிலிருந்து வாளியால் தண்ணீரை அள்ளி நாங்கள் அசுத்தப்படுத்திய இடத்துக்கு மேலே ஊற்றினார். தடுத்த என்னையும் விடவில்லை.

''வீட்டில் இப்படிச் செய்தால் அம்மா அல்லது வேறு யாரும் சுத்தம் செய்வார்கள். இது பொது இடம். பாவிக்கும் நாங்கள் தான் சுத்தம் செய்ய வேண்டும். எங்களுக்கு முன் பாவித்தவர்கள் சுத்தமாக வைத்திருந்ததால்தான் நாங்கள் அருவருக்காமல் போகக் கூடியதாக இருந்தது. எல்லோரும் உம்மை மாதிரி இருந்தால் இந்த சுற்றாடலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசிங்கமாயிடும்,” அசிங்கமான இடத்தை அப்பா தண்ணீர் ஊற்றிச் சுத்தமாக்கி விட்டார்.

வெட்கத்தினாலும் வேதனையாலும் என் கண்களிலிருந்து நீர் வருவதற்கு முன்பாக அப்பா பஸ்ஸில் ஏறிக் கொண்டார்.

236766

சாப்பாட்டுக்கடையின் உட்புறமும் வெளிப்புறமும் மட்டுமல்லாமல் சுற்றுப்புறமும் துப்பரவாக வைத்திருக்க வேண்டுமென அப்பா வற்புறுத்துவார். அதனால் காலத்துக்குக் காலம் கடைத் தேவைகளுக்குப் பயன்படுத்த தண்ணீர் எடுக்கும் கிணறும் இறைத்து துப்பரவாக்கப்படும். நான் வாழ்ந்த கிராமத்தில் துலாவில் பெரிய பட்டை கட்டி நீர் இறைத்ததைப் பார்த்திருக்கின்றேன். போதியளவு இடவசதியில்லாததால் யாழ்ப்பாண நகரத்திலுள்ள கிணறுகளில் கப்பியல் (துழண்டி) கட்டி தண்ணீர் அள்ளுவார்கள். தண்ணீர் இறைக்கும் போது நான்கு பேர் பெரிய பட்டையுடன் வருவார்கள். நான்கு நீளமான கயிறுகள் பட்டையின் நான்கு புறங்களிலும் இணைக்கப்பட்டிருக்கும். கிணற்றை சுற்றி அமைந்துள்ள சீமேந்துக் கட்டில் நான்கு பேரும் நான்கு புறமாக நின்று கொண்டு நீளமான கயிற்றை மெது மெதுவாகத் தளர்த்த பட்டை கிணற்றினுள்ளே இறங்கும். பட்டையில் நீர் நிறைந்ததும் நான்கு பேரின் எட்டுக்கரங்கள் ஒரேயளவு வேகத்துடன் ஒன்றாகவும் விரைவாகவும் இயங்க கயிற்றை மேலே இழுப்பார்கள். நீர் நிரம்பிய பட்டை சீமேந்துக் கட்டருகே வந்ததும் ஒருவர் தான் நிற்கும் பக்கமாக பட்டையை மெல்லச் சரித்திழுக்க மற்ற மூவரும் கயிற்றை தளர்த்த பட்டை தானாகச் சரிந்து நீரை நிலத்தில் கொட்டும். சுமார் நானகைந்து மணி நேரம் நாலுபேரும் ‘ம்’ என்ற ஒரேயொரு எழுத்தை மட்டும் விதம் விதமாக உச்சரிப்பார்கள்.

‘ம்’- என்றால்-

கயிற்றை இளக்கலாம் - கயிற்றை இழுக்கலாம் - தண்ணீரை அள்ளலாம் - பட்டையைச் சரிக்கலாம் என்பது மட்டுமல்ல நான்கைந்து நிமிடம் ஓய்வெடுக்கலாம் - தேநீர் அருந்தலாம் - ஓய்வு போதும் - மீண்டும் இறைக்கலாம் - எல்லாவற்றுக்கும் ‘ம்’ தான் - அர்த்தம் அவர்களுக்குத்தான் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60களின் ஆரம்பம் என நினைவு.

நான் மட்டுமல்ல - இப்படி தண்ணீர் இறைப்பதை பலரும் வேடிக்கை பார்த்தார்கள். நால்வரின் கவனம் அவதானம் எல்லாம் கிணற்றிலேதான். நிதானம் சற்றுத் தவறினாலும் உயிராபத்து.

கிணற்றின் அடித்தளத்தில் உள்ள சிறிய குழிக்குப் பட்டைக்கிடங்கு எனப் பெயர். பட்டைக்கிடங்கு வரை நீர் குறைந்ததும் கயிற்றைப் பிடித்துக் கொண்டு கிணற்றுக்குள் இறங்கியவர் சாம்பிறாணிப்புகை காட்டி விட்டு மேலே வந்த பின்தான் அவர்களுக்கும் முதலாளிக்குமிடையில் தகராறு-

நால்வரும் ஆளுக்குப் பத்து ரூபாவாக நாற்பது ரூபா சம்பளம் கேட்டனர். முப்பது ரூபாவுக்கு மேலே கொடுக்க முதலாளிக்கு விருப்ப மில்லை.

நால்வரும் அப்பாவிடம் மனவருத்தம் தெரிவித்தனர். ஒருவரின் கண் கலங்கியதையும் அப்பா கவனிக்கத் தவறவில்லை.

''வெய்யிலில் நின்று வேலை செய்த போது அவர்கள் வியர்வை யோடை இரத்தத்தையும் சிந்தித்தான் உழைத்திருக்கிறாங்கள். உழைப்புக்கு ஏற்ற காசு குடுக்காட்டி அவங்கட கண் கலங்கும். இரத்தம் மட்டுமல்ல வியர்வை கண்ணீர் எல்லாம் சக்தியுள்ளவை. எனக்குத்தாற சம்பளத்திலை பத்து ரூபா குறையுங்கோ. இப்ப நாற்பது ரூபா குடுங்கோ'' அப்பாவின் வேண்டு கோள் நியாயமானது.

அப்போது அப்பாவுக்கு மாதச் சம்பளம் நூறு ரூபா தான். தொழிலாளிகளுக்காக இன்னொரு தொழிலாளி தன் உழைப்பைக் கொடுக்க முதலாளி விரும்பாததாலோ என்னவோ தகராறு சுமுகமாகத் தீர்க்ககப்பட்டது

ஞாயிற்றுக்கிழமை விருந்தினனாக எனது நிலையொத்த அதிகாரி வீட்டுக்குச் சென்ற போது வீட்டு வேலைக்கு வந்திருந்த தொழிலாளிக்கும் நண்பருக்குமிடையே இப்படியொரு தகராறு. அப்பாவின் கதையைச் சொன்னேன். தொழிலாளிக்கு நியாயமான கூலி கிடைத்தது. விருந்தை விட நட்பை விட கடமையைச் செய்த திருப்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலத்தில் தேர்தல் என்றாலே பெரிய திருவிழாதான். தினமும் மாலையில் யாழ்.முற்றவெளியில் வேட்பாளர்களுக்கு ஆதரவான அரசியல் பிரசாரக் கூட்டங்கள் - செல்வாக்கைத் தேடவும் வெளிப்படுத்தவும் அலங்கார ஊர்வலங்கள் - பலர் புடை சூழ வேட்பாளர்களே வீட்டுக்கு வீடு வாக்கு வேட்டையாட வருவார்கள். வீதியலங்காரம் பூரண கும்பங்கள் - மாலை மரியாதை பந்தம் பிடிப்போர் ஒன்றுக்கும் குறைவிருக்காது.

பிரபல அரசியல்வாதியொருவர் கடைக்கு முன்னாலுள்ள வீதி வழியாக வருவதாக செய்தியறிந்து ஏறக்குறைய எல்லோரும் வீதிக்கு விரைந்தனர். அரசியல்வாதியைப் பார்க்கும் ஆசையினால் நானும் கடை முகப்புக்குச் சென்றேன். அரசியல்வாதி ஆறுதலாக ஒவ்வொரு கடை கடையாக ஏறி இறங்க பொறுமையிழந்த வானம் கறுக்க மழை தூறத் தொடங்கியது. இறுதியாக கடைவாசலுக்கு வந்த அரசியல்வாதி கையில் வைத்திருந்த வாக்காளர் பட்டியலை எடுத்து அப்பாவின் பெயரை வாசித்து அவரைத் தேடிக் கொண்டு கடைக்குள் குசினி வரை வந்து விட்டார். அப்போது சமையல் வேலையோடிருந்த அப்பா விரைவாக வெளியே வந்து விறகையும் ஏனைய பொருட்களையும் உள்ளே கொண்டு சென்று பத்திரப்படுத்துவதை அரசியல்வாதி கவனிக்காது விட்டாலும் முதலாளி கவனித்து விட்டார். ''தேர்தல் காலங்களில்தான் அரசியல்வாதிகள் எங்களைத் தேடுவார்கள். பிறகு நாங்கள் எப்படித் தேடினாலும் அவர்கள் அகப்படமாட்டார்கள்'' என்றார் அப்பா. ''நெஞ் சுரம் கூடியவர்'' என முதலாளி பாராட்டிய போது மற்றவர்கள் மழையில் நனைந்த பொருட்களை முதலாளியின் பார்வையிலிருந்து மறைக்க முயன்று கொண்டிருந்தனர். நான் அரசாங்க ஊழியன் அரசியல்வாதிகள் பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. அப்பாவுக்குக் கிடைத்த பாராட்டு போல எனக்கும் கிடைக்க வேண்டும் என எதிர்பார்ப்பது நியாயம் தானே!

பாடசாலை நாட்களிலிருந்து கலைகளில் விருப்பம். இளைஞனாக மேடை நிகழ்ச்சிகளை தொகுத்து அறிவிப்பு செய்த காலத்தில் சொந்த ஊரில் பெற்றோர் முன்னிலையில் நிகழ்ச்சி வழங்கிய போது ஒரு வித்தியாசமான அறிவிப்பு:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடைக்குப் பின்னால் 'ம்...' என ஹமிங் குரலில் ஒரு பெண்ணின் பாடல் ஆரம்பமாகும் போது மேடையில் எனது அறிவிப்பு:- ''மேடைக் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள பல இடங்களுக்குச் சென்றிருக் கின்றேன். ஒரு முறை இசை நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்க மட்டக்களப்பு சென்றிருந்த போது அற்புதமான பாடகியின் அறிமுகம் கிடைத்தது. அன்று முதல் நான் தோன்றும் மேடைகளில் அவளும் தோன்றுகின்றாள். அவளை என் உறவினருக்கும் ஊராருக்கும் அறிமுகம் செய்து வைக்கின்றேன். இன்று அவள் பாடும் முதல் பாடல்-

**நான் உன்னைத் தேடுகின்றேன்-**
**நாள் தோறும் பாடுகின்றேன்-**
**நீ போகும் பாதையெல்லாம் நிழலாக ஓடுகின்றேன்''**

வாலிப வயதிலிருந்த என் அறிவிப்பும் மேடையின் உள்ளிருந்து ஒலித்த பெண் குரலும் சபையில் சலசலப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்தியது. ஒலித்த குரலுக்குரிய உருவம் மேடையில் வந்த போது சபை ஆச்சரியத்தில் ஆழ்ந்தது. பெண் குரலில் பாடியவர் இரு குரலிசை மன்னன் என புகழ் பெற்ற லோரன்ஸ். அந்த நாட்களில் ஆண் ஒருவர் பெண் குரலிலும் ஆண் குரலிலும் மாறி மாறிப்பாடுவது ஆச்சரியம். அன்றைய நிகழ்ச்சியைப் பற்றி மற்றவர்கள் மட்டும் கதைக்கவில்லை-

இரவு சாப்பிட்ட பின்னர் அம்மா ஆரம்பித்த கதைக்கு அப்பா குரலை உயர்த்திக் கொண்டு அடுத்த அறையிலிந்த எனக்கும் கேட்க வேண்டும் என்பதற்காகச் சொன்னது:- ''மகன் எழுதட்டும் - பேசட்டும் - நடிக்கட்டும் - ஆனால் ஒரு பெம்பிளைப் பிள்ளையைத் தொட்டிட்டான் எண்டால் அது என்ன சாதி சமயமோ குருடோ சொத்தியோ அது எங்கடை பிள்ளை மாதிரி. இவன் மாட்டன் எண்டாலும் நாங்கள் இவரைக் கலியாணம் கட்ட வைப்பம்.'' அப்பாவும் அம்மாவும் கருத்தொரு மித்தவர்கள் என்பதால் நான் வாலிபனாக இருந்த காலத்திலும் வனிதையர் விடயத்தில் கவனமாகவே இருந்தேன்.

இது அப்பா கையாண்ட ஓர் உத்தி என எண்ணுகின்றேன். இப்போது கூட சில விடயங்களை நேரில் எப்படிச் சொல்வது என்று தயக்கம் ஏற் படும்போது, சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தோ அல்லது சந்தர்ப்பத்தை வரவழைத்தோ சொல்ல வேண்டியவற்றை நாசூக்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சொல்லி விடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50களின் ஆரம்பமாக இருக்க வேண்டும். இந்தியாவிலிருந்து வந்த கமலா சர்க்கஸ் குழு யாழ். முற்றவெளியில் முகாமிட்டு மக்களை மகிழ்வித்த காலம். எல்லாத் தொழிலாளிகளும் சர்க்கஸ் பார்க்கச் சென்ற போது அப்பா என்னையும் கூட்டிச் சென்றார் இரவு ஒன்பது மணிக்கு முற்றவெளியிலிருந்து திரும்பிய போது இளம் தொழிலாளி யொருவன் வீதியில் கரண மடித்தும் கைகளைத் தரையில் ஊன்றி தலைகீழாக நடந்தும் வித்தை காட்டிக் கொண்டு வந்தான். சில சகபாடிகள் பாராட்டிய போதும் அப்பா அவனை ஏசினார். ''சர்க்கஸ் இருக்கட்டும். முதலிலை செய்யிற வேலையை ஒழுங்காகப் பழகி அதைச் சரியாகச் செய்யப் பார். சர்க்கஸ் வேலை விருப்பமெண்டால் சர்க்கஸ் கம்பனியில் சேர வேண்டும்'' அப்பாவின் கருத்தை சில இளம் தொழிலாளிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. இராமசாமி கரண மடித்ததை ஊக்குவித்தார்கள். கடைக்கு வந்த இராமசாமி வழமை போல கிணற்றடியில் கழிவு நீர் வடிந்தோடுவதற்காக அமைக்கப்பட்ட கால்வாய் அருகே பாத்திரங்களைக் கழுவ ஆரம்பித்த போது சர்க்கஸ் நினைவுகள் வந்திருக்க வேண்டும்.

கறண்டிகளை எறிவதும் ஏந்துவதுமாக வித்தை காண்பித்தான். சர்க்கஸ்காரன் ஒருவன் ஆறு கறண்டிகளை தொடர்ச்சியாக ஒவ்வொன் றாக எறிந்து பின்னர் அவற்றை ஏந்துவதைப் பார்த்து 'என்ன மாதிரி நிலத்தில் ஒரு கரண்டியும் விழாமல் சுழண்டு வந்து கொண்டிருந்தது' என்று ஆச்சரியப்பட்ட இராமசாமியும் அப்படிச் செய்ய ஆரம்பித்த போது இரண்டு கறண்டிகள் கழிவு நீர் வழிந்தோடும் கால்வாயில் விழுந்து விட்டது.

இராமசாமி அந்த இரண்டு கறண்டிகளையும் எடுக்க முயன்ற போது அப்பா தடுத்தார். ''இது சாப்பாட்டுக்கடை. கானுக்குள்ளை விழந்த கறண்டியை எடுத்து சாப்பாட்டிலை வைக்க நான் விடமாட்டன். முதலாளியட்ட சொல்லி இராமசாமியின்ர கணக்கிலை எழுதிப்போட்டு இரண்டு கறண்டி வாங்க வேண்டும்'' என்றார். இராமசாமி கோபத்துடன் ''சரி சரி பாக்கிறன்'' என்று கடைக்கு வெளியே செல்ல வேறும் சிலர் அவனைப் பின் தொடர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையான வேலைகளை முடித்துக் கொண்டு அப்பா தினசரிப் பத்திரிகைகளைப் புரட்ட நான் நித்திரையாகி விட்டேன். இரவு சுமார் பதினொரு மணியிருக்கும். கடையில் வேலை செய்யும் இரண்டு பேர் ஓடி வந்து அப்பாவுக்கு ஏதோ சொன்னதும் - அப்பா கடைக்கு வெளியே ஓடினதும் கனவு போலிருந்தது. சில நிமிடங்களின் பின்தான் அது கனவல்ல என்று உணர்ந்ததும் நானும் கடைக்கு வெளியே வேகமாகச் சென்றேன். இராமசாமி கையிலும் காலிலும் சிராயப்புக் காயங்களுடன் றோட்டில் விழுந்து கிடந்தான். கடைத்தொழிலாளிகள் அவனைச் சுற்றி நின்றனர். அருகில் ஒரு சைக்கிள் வண்டியும் நிலத்தில் கிடந்தது.

''ஐயா - பக்கத்துக்கடை முத்தையாவின் சைக்கிளை வாங்கி சேர்க்கஸிலை சைக்கிள் ஓடின மாதிரி சைக்கிள் ஹான்டிலை மேலை தூக்கிக் கொண்டு ஒரு சில்லிலை ஓடிக்காட்டின போது விழுந்திட்டான்.'' ''சரியாக நோகுதாம்.'' ''இவனுக்கேன் இந்த வேலை...'' - ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதை.

அந்த நாட்கள் வாடகைக்காரான 'ரக்ஸி' முச்சக்கர வண்டியான 'ஓட்டோ' இல்லாத காலம். அப்பா எங்கோ சென்று ஒரு 'றிக்ஷோ' வண்டியைக் கொண்டு வந்து இராமசாமியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்.

''சின்னக்காயம் தான். இரண்டொரு நாளிலை சுகமாயிடும்'' என்றார் அப்பா.

''பாவிப் பயல் - செத்திருப்பான் தப்பிட்டான்'' என்று கணக்கப்பிள்ளை அப்பாவைப் பார்த்தார்.

இரவு நேரத்தில் றோட்டிலை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற லொறிச் சில்லுக்குக் கீழே நெஞ்சில் ஒரு தகரத்தை வைத்துக் கொண்டு படுத்திருந்து சர்க்கஸில் லொறியை நெஞ்சுக்கு மேலே ஏற்றி சாகசம் செய்த சர்க்கஸ்காரன் போலவும் ஒரு காட்சி காண்பிக்க எண்ணியிருந்தானாம். சைக்கிளிலிருந்து விழுந்ததால் அந்த சாகசத்தைக் கைவிட்டு விட்டானாம்.

''அடே முட்டாப்பயலே...'' அப்பா அப்படிச் சத்தம் போட்டதை நான் ஒரு போதும் பார்த்ததில்லை. ''ஒரு தொழிலைத் தெய்வமாக மதிச்சு முழுசாகப் பழகி அதைச் சரியாகச் செய்ய வேணும். மற்றவன் செய்யிறதைக் கண்ட உடனை மடையன் மாதிரி செய்யக்கூடாது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமசாமியின் சோகமான முகத்திலும் ஒரு சிரிப்பு இழையோடியது - ''இனிமே சேர்க்கஸ் பற்றி நினைக்க மாட்டன்''

ஒரு நாள் அம்மாவுடன் செருப்பு வாங்குவதற்காக செம்மா தெருவுக்கு சென்ற போது தீடீரெனப் பெய்ய ஆரம்பித்த மழை பெரு மழையாக மாறி காங்கேசன்துறை வீதியில் கானையும் மேவி வெள்ளம் பாயு மளவுக்குப் பொழிந்த பின்தான் வேகம் குறைந்தது.

அம்மா தடுத்ததையும் கேளாமல் நான் புதுச்செருப்பையும் போட்டுக் கொண்டு வெள்ளத்தில் 'தொக்கு தொக்கு' என்று சந்தோஷத்துடன் நடந்து வந்தேன். அம்மா காலிலிருந்த பழைய செருப்புகளை கையில் சுமந்தபடி தண்ணீர் மேவிப்பாயும் தெருவில் மெதுவாக நடந்து வந்தார். முட்டாசுக் கடைச் சந்தியைத் தாண்டி சிறிது தூரம் நடந்திருப்பார். 'ஸ்... அம்மா' அவலமாகக் கத்திக்கொண்டே குனிந்து காலைப் பிடித்துக் கொண்டார். காரணம் புரியாமல் கலங்கி நானும் அம்மா என்றேன்.

எங்கள் வருகையை எதிர்பார்த்து கடை வாசலில் காத்து நின்ற அப்பா ஓடி வந்து அம்மாவைக் கைத்தாங்கலாக கடைக்கு அழைத்துச் சென்றார்.

அம்மாவின் உள்ளங்காலில் ஒரு சிறிய கூரிய ஆணி குத்தி விட்டது. அம்மாவின் காலிலிருந்து ஆணியை அப்பா இழுத்துப் பிடுங்கிய போது அம்மாவின் பயங்கரக் கத்தலைக் கேட்க பரிதாபமாக இருந்தது.

எனது தோளுக்கு மேலாக தவழ்ந்த அப்பாவின் கை கழுத்தை சுற்றி வளைக்க உச்சியில் ஒரு முத்தம் ''கட்டி கெட்டிக்காரன் - வெள்ளத்திலை நடக்கிற போது கட்டாயம் காலுக்குச் செருப்பு போட வேணும். தண்ணியிலை நனைஞ்ச கால் மெதுவாக வந்து வாழைப்பழம் மாதிரி இருக்கும். முள்ளு ஊசி டக் கெண்டு ஏறினால் முழுதும் காலுக்குள்ள போயிடும். எடுக்க முடியாது''.

முன்பும் ஒரு முறை அப்பா சொன்னதைக் கேட்காததால் முள்ளு குத்தி வேதனைப்பட்டதை அம்மா நினைவு படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு 41 வயது பூர்த்தியாகி 42 வயது ஆரம்பமான வேளை. வேலை முடிந்து மாலை வேளை வீடு சென்றதும் தலையிடி ஆரம்பமாகி விடும். மாத்திரைகளில் ஆரம்பித்து தைலம் பூசுவது வரை எல்லாம் செய்து பார்த்து விட்டேன். காலையில் எல்லாம் சரியாக இருக்கும். மூன்று நான்கு நாட்கள் என்னை அவதானித்த அப்பாவை வருத்தத்துடன் பார்த்தேன்.

''பின்னேரம் ஆனவுடன் பயங்கரமாகத் தலை வலிக்கிறது. பெரிய எழுத்துக்களைக் கூட வாசிக்க முடியாது. ஓரே எரிச்சலாக வருகிறது.''

அப்பா வலு சிம்பிளாகச் சொன்னார்:- ''நல்ல கண் டாக்டரிடம் கண்ணைக் காட்டிச் சோதிக்க வேண்டும்'' என்றார்.

கண் டாக்டரின் சோதனையைத் தொடர்ந்து மூக்குக் கண்ணாடி முகத்தில் ஏறியது.

அதற்குப் பின் இரவு பதினொரு மணி வரை மிகச் சிறிய எழுத்துக் களையும் வாசிக்கலாம். ஏனென்றால் தலைவலி வருவதில்லை. எல்லாத் தலைவலிக்கும் மாத்திரையும் தைலமும் மருந்தாகி விடாது. அத்துடன் அப்பா நிறுத்தி விடவில்லை. இரண்டு மூன்று வருடத்துக்கு ஒரு தடவை தலைவலி கண்வலி வந்தால் மாத்திரைகளை நம்பாமல் டாக்டரைச் சந்திக்க வேண்டுமென்றார்.

எண்பது வயதைக் கடந்த நிலையிலும் அப்பா மிகவும் திடகாத்திர மாக இருந்ததோடு எல்லா வேலைகளையும் தானாகவே செய்வார். சிலவேளைகளில் மதிய உணவுக்குப் பின் ஒரு மணி நேர பகல் தூக்கம். பெரும்பாலும் வீட்டு வேலைகளை வெகு நேர்த்தியாகச் செய்வார். மற்ற வேளைகளில் விறாந்தையில் சாய்மனைக் கதிரையில் அமர விரும்பாமல் ஒரு சாதாரணக் கதிரையில் நிமிர்ந்திருப்பார். அவருடன் நன்கு பழக்கமில்லாதவர்கள் வந்தால் மெதுவாக எழுந்து ஓர் அறையில் ஒதுங்கிக் கொள்வார்.

நல்ல மழை காலமானாலும் தினமும் குளிப்பார். வீட்டில் இருக்கும் போது கட்டும் வேட்டியானாலும் சுத்தமான வேட்டியாக இருக்கும் படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக் கொள்வார். நெருங்கிய உறவினர் அயலவர் வீட்டுக்குக் கூட மிக மிக அவசியமெனக் கருதி அரைமணி நேரம் சென்று வருவதானாலும் ''அம்மாடி போயிட்டு வரட்டுமா'' என்று தங்கையின் அனுமதி கேட்பார்.

தங்கையிடம் அனுமதி கேட்பது எனக்குப் பிடிக்காததால் நேரடியாகக் கேட்டேன். அப்பா சிரித்தார்- ''பிள்ளைகளுக்கு வயது வந்து விட்டால் அவர்கள் பெரியவர்கள். சாப்பாடோ போக்குவரத்தோ - பிறருடன் கதைப்பதோ கதைக்காமல் விடுவதோ எல்லா விடயங்களிலும் பிள்ளைகள் மனம் கோணாமல் நடக்க வேண்டும். பிள்ளையளுக்குப் பிடிக்காததை செய்யக் கூடாது''.

உடுப்பிட்டி அ.மி.கல்லூரி மாணவனான என் வயது 15. மாணவர்களுக்காக 'மாணவன்' என்ற சஞ்சிகையை அச்சிட்டு வெளியிடும் நோக்கத்தோடு சிறிது சிறிதாக சேமித்த சுமார் 300 ரூபா பணத்தோடு யாழ். நாவலர் அச்சகத்தில் வேலைகளை ஆரம்பித்தேன். அப்பாவுக்குத் தெரியாமல் அச்சிட விரும்பியது. யாழ்.நகர பஸ் தரிப்பிடத்துக்கு வராமல் ஆனைப்பந்தி சந்தியில் இறங்கி நாவலர் அச்சகம் போய் வரக்கூடிய வசதி - குறைந்த அச்சுக்கட்டணம் - இதனால் நாவலர் அச்சகத்தைத் தெரிவு செய்தேன். 1962ம் ஆண்டு 115 ரூபா கொடுத்து 1000 மாணவன் பிரதிகளை அச்சிட்டேன். பிரதியொன்றின் விலை 15 சதம். வீட்டில் மூடி வைத்த இரகசியம் பாடசாலை மட்டத்தில் பரகசியமாகி - சஞ்சிகைக்கு ஆசிரியனான கதை தங்கையால் வீட்டுக்குத் தெரிய வர அப்பாவும் பணம் கொடுத்து மாணவன் வாங்கிப் படித்து விட்டு என்னிடத்தில் பல கேள்விகள்-

''அப்பாவின் பெயரைச் சொல்லி ஒரு விளம்பரமும் எடுக்க முடிந்ததால் ஒரு பிரதி அச்சிட 10 சதம் செலவு. 12 சதப்படி கடைகளுக்கு விற்கலாம். முதலாவது இதழ் விற்பனைக்காக கடைகளுக்குக் கொடுத்துள்ளேன். இரண்டாவது இதழ் அச்சு வேலைகள் நடக்கிறது. முதலாம் இதழ் விற்பனைக் காசில் மூன்றாம் இதழ் அச்சடிக்கலாம். இரண்டாம் இதழ் விற்பனைக் காசில் நாலாம் இதழ்...'' என் கதையை நிறுத்தியது அப்பாவின் அர்த்தம் நிறைந்த சிரிப்பு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எந்த விஷயத்தையும் ஆரம்பிக்க ஒரு தெளிவான நோக்கம் இருக்க வேணும். என்ன இலக்குகள் என்பது தீர்மானிக்கப்பட வேணும் - காசும் மற்ற விஷயங்களும் போதியளவு இருக்குதா? எல்லாம் செய்யிறது சாத்தியப்படுமா? பலன்களும் இலாபமும் வருமா? எல்லாம் கவனிக்கா விட்டால் அரைகுறையிலை அம்போ'' என்றார்.

இரண்டாவது 'மாணவன்' இதழே இறுதி இதழானது. முன்னூறு ரூபா புத்தக வெளியீட்டில் மூழ்கியது. புதிதாக ஏதாவது செய்ய முனையும் போது - அப்பா சொல்லிய அரைகுறையிலை அம்போ அடிக்கடி மனதில் தோன்றி பலவாறும் சிந்திக்க வைக்கும். அதனால் நல்ல தீர்வுகளைப் பெறாத சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுப்பதில்லை.

நிர்வாக சேவை அதிகாரியாக வந்தபின் இலங்கையிலும் வெளி நாடுகளிலும் கலந்து கொண்ட பயிற்சி நெறிகளில் ஆங்கிலத்தில் படித்ததை அப்பாவின் அம்போ புத்திமதியுடன் ஒப்பிடவேண்டி ஏற்பட்டது. ஆங்கிலத்தில் படித்தவை-

PURPOSE - TARGET - GOALS - FEASIBILITY REPORT - BENEFIT - RETURN

அப்பா மட்டுமல்ல - முகாமைத்துவ - நிர்வாக நுட்பம் தெரிந்த பலர் சாதாரணமாக வாழ்வதால் நாங்கள் அவர்களைக் கணக்கில் எடுப்பதில்லை.

யாழ். தமிழ்ப்பண்ணை புத்தகசாலைக்கு அண்மையில் அப்பா வேலை செய்த கடை அமைந்திருந்ததாலும் முதலாளி அப்பாவின் நண்பர் என்பதாலும் என் விருப்பம் போல புத்தககங்களை எடுத்துப் படிக்கலாம். 12 வயது மாணவனாக இருந்த போது மர்ம நாவல்களையும் சினிமா தொடர்பான நூல்களையும் சுவாரஸ்யமாக வாசிப்பேன். ஒரு நாளில் சாதாரணமாக ஆறு புத்தககங்களை வாசித்து முடித்து விடுவேன். இந்த விடயம் அப்பாவுக்கும் தெரியும். சுமார் ஒரு வருடத்துக்குப் பிறகு அத்தகைய வாசிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கச் சொன்னார்:-

''சின்னக்குழந்தை நடக்கிறதுக்கு முதல் நடைவண்டியைக் கொடுத்து நடை பழக்கிறம் - ஓரளவுக்கு வந்தால் நடைவண்டி இல்லாமல் நடக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணும். வாசிக்கிறதில்லை ஒரு விருப்பத்தை ஏற்படுத்திறதுக்காக துப்பறியும் நாவலும் பேசும் படமும் வாசித்தது போதும். விரைவாக வாசிக்கப் பழகியாச்சு. இனி நல்ல எழுத்தாளர் யார்? நல்ல புத்தகம் என்ன? எல்லாம் தேடி வாசிக்கப் பழக வேணும் - இவ்வளவு நாளும் வாசித்த மர்ம நாவலும் சினிமாவும் ஒண்டுக்குமே பயன்படாது. இது நூறு புத்தகம் வாசிக்கிறதை விட சும்மா ஒரு சின்னப் புத்தகம் வாசித்தாலும் வாழ்க்கைக்கும் சோதனைக்கும் பயன்பட வேணும்."

அப்பா சில நாட்களாக சில நூல்களைத் தெரிந்து வாசிக்க வழி காட்டினார். பின்னர் நடைவண்டி இல்லாமல் நடப்பது போலவே அப்பா இல்லாமல் புத்தகத் தெரிவு வாசிப்பு. நல்லதைத்தான் தேடி வாசிக்கின்றேன். ஆரம்பத்தில் சிறிது விட்டுப்பிடித்த அப்பா தருணமறிந்து நிறுத்தி சரியான வழியைக் காட்டி தொடர வைத்திருக்கிறார்.

நல்லவற்றைத் தேடி வாசிக்க வழிகாட்டியவர் எழுதவும் தூண்டி விட்டார். 1961 டிசம்பர் விடுமுறை ஆரம்பமானதும் தைப்பொங்கலைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி ஈழநாடு காரியாலயத்தில் கொடுக்கும்படி சொன்னார். பல முறை சொன்ன பின் வெட்டி வெட்டி திருத்தி எழுதிக் கொண்டு ஈழநாடு அலுவலகத்துக்கு ஜனவரி முதல் வாரம் சென்று கட்டுரையைக் கொடுத்த போது - Too late எங்கடை பொங்கல் முடிஞ்சு போச்சு என்று சொல்லிக் கொண்டு அச்சு இயந்திரங்கள் இருந்த பகுதிக்கு கூட்டிச் சென்று காட்டினார்கள். ஈழநாடு என்னைப் பார்த்துச் சிரித்தது. அதற்குப் பின்தான் பத்திரிகையின் சில பகுதிகள் பல நாட்களுக்கே முன் தயாராகும் இரகசியத்தைத் தெரிந்து கொண்டேன்.

அப்பாவுடன் வேலை செய்த ஏனைய தொழிலாளிகளுக்கும் அப்பாவுக்குமிடையே கௌரவமான நட்புறவு நிலவியது. யாரையும் கடமைப்படுத்தாத வகையில் தனது நடவடிக்கைகளை கவனித்துக் கொள்வார். நான் சிறியவனாக இருந்த காலத்திலேயே யாரிடமிருந்தும் சிறிய தின்பண்டங்கள் விளையாட்டுப் பொருட்கள் உடுப்பு போன்றவை கூட அன்பளிப்பு என வாங்காமல் இருப்பதைக் கவனிததுக் கொள்வார். அப்பா பத்திரிகை வானொலி வாயிலாக தகவல்கள் சேகரிக்கும் போது திரைப்படங்கள் சினிமாக் கலைஞர்கள் பற்றிய தகவல்களும் சேர்ந்துவிடும். ஆனால் அவர் சினிமா பார்க்கப் போனதில்லை. சக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளிகள் அனுமதியுடன் சிறிய வகுப்புகளில் நான் படித்த போது என்னையும் அழைத்துச் செல்லும் போது மாத்திரம் அவர்கள் வாங்கித் தரும் குளிர்பானங்களைக் குடிப்பேன். டொபி கடலை போன்றவற்றை சாப்பிடுவேன். படம் பார்க்க கிளம்புவதற்கு முன்பாக டிக்கட் காசை மிகத் தந்திரமாக கூட்டிக் கொண்டு போகும் தொழிலாளியின் கையில் திணித்து விடுவார். திரைப்பட மாளிகைகளில் பாட்டுப் புத்தகங்களும் சினிமா நடிகர்களின் படங்களும் விற்கப்படும். பாட்டுப் புத்தகங்களை விட சினிமா நடிகர்களின் படங்கள் தான் என்னைக் கவர்ந்தன. என்னைக் கவர்ந்த படங்களையும் படம் பார்ப்பதற்கு அழைத்துச் சென்ற மாமாவையும் மாறி மாறிப் பார்த்தேன். பார்வையின் அர்த்தம் புரிந்த மாமா என்னை ஏமாற்ற விரும்பவிலலை.

''மாப்பிளை (கடையில் வேலை செய்வோர் மட்டுமல்ல வேறு வேலைகளுக்கு வருவோரையும் மாமா என்றழைக்க அப்பா பழக்கியிருந்தார். அவர்கள் என்னை மாப்பிள்ளை - மருமகன் என கூப்பிடுவார்கள்) உங்களுக்கு இந்த மாதிரி படங்கள் வாங்கிக் கொடுத்தா நம்ம வேலை இல்லாமப் போயிடும்'' என்றவர் முன்பு நடந்த சம்பவங்களை விளக்கிச் சொன்னார்:-

'கடையின் சுவர்களில் தெய்வப் படங்களும் வள்ளுவர் பாரதியார் போன்ற அறிஞர்களின் படம் மாத்திரமே இடம் பெறுவதற்கு அப்பா தான் காரணமாம் - சினிமா நடிகர்கள் அரசியல்வாதிகளின் படங்களோடு வரும் கலண்டர்களைக் கூட கடையில் மாட்டுவதற்கு முதலாளி சம்மதிக் காததற்குக் காரணம் - அப்பாவின் கண்டிப்பான வேண்டுகோளே' யாழ்.வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய சஞ்சிகையொன்றிலும் கடைக்கு சிறப்பு தரும் படங்கள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை இடம் பெற்றிருந்ததை வாசித்த நினைவும் இருக்கிறது.

''யாரோடு எந்தளவுக்குச் சேரலாம்? யாரோடு சேரக்கூடாது? எங்கே எப்படி நழுவ வேண்டும்? என்பதெல்லாம் மட்டுமல்ல - நான் வேலைக்குச் சேரும் வரை என்னோடு சேர்ந்து பழகுபவர்கள் எனது நடவடிக்கைகள் ஆகியவற்றை தந்தை கண்காணித்துக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாட்களில் வருடத்தின் இரண்டாவது காலாண்டுக் காலத்தில் 'தினகரன்' பத்திரிகையின் ஆதரவில் யாழ்ப்பாணத்தில் மாபெரும் சைக்கிளோட்டப் போட்டிகளுடன் கூடிய விளையாட்டு விழா நடைபெறும். சைக்கிளோட்ட வீரர்களை உற்சாகப்படுத்த பார்வையாளர்கள் தண்ணீரை வாளியோடு ஊற்றுவார்கள். கடையில் வேலை செய்த இளவட்டங்கள் சில ஒன்று சேர்ந்து குறும்பு வேலைக்குத் திட்டமிட்டு ஒரு வாளியையும் கொண்டு சமையலறைக்குள் புகுந்து வெளியேறியதை அப்பாவின் கழுகுக் கண்கள் கவனித்து விட்டன. சமையலறையிலிருந்து இளவட்டங்களைப் பின் தொடர்ந்த அப்பாவின் கைகளில் பெரிய வாளியொன்றில் நிரம்பியிருந்த நீரிலிருந்து ஆவி பறந்து கொண்டிருந்தது.

விரைந்து வந்து கொண்டிருந்த வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த ஒலி பெருக்கியின் அறிவிப்பு-

'சைக்கிளோட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் பெண் வீராங் கனைகள் வேகமாக வருகின்றனர்.'

இளவட்டங்களிலொன்று தண்ணீர் நிரம்பிய வாளியைத் தூக்க மற்ற இளவட்டங்கள் வேடிக்கை பார்க்க முண்டியடித்தன. அப்பாவும் பெரிய வாளியைத் தூக்கினார். அவர் கண்கள் சிவந்திருந்தன-

"அடே! தண்ணியைக் கொட்டிட்டு உள்ள போ - இல்லே இந்த வாளியில இருக்கிற தண்ணியை உன் தலையில ஊத்துவன்"

இளவட்டத்தின் கையிலிருந்த வாளி கீழே விழ வாளியிலிருந்த கொதி நீர் நிலமெங்கும் சிதறியது. சைக்கிளோட்டப் போட்டியில் கலந்து கொண்ட பெண்களுக்கு சுடுதண்ணீர் ஊற்ற முயன்ற இளவட்டங்கள் தங்கள் தவற்றை உணர்ந்து தலைகளைத் தாழ்த்திக்கொண்டன.

சமையலறையை நோக்கித் திரும்பிய அப்பாவின் கையிலிருந்த வாளித் தண்ணீர் சூடு ஆறியிருந்தது. அப்பாவின் சாதுர்யத்தால் அந்த இடத்தில் பெண்களுக்கு நேர இருந்த விபத்தும் ஆண்களுக்கு நேர இருந்த அவமானமும் தவிர்க்கப்பட்டது.

10990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாக இரவு ஒன்பது மணிக்குப் பின் கடைக்கு வருவோரின் எண்ணிக்கை குறைவு - வியாபாரமும் குறைவு. கடையின் பின் புறமுள்ள கொட்டில் ஒன்பது மணிக்குப் பின் சுறுசுறுப்பாகக் காணப்படும். வாழையிலை வெட்டுதல் - தேங்காய் துருவுதல் - காய்கறி நறுக்குதல் முதலியன வெகு வேகமாக நடைபெறும். அந்தக் களத்தில் நடைபெறும் வேலைகளைப் பார்ப்பதிலும் அவர்களின் கதைகளைக் கேட்பதிலும் எனக்கு நாட்டமதிகம். அறுபதுகளின் நடுப்பகுதியில் பிரபலமான பில்டர் சிகரட் ஒன்று வாங்கினால் மாறி மாறித் தம் இழுக்கும் நாலைந்து பேர் வாய்களைச் சுற்றி வரும். அப்படிச் சுற்றிக் கொண்டிருந்த சிகரெட்டை தீடிரென நீண்ட அப்பாவின் கரம் பற்றிப் பறித்தது. மற்றக் கரத்தில் ஒரு புதிய சிகரெட். சிலரைப் போல நானும் அப்பா சிகரெட் புகைப்பாரோ எனச் சந்தேகப்பட்டேன்.

அப்பா புதிய சிகரெட்டின் பில்டரை எல்லோருக்கும் காட்டினார். அது தூய வெள்ளை நிறமாக இருந்தது. புகைத்த குறைச் சிகரெட்டின் பில்டர் பழுப்பு நிற மஞ்சளாக மாறியிருந்தது. அப்பா தனக்குத் தெரிந்த வகையில் விளக்கினர்.

''சிகரட் புகையால் பில்டருக்கே இந்தக் கதியென்றால் இருதயம் எவ்வளவு பாதிக்கப்படும்? இரத்தம் அழுக்காகும்? காசு கொடுத்து வருத்தத்தை வாங்க வேண்டுமா? உற்சாகமாக வேலை செய்ய வேண்டு மென்றால் ஒரு கப் பால் குடிச்சிட்டு கம்மெண்டு வேலை செய்யலாம்''

எல்லாத் தொழிலாளர்களையும் தன் பக்கம் திருப்ப முடியாதது அப்பாவுக்கு தோல்வியாக இருந்தாலும் இரண்டொருவரைத் திருத்த முடிந்தது வெற்றியில்லையா? தன் மகன் தவறான பாதையில் செல்வதைத் தடுத்து விட்டார்.

சம்பவம் எனக்குச் சொன்ன செய்தி-

'சாதாரணமானவர்களுக்கு புள்ளி விபரங்கள் விகிதாசாரங்கள் எளிதில் விளங்காத சொற்களைச் சொல்லி குழப்பியடிக்காமல் விளங்கத்தக்க வகையில் நினைவில் நிற்கத்தக்க வகையில் உதாரணங்களை செய்யக் கூடிய மாதிரி Practical லாகச் சொல்லி காரியத்தைச் சாதிக்க வேண்டும்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002ம் ஆண்டின் ஆரம்பத்தில் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சிரித்துப் பாராட்டிக் கொண்டு அமைச்சரின் கையொப்பமிடப் பட்ட நியமனக் கடிதமொன்றைத் தந்தார். சக ஊழியர்கள் நண்பர்கள் வாழ்த்த நானும் மகிழ்ச்சியடைந்தேன்.

வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக தணிக்கைச் சபையில் உறுப்பினராக நியமனம் கிடைத்தது. கண்டிப்பாக தமிழ் மொழியிலான நாடகப் பிரதிகளைப் பார்வையிட்டு தணிக்கை செய்ய வேண்டும். வசதியைப் பொறுத்து ஏனைய மொழிகளில் சமர்ப்பிக்கப்பட்ட பிரதி களையும் பார்வையிடுவேன். ஒரு பிரதியைப் பார்வையிட்டுத் தணிக்கை செய்ய 250 ரூபா தருவார்கள். எல்லாத் திரைப்படங்களையும் மற்றவர்கள் பார்வையிடுவதற்காக திரையரங்குகளுக்கு அனுப்புவதற்கு முன்பாகப் பார்வையிட்டு தணிக்கை செய்ய வேண்டும்.

சாதாரணமாக கியூ வரிசையில் நின்று பணம் கொடுத்து டிக்கட் வாங்கி மணியடிக்கும் வரை காத்திருந்து வியர்வைக்கும் விசிலடிக்கும் மத்தியில் படம் பார்த்த நிலை மாறியது. தகவல் திணைக்கள பட மாளிகையில் உள்ளே நுழைந்ததும் படம் ஆரம்பமாகும். தேவையான இடத்தில் நிறுத்தலாம். சில காட்சிகளைத் திரும்பவும் காட்டச் சொல்லிக் கேட்கலாம்.

போக்குவரத்துக்கு வாகன ஒழுங்கு மாத்திரமல்ல - படம் பார்க்கும் போது சிற்றுண்டி குளிர்பானமும் கிடைக்கும். ஒரு படம் பார்த்து தணிக்கை செய்வதற்கு 400 ரூபா தருவார்கள். விடுமுறை நாட்களில் நான்கு படங்கள் பார்த்ததும் உண்டு. ஆரம்பத்தில் விருப்பத்துடன் ஆரம்பித்த கடமை போகப் போக வேண்டாவெறுப்பாகி ராஜினாமாக் கடிதத்துடன் அமைச்சரைச் சந்திக்கும் நிலையை உருவாக்கியது.

அமைச்சர் ராஜினாமாக் கடிதத்தைப் படித்துக் கொண்டே என்னைப் பார்த்தார்.

அப்பாவை அதிக சம்பளம் தருவதாக மதுபானக் கடை உரிமை யாளர் ஒருவர் தனது விற்பனைச்சாலையில் உறைப்புத் தின்பண்டங்கள் தயாரிக்க அழைத்தபோது - ''பணம் தேவை - உழைக்க வேண்டும் - எப்படியும் உழைக்க விருப்பமில்லை - கஷ்டமெண்டாலும் காணா தெண்டாலும் இந்த உழைப்பிலை சந்தோஷம்'' - அது போதுமென்ற கருத்தைச் சொல்லி வாழ்ந்த அப்பாவின் கதையைச் சொன்னேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவுக்கு மேல் வசதியாக வாழும் நான் மனச்சாட்சியை மறைத்து சமூகத்தைக் கெடுக்கும் படங்கள் தணிக்கைக் கத்தரிக்கோலுக்கப்பாலும் திரையரங்கு செல்ல நானும் உடந்தையாக இருக்க விரும்பவில்லை. மாதந்தோறும் எளிதாகச் சம்பாதிக்கக் கூடிய ஆயிரக்கணக்கான ரூபாவை இழந்தாலும் மனச்சந்தோஷத்தை இழக்கவில்லை.

அந்த நாட்களில் வெள்ளிக்கிழமையென்றால் யாழ்ப்பாண நகரைச் சேர்ந்த பிச்சைக்காரருக்கு சிறிது மகிழ்ச்சி. காலையிலிருந்து மாலை வரை கடை கடையாக ஏறி இறங்க கையில் கொஞ்சம் காசு சேரும்; பெரிய மனது படைத்த மிகமிகச் சிலரைத் தவிர மற்றவர்கள் தருமத்துக்கு ஓர் அளவுகோல் வைத்திருந்தார்கள். ஒருசதம் தருமம் செய்து புண்ணியம் சம்பாதித்துக் கொள்வார்கள். அளவுகோல் விஷயத்தில் சில தருமவான்கள் மிகவும் கண்டிப்பாக இருப்பார்கள். அதிகாலையில் ஒருவருக்கு ஒரு சதம் கொடுக்கும் போதே மனக் கணனியில் உரிய பதிவுகளைச் சேமித்து வைத்து விடுவார்கள். தப்பித் தவறி காலையில் ‘ஐயா பிச்சை’ என ஒலித்த குரல் மீண்டும் ஒலித்தால் - தோன்றிய உருவம் மீண்டும் தோன்றினால் தருமவான்கள் ஏசும் போது அகராதியில் இல்லாத சொற்களும் சேர்ந்திருக்கும். சிறுவனாக இருந்த காலத்தில் வெள்ளிக்கிழமை நாட்களைக் கடையில் கழிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டால் முதலாளி என் கையில் சில்லறைக் காசுகளைத் தந்து பிச்சைக்காரருக்கு தருமம் செய்யும் புண்ணியவானாக என்னை மாற்றி விடுவார். முதலாளி தரும் சில்லறை களைத் தருமம் செய்யும் போதும் கவனமாக இருக்க வேணும். இரண்டு சத ஐந்து சத நாணயங்களை அப்படியே பிச்சைக்காரருக்குக் கொடுக்கக் கூடாது. அவர்கள் ஒருசதம்தான் தருமம் பெறத் தகைமையிருந்தும் சிலவேளை இரண்டு சதம் ஐந்து சதநாணயங்களுடன் கம்பி நீட்டி விடக்கூடும். அவர்களைப் பின் தொடர்வதும் ஒரு சதம் கழிந்த மிகுதிப் பணம் பெறுவதும் சாத்தியப்படாத காரியங்கள். எனவே ஐந்து சத நாணயம் வைத்திருக்கும் போது பிச்சைக்காரர் இரண்டொருவர் வந்ததும் கொடுக்காமல் சரியாக ஐந்து பேர் வந்தபின் அவர்களுள் ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்து அவனிடம் ஐந்து சதத்தைக் கொடுத்தால் அவர்கள் பிரித்துக் கொள்வார்கள். சிலநேரம் அடிபடுவார்கள். பிரித்துக்

கொடுப்பதாலோ கொடுக்காமல் விடுவதாலோ அடிபடுவதாலோ தருமவான்கள் பாதிக்க மாட்டார்கள். யாராவது பிச்சைக்காரர் ஒருசத நாணயக் குற்றிகள் அதிகமாக வைத்திருந்தால் அவற்றை வாங்கிக் கொண்டு பெரிய நாணயக் குற்றிகளைக் கொடுக்க வேண்டும். நாணய மாற்றம் செய்யும் போது செல்லாத நாணயங்களும் அழுக்கேறிய நாணயங்களும் எங்கள் கைக்கு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பலவிதமான பிச்சைக்காரரைப் பார்த்த பின்பு அப்பா என்னை அவதானிக்கும்படி சுட்டிக் காட்டியவனின் பெயர் 'பிச்சை' - ஏறக்குறைய தோற்றம் வயது எல்லாம் நடுத்தரமிருக்கும். சுத்தமான வேட்டியென்று சொல்ல முடியாவிட்டாலும் அழுக்கான வேட்டியென்றும் சொல்ல முடியாது. முழங்காலுக்குக் கீழே நீளும் வேட்டி பாதத்திலிருந்து முக்கால் அடிக்கு மேல் உயர்ந்த முக்கால் கட்டு வேட்டியாக இருந்தது. ஒரு சிறிய துவாய் கழுத்தில் - துவாயின் தலைப் பிரண்டும் வழமைக்கு மாறாக கழுத்திலிருந்து முதுகை நோக்கியபடியிருந்தது.

அப்பாவின் அவதானிப்பு சற்று வித்தியாசமானதாக இருந்தது - எந்தக் கடையாக இருந்தாலும் பிச்சை போதியளவு இடைவெளி விட்டு ''ஐயா'' என மூன்று தரம் குரல் கொடுப்பான். சில பிச்சைக்காரரைப் போல 'புண்ணியம் கிடைக்கும் - தருமம் - பிச்சை போடுங்கோ - மூண்டு நாளாகச் சாப்பிடயில்லை' என எதுவுமே சொல்ல மாட்டான். மூன்று தரம் அழைத்தும் யாரும் வரவில்லையானால் மீண்டும் ஒரு தரம் அழைப்பதில் நேரத்தை சக்தியைச் செலவிடாது அடுத்த கடைக்கு நகர்ந்து விடுவான். யாராவது ஒரு ரூபா கொடுத்தால் 99 சதம் மிகுதி கொடுத்து விடுவான். ஒரு சதத்துக்கு மேல் ஒருவரிடம் பிச்சையெடுக்கக் கூடாதென்பதில் கண்டிப்பாக இருப்பான். இந்தப் பிச்சையை நன்றாகப் புரிந்து கொண்ட புடவைக்கடை முதலாளியொருவர் தினமும் இரவுச் சாப்பாட்டுக்காக ஐந்து இடியப்பங்கள் வழங்கும்படி அப்பாவின் முதலாளி யிடம் ஒழுங்கு செய்தார். அப்பாவின் முதலாளியின் மனமும் நல்ல தென்பதால் இரவுச் சாப்பாடாக தினமும் பத்து இடியப்பம் பிச்சையின் வயிற்றை நிறைத்தது. அப்பா சுட்டிக்காட்டி உணர்த்திய பின்தான் ஒரு பிச்சைக்காரனால் கூட மற்றவர்களின் வெறுப்பைச் சம்பாதிக்காமல் தன் தேவைகளை கௌரவமாகவும் ஒழுங்காகவும் பெறமுடியும் என்பதை அறியக் கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996ம் ஆண்டு ஜூலை மாதம் 26ம் திகதி யுத்தம் காரணமாக கிளிநொச்சி நகரிலிருந்து இடம் பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான வர்களுள் நானும் ஒருவன். ஆனாலும் இலங்கையில் மிக முக்கிய பதவியான அரசாங்க அதிபர் பதவியை வகிக்கும் இருபத்தைந்து பேரில் நானும் ஒருவன். ஒரு மரத்துக்கு கீழ் மக்களின் அவலங்கள் பற்றிய கவலையோடிருந்தேன். வழமையாக கச்சேரி நீதிமன்றம் போன்ற அரச அலுவலகங்களுக்கு அருகில் தட்டெழுத்துப் பொறியுடன் இளைப்பாறிய உத்தியோகத்தர்கள் உழைக்கும் காட்சி மனக்கண்ணில் தோன்றியது. ஆரம்ப நடவடிக்கையாக ஒரு மேசையும் கதிரையும் இரவலாகப் பெற்றுக் கொண்டேன். பேனாவைத் தவிர எழுதுவதற்கு கடதாசி கூட இல்லையே என எண்ணிக் கொண்டிருக்கையில் பாரதி யாரின் வறுமை வாழ்க்கை பற்றி அப்பா எப்போதோ சொன்னது நினைவில் தோன்ற உடுப்பைச் சுற்றிக் கொண்டு வந்த பழைய செய்தித்தாளின் நிலை உயர்ந்தது. அச்சிடப்பட்ட செய்தித்தாளின் அச்சிடப்படாத ஓரங்களில் பாரதியார் கவிதைகள் எழுதியதாகவும் தெரு விளக்கின் கீழ் இருந்து படித்ததாகவும் அப்பா சொன்ன கதைகள் மனதில் தோன்றின. கிறிஸ்தவ தேவாலயத்தைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய பிதா.ஜெபநேசனுக்கு செய்தித்தாள் ஓரத்தைப் பயன்படுத்தி எழுதிய கடிதத்துக்கு பதிலாகக்க கிடைத்த தென்னோலைக் கிடுகுகள் கிளிநொச்சி கச்சேரியாக மாறி மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கும் வேலையைச் செய்தது.

சிறுவனாக இருந்த என்னையும் கூட்டிக்கொண்டு அப்பா உறவினர் ஒருவர் வீட்டுக்குச் சென்ற போது அலங்காரமாக வளைத்துக் கட்டிய சீமேந்து மதில் - வண்ணப்பூ வேலைகளுடன் செய்யப்பட்ட இரும்பு கேற் - அந்தக்கேற்றுகளை தாங்கி நிற்கும் தூண்களுக்கு இணைக்கப்பட்டிருந்த வட்ட வடிவான மின்குமிழ் எல்லாம் மனதில் ஆசையை ஏற்படுத்த அது போல எங்கள் காணிக்கும் மதில் கட்டி கேற் போட வேண்டுமென்றேன். மதில் கட்டுவதற்கு முதல் 'கிணறு - கக்கூஸ் - வீடு' என்று அப்பா சொன்னதன் அர்த்தம் முழுமையாக விளங்க சில நாட்கள் தேவைப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் பயன்படுத்தும் கிணறு சீமேந்தினால் கட்டப்படாத பழைய கிணறென்றாலும் பங்காளிகள் பலர். கிணற்றின் அருகே எதிரெதிராக நான்கு பூவரச மரங்கள் வளர்க்கப்பட்டிருந்தன. சுமாரான உயரத்தில் இரண்டு பூவரச மரங்கள் வேறு தடிகளால் இணைத்துக் கட்டப் பட்டிருந்தன. இணைத்துக் கட்டப்பட்டிருந்த தடிகளுக்கு 'ஆடுகால்' எனப் பெயர். இரண்டு பூவரச மரங்களுக்கெதிர்ப் புறமாக வளர்ந்த மற்ற இரு பூவரச மரங்களில் இன்னுமொரு ஆடுகால். நீளமான பனை மரத்தைச் செதுக்கியெடுத்து துலா வடிவம் கொடுத்து துலாவின் இடையே அச்சுலக்கை புகுத்தப்பட்டு அச்சுலக்கை இணைக்கப்பட்ட துலா ஆடுகால் மேல் வைக்கப்பட்டிருந்தது. துலாவின் அடிப்பக்கத்தில் கட்டப்பட்டிருக்கும் பாரமான கற்கள் கிணற்றில் தண்ணீர் அள்ள வாளியை உள்ளே விடும் போதும் - அள்ளிய தண்ணீரை வெளியே கொண்டு வரும் போதும் சமநிலை பேண உதவும். கிணற்றின் அருகே நின்று நீர் அள்ளுவதற்கு வசதியாக கிணற்றின் குறுக்கே சில தடிகள் வைக்கப்பட்டிருந்தன. பங்குக் கிணறாகையால் எல்லாப் பங்காளிகளும் உடன்பட்டால்தான் ஏதும் செய்யலாம். உடன்படாவிட்டால் ஒரங்குலக் கயிற்றைக் கூட போட முடியாது. செலவு செய்யும் பணம் கிடைக்காமல் போய்விடுவது மட்டுமல்ல - கிராமக்கோட்டிலிருந்து உயர் நீதிமன்றம் வரை வழக்குகளில் கலந்து கொள்ளக்கூடிய அனுபவமும் கிடைக்கும்.

மதில் கட்டியிருந்த உறவினரைச் சந்தித்துத் திரும்பி வந்து சில நாள் இருக்கும் - குடிப்பதற்கு தண்ணீர் அள்ளச் சென்ற எனது சிறிய தாயார் கிணற்றினுள்ளே தத்தளித்து அபயக்குரல் எழுப்பிய போது ஊரே திரண்டோடி வந்தது.

துலாவில் கயிற்றால் பிணைக்கப்பட்டிருந்த கல் அறுந்து விழ சமநிலை தளும்பிய சிறிய தாயார் தடுமாறி நின்று தண்ணீர் அள்ள கிணற்றின் குறுக்கே வைக்கப்பட்டிருந்த தடிகளின் மீது வேகமாக ஒரு புறம் ஒதுங்க - தடிகளின் மறுபுறம் மேலெழும்ப குடிப்பதற்கு தண்ணீர் அள்ளச் சென்ற சிறிய தாயார் கிணற்றினுள்ளே விழுந்து குளிக்க வேண்டிய நிலை. திடீரென ஏற்படும் விபத்துக்கள் நன்மைகளைக் கொண்டு வருவதுமுண்டு. 'பொதுவாக கோடு கச்சேரி பொலிசு என ஏறி இறங்கினால் அலைச்சலும் செலவும். ஆவது எதுவுமில்லை' என்று சொல்லும் அப்பாவும் துணிந்து விட்டார்.

''நல்ல வேளை. ஒருவர் தப்பியிட்டார். ஒருவரும் காசு தரா விட்டாலும் பரவாயில்லை. சுப்றீம் கோட்டிலை வழக்கு வைச்சாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவாயில்லை. கிணற்றை வடிவாகக் கட்டப் போகின்றேன். மற்ற ஆட்கள் ஒதுங்கி நிற்கலாம். நாளைக்கு இப்பிடி ஒரு சம்பவம் நடக்கிற போது யார் கிணற்றுக்குள் விழுவார் என்று சொல்ல முடியாது!"

ஒவ்வொரு குடும்பமும் அப்பா சொன்னதை மீண்டும் மீண்டும் யோசித்தது. ''யார் கிணற்றுக்குள் விழுவார் என்று சொல்ல முடியாது."

துன்பத்தினுள் ஓர் இன்பம். பங்காளர் ஒன்று சேர்ந்து பலமான கற்கள் சீமேந்து பயன்படுத்தி கிணற்றை சரியாக நிர்மாணித்ததால் உயிரா பாயமில்லை.

2003 செப்டம்பர் மாதம் மினுவாங்கொட என்னுமிடத்தில் பாதுகாப்பற்ற நிலையில் பாடசாலையொன்றிலிருந்து கிணற்றில் தவறி விழுந்த மாணவன் இறந்து விட்டான். இது தொடர்பாக எழுந்த பிரச்சினையால் பாடசாலை சில நாட்கள் இயங்கவில்லை. மறுநாள் வவுனியாவில் இதுபோன்ற சம்பவத்தால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரிகளுக்கு கிணறு இயமனானது. இப்படியான செய்திகள் ஒன்றிரண்டல்ல.

பிள்ளைகளின் கௌரவம் சுகாதாரம் மனதில் தோன்ற அப்பாவின் கையில் சிறிது பணம் சேர பனை வடலிகளிடையே மறைந்த காலம் மாறி மலசலகூடம் சீமேந்தினால் கட்டப்பட்டது. கடன் வாங்க அப்பா அம்மா விரும்பாததால் கணிசமான தொகை சேர்ந்த பின்பே வீட்டுக்கு அத்திவாரம் அமைக்கப்பட்டது. மதில் அலங்காரமாக இல்லாமல் - வண்ணப் பூக்கேற்றாக இல்லாமல் சாதாரணமாக அமைக்கப்பட்டது - பல வருடங்களுக்குப் பின்னர். சாதாரண வாழ்க்கை - கடனற்ற வாழ்க்கை எவ்வளவு சந்தோஷமானது என்பதை இப்போது உணர்கின்றேன்.

க.பொ.த. உயர்தர வகுப்புக்கு வந்த பின்பு கட்டைக் காற் சட்டையுடன் நான் கல்லூரி செல்வதை விரும்பாததால் நீளக் காற்சட்டையும் சப்பாத்தும் கிடைத்தது. புதுக்காற்சட்டையும் சேட்டும் என்னோடு அளவாக அழகாக உறவாடின. சப்பாத்துக்கு மாத்திரம் என் மீது சரியான கோபம். காலிரண்டையும் வெட்டியும் கடித்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாதபாடு படுத்தின. சிறிது நேரத்துக்குப் பின் வகுப்பறைக் கதிரையுடன் ஒட்டிக் கொண்டேன். நடந்து திரிந்து ஏன் புதுச் சப்பாத்திடம் கடியும் வெட்டும் வாங்குவான்? ஏறக்குறைய எல்லோரும் போன பின் காலணிகளைக் கையில் காவிக் கொண்டு வீடு வாசல் வரை சென்று காலில் மாட்டிக் கொண்டு சென்ற போது பாதங்களைப் பார்த்த அப்பா சொன்னார்:-

''முகத்துக்குப் போடுற பவுடரைக் கொஞ்சம் எடுத்து குதிக்காலுக்கு மேலையும் சப்பாத்து நல்லாகக் கடிக்கிற சின்ன விரல் பெருவிரல் மாதிரியான இடங்களிலை தடவிப் போட்டு சப்பாத்து போட்டால் சப்பாத்து கடிக்காது.''

இப்போதும் சப்பாத்து செருப்பு புதிதாக வாங்கியதும் போடுவதற்கு முன்பாக முகப் பவுடரை (Face Powder) கால் விரல்கள், குதிக்காலில் போடும் போது நண்பர்கள் கிண்டல் செய்வதுண்டு. செய்து விட்டுப் போகட்டுமே! கிண்டல் தரும் வேதனையைத் தாங்கிக் கொள்ளலாம். சப்பாத்து செருப்புக்கடி தரும் வேதனையைத் தாங்கிக் கொள்வது சிரமம்.

மூன்றாம் வகுப்பில் படிக்கும் போதே உடுப்பிட்டிக் கிராமத்திலிருந்து தனியாக பஸ்சிலோ அல்லது அந்தக் காலத்தில் ஓடிய தட்டி வான்களிலோ ஏறி பதினைந்து மைல் தூரத்திலுள்ள யாழ்ப்பபாண நகர் சென்று அப்பா தரும் சம்பளக் காசை கொண்டு வந்து அம்மா கையில் ஒப்படைக்கக் கூடிய சூழல். பயமற்ற பாதுகாப்பான காலம் அக்காலம்.

அப்பாவின் மாதச்சம்பளம் 100 ரூபா. ஒவ்வொரு மாதச் சம்பளமும் அடுத்த மாதம் முதலாம் திகதி கிடைக்கும். காங்கேசன்துறை வீதியில் ''லக்ஷ்மி விலாஸ்'' கடை என்பதை விட ''தில்லைப்பிள்ளை கிளப்'' என்றால் பலருக்குத் தெரியும். தில்லைவனம் பிள்ளை என்ற முதலாளிக்குச் சொந்தமான கடையில் சிங்காரம்பிள்ளை ஒரு தொழிலாளி. சிங்காரம் பிள்ளையின் தந்தையான சிவகாமி நாதபிள்ளையின் தந்தை பெயரும் தில்லைவனம் பிள்ளை. இருவரும் வேறு வேறு தில்லைவனம் பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து வயதில் இந்தக் கடையில் வேலைக்குச் சேர்ந்ததாக அப்பா சொல்லுவார். நல்ல முதலாளி என்பது அப்பாவின் முடிவு. தில்லைவனம் பிள்ளைக்குப் பின் அவரது மகன் முறையானவர் முதலாளியான போதும் அப்பாவின் முடிவு மாறவில்லை. புதிய முதலாளி அப்பாவை 'ஐயா!' என கௌரவமாகவே அழைப்பார். அப்பாவின் சொல்லுக்கு மறுவார்த்தை சொல்ல மாட்டார். வேறு சில கடைகளில் அதிகரித்த சம்பளமும் வேறு சலுகைகளும் தருவதாகச் சொன்ன போதும் அப்பா மறுத்து விட்டார். பணத்தின் அருமை தெரியும் அறிவு எனக்கு வந்ததும் அப்பாவுக்கும் எனக்கும் இடையில் வாக்குவாதம்-

''அதிக சம்பளம் தருவதாக சொல்லிய முதலாளிகளின் கடையில் வேலை செய்தால் என்ன?'' - இது என் கருத்து. அப்பாவின் அபிப்பிராயம் வேறுவிதமாக இருந்தது - ''காசு தேவைதான். ஆனால் எல்லா விஷயத்தையும் காசைக் கொண்டு மதிப்பிடக்கூடாது. கடை முதலாளி என்னைப் அறிஞ்சு என்னை மதிப்பாக நடத்துறார். நானும் இந்தக் கடையிலை முப்பது வருஷத்துக்கு மேலை வேலை செய்திட்டன். பேயோடை கூட பழகிட்டா விட்டிட்டு போயிட மனம் வராது. பணத்துக் காக நல்ல மனிசரை விட்டிட்டு போறதுக்கு எனக்கு இஷ்டமில்லை''.

சந்தர்ப்பம் கிடைக்கும் சில நேரங்களில் வீட்டுக்கு வந்தால் விடுதலை நாட்கள் வாரங்கள் மாதங்களைக் கடந்த சம்பவங்களும் உண்டு. அவர் வேலைக்குப் போகாது விட்டாலும் சம்பளம் ஒழுங்காக் கிடைக்கும். அவரது இடத்துக்கு வேறு ஒருவர் நியமிக்கப்படமாட்டார். இவற்றையெல்லாம் பார்க்கிற போது அப்பா சொன்னதெல்லாம் சரியென எண்ணத் தோன்றும்.

க.பொ.த. உயர்தர வகுப்பில் படிப்பதற்கு தோழர். கார்த்திகேசு மாஸ்டரின் சிபார்சில் யாழ். இந்துக்கல்லூரியிலும் விடுதியிலும் இடம் கிடைத்தது. இடம் கிடைத்ததில் மகிழ்ச்சி. விடுதிக் கட்டணம் இதர செலவுகளை எண்ணி முதலாளியிடம் முதன் முதலாக ''தம்பி! மகன் மேல் வகுப்புக்கு போறதாலை செலவு...''

''இந்த மாதத்திலையிருந்து 200 ரூபா சம்பளம்'' முதலாளியால் அதிகரிக்கப்பட்ட 100 வீத சம்பள உயர்வு பின்னர் குறைக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறை வீதியும் ஸ்ரான்லி றோடும் சந்திக்கும் இடம், முட்டாஸ் கடைச்சந்தி. அக்காலத்தில் முட்டாசுக்கடை உரிமையாளர் திரு.செல்லையாவுக்கும் அப்பாவுக்கும் இடையே எழுதாத உடன்படிக்கை யொன்றிருந்தது.

வெற்றிலை போடுவது என்று சொன்னால் அப்பாவின் பெயரை கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யலாம் என நினைக்கின்றேன். தொடர்ச்சியாக அடுக்களையில் நெருப்பருகே நிற்பதால் வெற்றிலை குளிர்ச்சியைத் தரும் என நம்பினார். ஒரு வெற்றிலையை இரண்டாக்கி பாதி வெற்றிலை தான் போடுவார். ஆனால் சில நிமிடங்களுக்குள் வெற்றிலையின் சாற்றை உள்ளிழுத்து சக்கையை துப்புவதற்குள் அடுத்த வெற்றிலை போடுவதற்கு ஆயத்தமாகி விடுவார். வெற்றிலை என்றால் நிறமும் சுவையும் ஊட்டிய பாக்கு, மிக மெல்லியதாகச் சீவிய தேங்காய்ப்பூ, மங்கள விலாஸ் வாசனைப் புகையிலை இவையெல்லாம் சேர வேண்டும். இந்தப் பொருட்கள் எல்லாம் முட்டாசுக் கடைச் சந்தியிலுள்ள செல்லையா கடையில் தான் வாங்குவார். 'வாங்குவார்' எனச்சொல்வது தவறு.

பின்னேர வேளைகளில் செல்லையா கடைக்குச் சென்று தனக்கு விருப்பமான அளவு வெற்றிலை பாக்கு புகையிலை இத்தியாதி எல்லாம் எடுத்துக் கொண்டு வருவார். சில நேரம் அப்பாவுடன் நானும் செல்வேன். கடையிலிருந்து வெளியே வரும்போது 'வர்றன்' சொல்லுவார். என்ன பொருள் எவ்வளவு எடுத்தது எவரும் கணக்கு வைப்பதில்லை. அப்பா தனக்குத் தேவையானவற்றை தானாகவே எடுக்கலாம். மாதம் தோறும் தனக்கு கிடைக்கும் 100 ரூபா சம்பளத்தில் 15 ரூபாவை செல்லையா கடையில் கொடுத்து விடுவார். இதில் ஒரு விடயம் என்னவென்றால் தொடர்ச்சியாக மூன்று மாதம் வேலைக்குச் செல்லாத வேளைகளிலும் அப்பாவின் சம்பளத்தை வாங்க உடுப்பிட்டியிலிருந்து நான் யாழ்ப்பாணம் செல்வேன். சம்பளம் வாங்கியதும் செல்லையா கடையில் 15 ரூபா கொடுத்து விட வேண்டும் என்பது அப்பாவின் கண்டிப்பான கட்டளை. அப்பா வேலைக்குப் போகா விட்டாலும் சம்பளத்துடன் கூடிய விடுதலைதான். வெற்றிலை வாங்காவிட்டாலும் முழுமையான கொடுப்பனவு செய்யப்படும்.

இந்தக் 'கனவான் ஒப்பந்தம்' ஒரு புறமிருக்க. 1965ம் ஆண்டு உடுப்பிட்டி யிலிருந்து யாழ். இந்துக்கல்லூரி சென்றதும் 100 ரூபாவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த அப்பாவின் சம்பளம் 200 ரூபாவாகியதும் அப்பா செல்லையா முதலாளியிடம் 30 ரூபா கொடுத்தார். பணத்தை எண்ணிய முதலாளிக்கு சம்பள அதிகரிப்புக்கான காரணத்தைச் சொன்னேன். மகிழ்ச்சியால் செல்லையாவின் முகம் மலர அப்பா கொடுத்த 30 ரூபா எனது சட்டைப்பைக்குள் திணிக்கப்பட்டது.'' மகனின் படிப்புக்கு அது நம்ம பங்கு. நீங்க வாற மாதிரி வந்து போங்க. முந்திக் கொடுக்கிற காசையே கொடுங்க. போதும்.''

பணத்தின் பெறுமானம் மிக வேறுபாடடைந்து விட்ட இந்நாட்களிலும் பெருமபாலான மக்கள் ஒவ்வொரு சதத்தையும் தக்க வைப்பதில் மிகக் கவனமாக இருப்பதைக் காணக் கூடியதாயிருக்கிறது. கொள்வோர் ஒரு சதத்தையேனும் மேலதிகமாகக் கொடுக்க விரும்புவதில்லை. கொடுப்போர் ஒரு சதத்தையேனும் இழக்க விரும்புவதில்லை.

சம்பளம் அதிகரித்த போது, தினமும் தான் சென்று வரும் கடைக் காரருக்கு பங்கு கொடுக்க எண்ணிய அப்பாவும், 'உங்க மகனின் படிப்புக்கு அது நம்ம பங்கு' என தொடர்ச்சியாக பணத்தைப் பெறாமல் விட்ட செல்லையா முதலாளியும் தினமும் என் நினைவில் வருகின்றனர்.

கோவில்கள் நிறைந்த மாவட்டம் யாழ்ப்பாண மாவட்டம். கோவிலுக்குப் போகாதோரைக் காண்பதரிது. வழிபடச் செல்வோர் - பொருள் வாங்கச் செல்வோர் - பொழுது போக்கச் செல்வோர் - புதினம் பார்க்கச் செல்வோர் - என ஏதோ ஒரு வகையிலோ ஒன்றுக்கு மேற்பட்ட வகையிலோ பலரைச் சேர்த்துக் கொள்ளலாம். அதிக தூரம் நடக்க வலுவற்ற சிறுவனாக இருந்த என்னை அப்பா தோளில் தூக்கி வைக்க நான் அவர் தலையை இரு கைகளாலும் இறுகப் பற்றிக் கொண்டு குதிக்காலால் அவர் நெஞ்சில் தாளமிட்டுக்கொண்டே சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்திலுள்ள செல்வச் சந்நிதி ஆலயத்துக்குச் சென்றது இன்னும் நினைவில் இருக்கிறது. அதன் பின் கோவிலுக்குச் சென்றதைக் காணாததால் காரணம் கேட்டேன்.

''அடுப்படிதான் எனக்கு கோவில். செய்யிற தொழில் தெய்வம் - நெருப்புதான் என்ர தெய்வம். காலமை வேலை தொடங்கிறதுக்கு முதலும் வேலை முடிஞ்சதும் நெருப்பை மனதாலை கும்பிடுறன். பகல்

பொழுதெல்லாம் கோயிலிலேயே இருக்கிறன். போதாதா?'' சற்று ஆச்சரியத்தில் ஆழ்த்தினாலும் 20 வயது முடிவதற்கு முன்பாகவே பொலிஸ் தலைமைக் காரிலயத்தில் எழுதுவினைஞன் வேலை கிடைத்த போது ஆசீர்வதித்தார்:

''நீ வேலை செய்யப் போற இடம் தான் உனக்குக் கோயில். வசதிப்படுற நேரமெல்லாம் கோயிலுக்குப் போக வேணும். மேசையும் கதிரையும் பேனையும்தான் உனக்குத் தெய்வங்கள். கதிரையை நீ காப்பாற்றினா கதிரை உன்னைக் காப்பாற்றும். முடிஞ்ச வரைக்கும் பேனையை நல்ல விஷயத்துக்கு மட்டும் பாவிக்க வேணும்.''

எனக்கு நன்றாகத் தெரியும் - காலையும் மாலையும் நான் மேசையைத் தொட்டுக் கும்பிடும் போது ஒட்டி நின்று பார்த்து தங்களுக்குள் சிரித்து மகிழும் ஊழியர்களைப் பற்றி. அவர்களின் சிரிப்புக்கஞ்சி என் வழிபாட்டை நிறுத்தத் தயாரில்லை. என்னைப் பொறுத்தளவில் எனது மேலதிகாரிகளின் பேனா இதுவரை எனக்குக் கெடுதல் செய்ததில்லை.

❀ ❀ ❀

அப்பா எவ்வளவு சீரியஸாக் கதைப்பாரோ, அதே போல நோகாமல் பகிடிக் கதைகளும் சொல்லுவார். சீனிப்பாணி காய்ச்சி மாவுடன் வண்ணப் பொடி வாசனைத் திரவியங்கள் சேர்த்து நெய்யையும் விட்டுக் கிளற உருவாகும் மைசூர்ப்பாகு நாவில் நீரை ஊற வைக்கும். வாசனையால் கவரப்பட்டு தங்க ஆபரணங்கள் வடிவமைக்கும் ஒருவர் நாவூற குசினிக்குள் நுழைந்தார்.

அப்பா இரும்புத் தாச்சியில் இளகிக் கொண்டிருந்த மைசூர்ப்பாகுக் குழம்பை 2 அடி நீளமும் 1 அடி அகலமும் கொண்ட தட்டில் ஊற்றினார். வெகு நிதானமாக ஊற்றிய போதும் சிறிதளவு குழம்பு கட்டுப்பாட்டை மீறி தட்டின் கீழே விரிக்கப்பட்டிருந்த பேப்பரில் வடிந்து திரண்டது. அவரின் கைகளுக்குள் புகுந்த அளவு கோலும் கத்தியும் 2 அங்குல நீளம் 1 அங்குல அகலம் என கோடுகளைக் கீற மைசூர்ப்பாகுக் கட்டிகள் உருவாகின. தட்டின் நான்கு பக்கமும் மேலதிகமாக இருந்த குழம்பை கத்தியால் சீவ அதுவும் தட்டின் கீழே விரிக்கப்பட்டிருந்த பேப்பரில் விழுந்தது. அதுவரை பொறுமையாக இருந்த நகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமைப்பவர் மைசூர்ப் பாகு தட்டத்தினருகே குனிய பேப்பரில் விழுந்திருந்த மைசூர்ப் பாகுத்துகள்களை எடுக்க முனைந்த அவர் கைகளை அப்பாவின் கைகள் தடுத்தன.

''இது சரியில்லை. நீங்கள் நகை செய்யிற போது கீழே சிந்திற தங்கத்தை இன்னொரு ஆள் எடுக்க விடுவீங்களா ? இந்த சாப்பாட்டுச் சாமான்கள் என்னுடைய முதலாளிக்குத் தங்கம் மாதிரி. அவர் சொன்னா நான் தர்றன்.''

சிரித்துக்கொண்டே சொன்ன நியாயத்தை உணர்ந்தவரும் அசட்டுத் தனமாகச் சிரித்தார்:-

''நான் சுடச்சுடச் சாப்பிட்டுப் பார்க்க நினைச்சன்.''

அடுத்த தடவை அப்பா சிரித்தார்- ''நல்லது. நாலு மைசூர்பாகு காசு கொடுத்து வாங்கிட்டுப் போங்க. சொல்லி வேலையில்லை. அந்த மாதிரி மணியாயிருக்கும்.''

இது போன்ற சமயங்களில் பிரச்சினைகளைப் பெரிதாக்காமல் சிரித்துச் சமாளிக்கும் அப்பாவின் சாமர்த்தியத்தை பல தடவை பார்த்திருக்கின்றேன். அவரிடமிருந்து நான் தெரிந்து கொண்டவற்றில் இதுவும் ஒன்று. 'கோபம் கொள்ள வேண்டிய வேளையில் சிரித்து சமாளிக்கும் சாமர்த்தியம்' சிநேகத்தை வளர்க்கும்.

அருகாமையிலுள்ள ஆலயத்துக்கு புதிய கோபுரம் கட்டும் போது தூண்கள் தெய்வச் சிலைகள் செதுக்க வந்த கலைஞர்கள் கடைக்குச் சாப்பிட வரும் போது அப்பாவுடனும் அளவளாவிச் செல்வது வழக்கம். கோவிலில் சிலைகள் செய்வதைப் பார்க்க விரும்பிய என்னை அப்பா அழைத்துச் சென்றார். வேறு வேறு உளிகளும் சுத்தியலும் கலைஞர்களின் கைகளில் சுழன்று வர உருவாகும் தெய்வச் சிலைகளின் அழகில் மெய் மறந்து நின்றோம்.

தலைமைக் கலைஞனின் ஏளனச் சிரிப்பு:- ''சிலை செய்யிற தொண்ணும் சுகமான வேலையில்லை. மண்ணையும் கல்லையும் கலந்து சாப்பாடு செய்யிற மாதிரியில்லை. உப்பையும் புளியையும் கூடக்குறையப் போடுற சமையல் மாதிரியில்லை''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா சர்வசாதாரணமாகச் சொன்னார்:- ''சிலை செய்யிறதுக்கு முந்தி நீங்க ஆண் கல்லு பெண் கல்லு அலிக் கல்லு பார்க்கிற மாதிரி அரிசியையும் மாவையும் வாங்கிற போது கவனமாக இருப்பம். நீங்க ஒவ்வொரு விஷயம் செய்யிற போதும் பிரமாணம் அளவு பார்க்கிற மாதிரி அளவு பார்த்துத்தான் உப்பு புளி போடுவம். நீங்க ஒண்ணு செய்யிற போது கொஞ்சம் பிழைச்சா அதை இன்னொண்ணா மாத்தியிடுவீங்க. சாப்பாட்டை அப்பிடி மாத்த முடியாது. தூக்கித் தூர வீசிட வேண்டியதுதான். சாப்பாட்டை வீசியிட்டா முதலாளி எங்களைத் தூக்கி வீசியிடுவார்.''

சற்றும் எதிர்பாராத பதிலால் தலைமைக் கலைஞர் திகைத்தார்:- ''எப்படி உங்களாலை பட்பட்டெண பதில் சொல்ல முடியுது?''

அப்பாவின் முகத்தில் புன்சிரிப்பு மின்னல்:- ''முட்டாள்த்தனமான கேள்விகளுக்கும் புத்திசாலித்தனமாக பதில் சொல்ல முயற்சிக்கிறன்''

தங்கை சற்று வளர்ந்த பின் தையல் கலையை முழுமையாகப் பயின்றதால் அவள் தனக்கென ஒரு தையல் இயந்திரத்தை உரிமையாக்க விரும்புவது சரியென கொள்கையளவில் பெற்றோர் ஏற்றுக்கொண்டனர். சிலநாள் கழிய புதிய தையல் இயந்திரம் வாங்கிக் கொடுக்க தந்தை இணக்கம் தெரிவித்தார். இந்தச் சங்கதி இடைத் தரகர் ஒருவருக்குத் தெரிந்து விட அவர் கடைக்கு மாவிடிக்க வரும் பெண்ணொருத்தி மூலம் அம்மாவின் மனதில் ஆசையை மூட்டி சற்று குறைவான விலைக்கு ஒருவரிடம் பாவித்த இயந்திரத்தை வாங்கினார். தரகர், மாவிடிக்கும் பெண் அம்மா எல்லோரும் சேர்ந்து 'அதிகம் பாவிக்காத மெசின். விலையும் மலிவு' என்று சொல்லி அப்பாவின் அரைகுறைச் சம்மதத்தை வாங்கி விட்டனர். கொடுப்பனவு பூர்த்தியாக கொள்வனவு செய்த இயந்திரம் வீட்டுக்கு வந்தது.

தையல் இயந்திரம் வீட்டுக்கு வந்த மூன்றாவது நாள் திடுதிப்பென்று கடைக்குள் நுழைந்த பொலிஸார் அப்பாவிடம் அடுக்கடுக்காகப் பல கேள்விகள், விசாரணைகள், விளக்கங்கள். பின்பு தான் விடயம் விளங்கியது. இல்லத் தலைவி உழைத்து வாங்கிய தையல்

இயந்திரத்தை குடிகாரக் கணவன் தரகர் மூலமாக எங்கள் தலையில் கட்டி பொலிஸ் நிலையம் வரை அலைய வைத்தான். விற்பனை நிலையத்திலிருந்து வழங்கிய சிட்டை இல்லாமல் இன்னொருவருக்குச் சொந்தமான பொருளை முறையான சாட்சிகள் கூட இல்லாமல் வாங்கியது திருட்டுப் பொருளை வீட்டில் வைத்திருப்பதாகக் கருதப்படும் என்றனர் பொலிஸார்.

முறையான விற்பனை நிலையங்களில் பொருட்களை வாங்கா விட்டால் சில ஒழுங்குகளைக் கடைபிடித்துத்தான் பொருட்களை வாங்க வேண்டும். ஒரு குடும்பத்தில் கணவன் சம்மதமின்றி மனைவியிடமோ மனைவியின் சம்மதமின்றி கணவனிடமோ வாங்கும் பொருள் கூட பிரச்சினைகளை உருவாக்கும் என்ற பாடத்தைப் பணம் கொடுத்துத் தான் படிக்க நேரிட்டது என அம்மா சொல்லுவார்.

முன்னாலுள்ள புடைவைக் கடையில் கடைமையாற்றும் 'சேது' மாமா சைக்கிள் விபத்தில் காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்தார். மாலையில் அவரைப் பார்த்து விட்டு ஆறுமணிக்குப் பின் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறிய போது பல நாட்களுக்குப் பின் சந்தித்த பள்ளித் தோழர் சிலரின் வற்புறுத்தல்:- பஸ் நிலையத்துக்கு முன்னாலுள்ள குளிரகத்தில் ஐஸ்கிறீம் சுவைக்க வருமாறு வற்புறுத்தினார்கள். எங்களுடன் இணைய விரும்பாத அப்பா மெதுவாக பின்னே வர எங்கள் வாயெல்லாம் கேலிப் பேச்சுகள். அப்பாவின் காதில் விழுந்து விடுமோ என்ற அச்சத்தோடு மெதுவாகத் திரும்பிய எங்கள் கள்ளப் பார்வையில் - விரித்த குடையின் கீழ் ஆறுதலாக நடந்து வருவது தெரிந்தது. நண்பர்களுள் ஒருவன் சிரித்தான்:-

'மழை தூறக்கூட இல்லை. ஏன் குடை பிடிக்கிறார்?'

மற்ற நண்பனின் சந்தேகம். 'வெய்யிலும் இல்லை...!'

மூன்றாமவனின் நக்கல். 'அற்பனுக்குப் பவுசு வந்தால் அர்த்த ராத்திரியில்...' அப்பா வெய்யிலோ மழையோ இல்லாத போதும் குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு வந்தது எனக்கும் வெட்கமாகத்தான் இருந்தது. 'ச் ச்' என்ற சத்தத்துடன் மரங்களிலிருந்து பறவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழித்த எச்சங்கள் எங்கள் ஆடைகளை அசிங்கம் செய்தன. அதன் பின் கேலிப் பேச்சுகள் இல்லை, அழுக்கான சேட்டுடன் ஐஸ்கிறீம் கடைக்குச் சென்றால் எங்களைக் கேலி செய்வார்களே! ஐஸ்கிறீமும் இல்லை. மழை வெய்யிலுக்கு மட்டுமல்ல - மரங்களின் கீழ் நிற்கும் போதும் மரங்களின் கீழே நடக்கும் போதும் குடைகளைப் பயன் படுத்தலாம்.

அப்பாவின் சுவையான தயாரிப்புகளில் அல்வாவும் ஒன்று. இந்தியாவில் மதுரை மல்லிகை, மணப்பாடு முறுக்கு திருநெல்வேலி அல்வா என ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு பொருளுக்குச் சிறந்ததாக விளங்குகிறது. திருநெல்வேலி அல்வாவே சிறந்தது எனச் சொல்வோர் அப்பாவின் தயாரிப்பை திருநெல்வேலித் தயாரிப்புக்கு ஒப்பிடுவார்கள். திங்கட்கிழமை கொழும்பில் திருமணப் பந்தலில் அமர வேண்டிய நண்பனுக்கு வெள்ளிக்கிழமை திடீரென ஓர் ஆசை. 'திருமணக் கேக்குப் பதிலாக அப்பா தயாரிக்கும் அல்வாவை கண்ணாடிப் பேப்பரில் சுற்றி சிறு அட்டைப்பெட்டியில் வைத்து வழங்க வேண்டும்' உடனடியாக அல்வாவைத் தயாரித்து வெட்டித் தருவதற்கு மட்டும் அப்பா உடன்பட்டார். அந்நாட்களில் பொலித்தீன் என்ற சொல்லைத் தெரிந்து வைத்திருந்தவர்கள் மிகச் சிலரே. பல இடம் தேடிய பின் வாங்க முடிந்த கண்ணாடிப் பேப்பர் துண்டு துண்டாக வெட்டப்பட்டது. சனிக்கிழமை மாலையாகி விட்டதால் பிரபல அச்சகங்கள் மூடப்பட்டு விட்டன. மானிப்பாய் வீதியில் அப்பாவால் அடையாளம் காட்டப்பட்ட சிறு ஒழுங்கையில் ஒருவர் அச்சு வேலைகளைப் பொறுப்பேற்றார். அச்செழுத்துக்களைக் கோர்ப்பது அவருக்குக் கைவந்த கலை. அதன் பின்னர் கோர்வைகளைக் கொண்டு சென்று பெரிய அச்சகங்களில் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வார். கையால் இயக்கும் சிறு அச்சியந்திரம் இருந்ததாலும் எனது வேலை சிறிதென்பதாலும் பொறுப்பெடுத்துக் கொண்டு மறுநாள் மத்தியானத்துக்கு முதல் அட்டைப் பெட்டிகளை அப்பாவிடம் கொடுப்பதாகச் சொன்னார்.

ஞாயிறு மாலை மணி இரண்டாகியும் அச்சகத்திலிருந்து பெட்டி வராததால் மானிப்பாய் வீதிக்குச் சென்றேன். என்னிடம் வேலையைப் பொறுப்பெடுத்தவர் இருக்கவில்லை. அவரது மனைவியையும் மகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திரம் தீரும் வரை வாய்க்கு வந்தபடி ஏசினேன். வேலைகளை முடித்துக் கொண்டு இரவு ஆறு மணி ரெயினில் கொழும்புக்கு புறப்பட வேண்டுமே! தில்லைப்பிள்ளை கிளப்புக்கு பக்கத்தில் அமைந்திருந்த காந்தா அச்சகத்தின் உரிமையாளர் திரு. கணபதிப்பிள்ளைக்கு பள்ளி மாணவனான என்னை அப்பா அறிமுகம் செய்து வைத்தார். அந்த அறிமுகத்துடன் ஐந்தாறு நாட்கள் அச்சுக் கோர்க்கும் பகுதியில் தலை கீழாகக் கிடந்த ஈய எழுத்துக்களிடையே எனது பெயர் விலாசத்துக்குரிய எழுத்துக்களைத் தேடியெடுத்து சிறுபெட்டியில் கோர்த்து எழுத்துகளில் மட்டுமன்றி கை முகமெல்லாம் அச்சு மையைப் பூசிக் கொண்டு அப்பா விடம் ஏச்சு வாங்கினதும் ஓர் அனுபவம். அந்த அரைகுறை அனுபவத்தை வைத்துக் கொண்டு அப்பாவிப் பெண்களை அச்சுறுத்தி அச்செழுத்துக் களை ஒவ்வொன்றாகத் தேடினேன். என்னைப் பின் தொடர்ந்து வந்த அப்பா நொடிப் பொழுதில் நடந்ததறிந்து என் சார்பில் பெண்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு ஒதுக்குப்புறமான இடத்துக்கு என்னை அழைத்துச் சென்றார். ''கட்டி! வேலையை ஒரு ஆளிடம் கொடுத்திட்டு இன்னொரு ஆளிடம் குறை சொல்லக் கூடாது. அதுவும் பெம்பிளை களைக் குறை சொல்ற போது ரொம்பக் கவனமாக இருக்க வேணும். ஒரு ஆளைப் புகழ வேணும் பாராட்ட வேணும் எண்டால் ஆரிடமும் சொல்லலாம். ஏச வேணும் குறை சொல்ல வேணுமெண்டால் அந்தாளிடம் மட்டும் சொல்ல வேணும்'' மிக நெருங்கிய நண்பரின் திடீர் மரண வீட்டுக்குச் சென்று திரும்பியவர் எனது வேலைகளை நிறைவேற்றுவதற்காக கையால் இயக்கும் இயந்திரத்தை அவசரம் அவசரமாக இயக்க ஆரம்பித்தார்.

1999ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பாடசாலைப் பிள்ளைகளுக்கு சீருடை கொள்வனவு செய்வதற்காக சீனா சென்றிருந்தேன். கல்வி யமைச்சர் ரிச்சர்ட் பத்திரானவுடன் சென்றதால் எல்லா இடத்திலும் V.I.P வரவேற்பு கிடைத்தது. கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு விமானம் புறப்பட அரைமணி நேரத்துக்கு முன் வந்தால் போதுமென்று சொன்னார்கள். சுங்கத்திணைக்கள, குடி வரவு குடியகல்வு, விமானப் பகுதி ஊழியர்கள் விஷேச விருந்தினர் அறையில் நாங்கள் இருந்த கதிரைக்கு அருகில் வந்து தங்கள் பணிகளை நிறைவேற்றினார்கள். சிறிய கைப்பையைக் கூட தாங்களே தூக்கிச் சென்றார்கள். சிங்கப்பூர்

ஹொங்ஹொங் போன்ற தங்கிச் செல்லும் விமான நிலையங்களிலும் தகுந்த உபசரிப்பு.

இருவாரங்களுக்குப் பின் கட்டு நாயக்க விமான நிலையத்தில் காலை மூன்று மணிக்கு விமானம் தரையிறங்க விருந்தினர் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். கொழும்பு புறப்பட முன் பொதிகளை எண்ணினால் ஒரு பொதியைக் காணவில்லை.

பழைய சம்பவம் மனதில் படமாக ஓடியது - 1950களில் டீசல் எரிபொருளில் வேகமாக ஓடும் யாழ். தேவி உத்தரதேவி புகையிரதங்கள் வருவதற்கு முன்பு நிலக்கரிப் புகையிரதம் ஊர்ந்த காலம். காலையில் சூட்கேஸ் பெட்டியுடன் புறப்பட்ட சித்தப்பா இரவு யாழ்ப்பாணம் வந்திறங்கிய போது சூட்கேஸ் காணாமல் போன கதை தெரிந்தது. பிரயாணக் களைப்பால் சோர்வுற்றிருந்த சித்தப்பாவிடம் கதைகள் அதிகம் கேட்காமல் சூட்கேஸ் பெட்டியின் அகலம் நீளம் உயரம் நிறம் மற்றும் முக்கியமான அடையாளங்கள் பற்றிய விபரங்களை மட்டும் அப்பா கேட்டுக் கொண்டு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு விரைந்தார். புகையிரத நிலைய அதிபரின் உதவியுடன் காங்கேசன்துறை புகையிரத நிலைய அதிபருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. கடைசிப் புகையிரத நிலையமான காங்கேசன்துறையில் எல்லோரும் இறங்கிய பின்னரும் தேடுவாரின்றிக் கிடந்த சூட்கேஸ் புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. யாழ். புகையிரத நிலைய அதிபர் மூலம் கிடைத்த விபரங்களுடன் கிடைத்த சூட்கேஸின் விபரங்களும் ஒத்துப் போனதால் சித்தப்பா நிரந்தரமாக இழக்கவிருந்த சூட்கேஸ் திரும்பக் கிடைத்தது.

நானும் மற்றவர்களிடம் விசாரிப்பதை விடுத்து அங்கும் இங்கும் அலையாமல் பிரயாணப் பைகள் கடைசியாக வந்து சேருமிடம் - தேடுவாரற்ற நிலையில் காணப் படும் பொருட்கள் சேகரித்து வைக்குமிடம் ஆகியவற்றில் எனது பொருள் இல்லையென்பதை உறுதி செய்ததும் வந்து சேரும் பொருட்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் - நான் பிரயாணத்தை ஆரம்பித்த இடம் தரித்து வந்த விமான நிலைய விபரங்கள் - விமான இலக்கங்கள் விமான டிக்கட் இலக்கம் காணாமல் போன பொதியின் நீளம் அகலம் நிறம் இதர அடையாளங்கள் - பொதிக்குரிய அடையாள டிக்கட் இலக்கம் பொதி கைதவறிப் போன பெட்டியினதும் அதனுள்ளே இருந்த பொருட்களினதும் விபரங்கள் அத்தனையும் எழுத்தில் கொடுத்து விட்டு எனது இருப்பிடம் வந்து விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் அதிகாலை ஹொங்ஹொங் விமான நிலையத்திலிருந்து தொலை பேசித் தகவல் 'விமான நிலையத்தில் கண்டெடுக்கப்பட்ட பொதி கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது' - பயணப்பெட்டியில் எனது பெயர் முகவரியுடன் தொலைபேசி இலக்கமும் எழுதி ஒட்டப்பட்ட துண்டினால் கிடைத்த பலன். சில மணி நேரம் கழித்து அடுத்த தொலைபேசியழைப்பு: 'உங்கள் பெட்டி கட்டுநாயக்கவுக்கு வந்து விட்டது. உரிய அத்தாட்சிகளைச் சமர்ப்பித்து எடுத்துச் செல்லலாம்.'

முன்னெச்சரிக்கையாக இருந்தாலும் சில சம்பவங்கள் இடம் பெறலாம்., விரைந்து சரியாகச் செயற்பட்டால் இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மட்டக்களப்பைச் சேர்ந்த உறவினர் இல்லத்துக்கு விருந்துண்ணச் சென்றிருந்தோம். வழமையான உணவைத் தொடர்ந்து ஒரு கேள்வி:- 'தயிர் கொஞ்சம் சாப்பிடுறீங்களா?' ஒரு அளவான மண்பானை நிரம்ப தயிர். பானையோடு கவிழ்ந்தால் கூட விழாத வகையில் கட்டியாக இருந்தது கெட்டித்தயிர். மட்டக்களப்புத் தயிர் அப்படித்தான். அதன் சுவையே தனி. கட்டித்தயிரை வெட்டியெடுத்துப் போடுவதற்காக பெரிய கண்ணாடிக் கிளாசும் கரண்டியும் வைக்கப்பட்டிருந்தன. அப்பா சிறிதளவு தயிருடன் நிறுத்த நான் கிளாசின் விளிம்பு வரை நிறைத்தேன். இனி கிளாசில் இடமில்லை. அழைத்த விருந்தினர் அடுத்துக் கொண்டு வந்த தட்டத்தில் வைக்கப்பட்டிருந்த கிண்ணத்தில் சீனியும் சிறு கரண்டியும் வைக்கப்பட்டிருந்தது. அப்பா சிறிதளவு சீனியை தயிரில் சோத்து கலக்கினார். இருக்கும் தயிரில் சிறிதளவென்றாலும் குடித்தால் தான் சீனி சேர்க்க இடம் உண்டாகும். அப்படி இடத்தை ஏற்படுத்தி சீனியை அள்ளிப் போட்ட போது வேறொரு தட்டத்தில் வட்டம் வட்டமாக வெட்டிய வாழைப் பழத்துண்டுகளும் கஜுக் கொட்டைகளும் வந்து சேர்ந்தன. இப்போது எனது கிளாசில் அரைவாசித் தயிரைக் குடித்த பின் சீனி கஜு பழம் எல்லாம் சேர்த்துக் கலக்கினேன். இருந்தாலும் அப்பா குடித்த தயிர் சுவையாகத்தான் இருந்திருக்கும்.

அப்பா சொல்லுவார்:- 'பந்திக்கு முந்தத்தான் வேணும். ஆனால் அவசரப்படக் கூடாது. அக்கம் பக்கத்திலிருப்பவரையும் சாப்பாட்டையும் பார்க்க வேணும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் வகுப்பில் படிக்கும் போதா அல்லது இரண்டாம் வகுப்பில் படிக்கும் போதா என்பது சரியாக நினைவில்லை. பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்த போது கண்களில் ஈரமும் நெஞ்சில் பயமும் இருந்ததை ஒருவரும் கவனிக்கவில்லை. இமைகள் மூடாமல் இராப் பொழுதைக் கழித்ததும் ஒருவருக்கும் தெரியாது. பொழுது விடிந்ததும் 'இன்று மட்டும் பள்ளிக்கூடம் போக மாட்டேன்' என அடம் பிடித்தேன். அப்பா சிறிது சிறிதாக வற்புறுத்த காரணத்தைக் கக்கினேன்:-

'பாடசாலையிலிருந்து வரும் வழியில் ஒரு செத்த வீடு - செத்த வீட்டுக் கதைகள் பேய்க் கதைகள் பயங்கரத்தைத் தந்ததால் பாடசாலை செல்லப் பயமாயிருந்நது. அப்பா மிக ஆறுதலாக அரவணைத்து முதுகைத் தடவினார்: 'கட்டிக்கு பயமெண்டால் போக வேண்டாம்.' பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்றதும் நானும் மகிழ்ந்தேன். சில நிமிட மௌனத்தை அப்பாதான் கலைத்தார்:- 'கட்டிகூட நானும் பள்ளிக்கு வர்றன், பயமில்லையா?' அப்பா என்னோடிருந்தால் நான் ஏன் பயப்படப்போறன். 'பயமில்லை' என்ற அர்த்தத்தில் என் தலை இடமும் வலமும் அசைந்தது. அப்பாவும் என்னோடு பள்ளிக்குப் புறப்பட்டபோது சொன்னார்:- 'கட்டி எப்பவும் செத்த ஆட்களாலை பிரச்சினையில்லை. செத்த பிறகு அவங்களாலை ஒண்டும் செய்ய முடியாது. உயிரோடை யிருக்கிற ஆட்களோடை தான் கவனமாக இருக்க வேணும்' பிணம் - பேய் - பிசாசு என்ற பயம் படிப்படியாகக் குறைந்து. 1996ல் முல்லைத் தீவில் இடம் பெற்ற 'ஓயாத அலைகள்' போராட்ட நடவடிக்கையின் பின் 531 பிரேதங்களை ஒரே நேரத்தில் பொறுப்பேற்று 476 பிரேதங்களை அடக்கம் செய்யுமளவுக்கு பயமில்லாதிருந்தேன்.

நிதி சேர்க்க - பணம் திரட்ட பலர் பல விதமான வழிகளைக் கையாள்வர். அவற்றில் லொத்தர் டிக்கட்டுகள், 'நண்பர்களுக்கு மாத்திரம்' என்ற குறிப்புடன் விற்பனைக்கு விடப்படும் அதிர்ஷ்ட லாபச் சீட்டுகள் இப்படிப் பற்பல. இவற்றில் சில என் கரத்திலும் திணிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணிக்கப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டை விற்றுப் பணம் வாங்கியவர் சென்றதும் கிழித்துக் குப்பைக் கூடையில் வீசிய போது எனது சக நண்பர் என்னை விநோதமாகப் பார்த்தார். பார்வைக்குப் பதில்:- 'சின்னஞ் சிறுவனாக இருந்த காலத்தில் இப்போதுள்ளது போல வேறு வேறு சுரண்டல் டிக்கட்டுகள் இல்லாவிட்டாலும் 50 சதத்துக்கு விற்பனையாகிய 'ஆஸ்பத்திரி லொத்தர்' டிக்கட்டும் முதல் பரிசு 50 ஆயிரம் ரூபாவும் மக்கள் மத்தியில் மனப்பாடமாயிருந்தன. பல்வேறு ஆசைகளுடன் அப்பா விடம் கேட்ட காசு 50 சதம். காரணம் கேட்காமலே ஒரு ரூபாவை நீட்டியவர் 'சுவீப்' என்றதும் காசைப் பறித்து விட்டார். 'செல்வத்தை உழைத்துச் சேர்க்க வேண்டும் 50 சதம் 50சதமாக பலபேர் கொடுத்த கண்ணீரும் கவலையும்தான் 50ஆயிரம் ரூபா. அந்தப் பாவச்சொத்து நமக்கு வேணுமா?'

உதவிக்காக - நண்பர்களின் திருப்திக்காக வாங்கும் டிக்கட்டில் அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்தால் என் உழைப்பின் நம்பிக்கையை நான் இழந்து விடவும் கூடும். என் கருத்தை ஆமோதித்த கிழிந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டுகள் ஆனந்தமாகக் காற்றில் பறந்தன.

இப்போது 'அதிக வட்டி வழங்குகின்றோம்' என 'பினான்ஸ்' என்ற பெயரில் காளான்கள் நிறுவனங்கள் முளைத்தெழுவது போல யாழ்ப்பாணத்திலும் ஒரு காலத்தில் அந்திம கால சகாய நிதிச் சங்கங்கள் பரஸ்பர உதவிச் சங்கங்கள் எனப் பல்வேறு சங்கங்கள். சில நேர்மை யாகச் செயற்பட பல அமைப்புகள் சிறிது சிறிதாகப் பலரின் பணத்தைக் கொள்ளை அடித்தன. இத்தகைய அமைப்புகளைச் சேர்ந்த சிலர் விரித்த வலையில் விழாத அப்பா தனக்குத் தெரிந்தவர்கள் விழாமலும் தடுத்துக் கொண்டார். அதிக வட்டிக்கு ஆசைப்படாதிருக்க வேண்டும் எனத் தெரிந்தவருக்கெல்லாம் சொல்லுவார். எதையும் நேர்மையான முறையில் - சரியான வழியில் பெற்றுக் கொள்ள வற்புறுத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கனமாக வாழப் பழகிக் கொண்ட அம்மா மிச்சம் பிடிக்கும் சிறு பணத்தையும் சீட்டில் முதலீடு செய்து பெருக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். எனக்குத் தெரிந்தளவில் யாழ்ப்பாணத்தில் இரண்டு வகையான சீட்டுகள் நடைமுறையிலிருந்தன. மொத்தத் தொகையையும் காலத்தையும் கவனத்தில் கொண்டு ஊர்வட்டியைக் கணக்கிட்டு அதற்கேற்ப கழிவுத் தொகையிலிருந்து ஆரம்பமாகும் ஏலச்சீட்டு. அடுத்தது வட்டியோ கழிவோ எதுவுமில்லாமல் குறிப்பிட்ட நாளில் சீட்டுக்குப் பணம் கொடுப்போர் சீட்டைப் பொறுப்பேற்று நடாத்தும் 'தாச்சி' எனக் கௌரவமாக அழைக்கப்படுபவர் வீட்டில் ஒன்று கூடி பெயர்கள் எழுதி உருட்டப்பட்ட துண்டுகளைக் குலுக்கி அவற்றுள் ஒரு துண்டை எடுப்பதன் மூலம் சேர்ந்த தொகையைப் பெறுபவர் யார் எனத் தீர்மானித்தல். அம்மாவும் இரண்டு வேறு வேறு இடங்களில் குலுக்குச் சீட்டுக்காகப் பணம் செலுத்திக் கொண்டிருந்தார். இரகசியமான முறையில் பெயர்கள் எழுதப் பட்டு வாசிக்க முடியாத வகையில் துண்டுகள் உருட்டப்பட்டிருந்தாலும் சீட்டை நடத்துகின்ற தாச்சி யாருக்கு சீட்டு கிடைக்கும் என்று ஜாடை மாடையாகச் சொல்லிவிடுவார் என்பதை அம்மா அவதானித்திருக் கின்றார். இந்த விடயத்தை அப்பாவிடம் சொல்ல அவரும் அம்மாவின் காதில் ஏதோ இரகசியம் சொன்னார். அதற்கடுத்த மாதம் குலுக்குச் சீட்டு நடைபெறும் வீட்டுக்கு அம்மா என்னையும் கூட்டிச் சென்றார்.

'இந்த மாசம் சீத்தாவுக்குச் சீட்டு விழும் சீத்தா எனக்குப் பத்து ரூபா தருவா' என்று தாச்சி சொன்ன மாதிரியே சீட்டு சீத்தாவுக்கு கிடைத்தது. சீட்டு குலுக்கி முடிந்ததும் அம்மா கிளப்பிய ஆட்சேபனையால் தாச்சி வீட்டில் கூடிய எல்லோரும் உருட்டப்பட்டிருந்த துண்டுகளை ஆளுக்கொன்றாக எடுத்து எழுதப்பட்டிருந்த பெயரை வாசித்தனர். என்ன ஆச்சரியம்? எல்லாத் துண்டுகளிலும் சீத்தா என்ற பெயரே எழுதப்பட்டி ருந்தது. தாச்சியாக இருந்து சீட்டை நடத்தியவர் தனக்கு விருப்பமான வர்களுக்கு சீட்டுக் காசு வழங்க செய்து வந்த சூழ்ச்சி அம்மாவால் அம்பலத்துக்கு கொண்டு வரப்பட்டது. இது தொடர்பாக அப்பாவிடம் பின்பு கேட்டேன். 'சர்வாதிகாரியாகிய ஹிட்லர் யுத்த முனையில் சண்டையை ஆரம்பிக்க முன் போர் வீரர்கள் முன்னிலையில் நாணயத்தை எடுத்து பூவா தலையா போட்டுப் பார்த்து பூ விழுந்தால் தான் யுத்தத்தை ஆரம்பிப்பானாம். அந்த நாணயத்தை ஹிட்லர் தனது சட்டைப் பையிலிருந்து தான் எடுப்பானாம். காலம் கடந்து வெளியாகிய ரகசியம் தான் ஹிட்லர் இதற்கென தயாரித்து வைத்திருந்த நாணயத்தின் இரண்டு பக்கங்களிலும் பூதான் இருக்குமாம், தலையே இருக்காதாம்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா பாட நூல்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகள் மாத்திரமல்லாமல் அறிவிப்புகள் விளம்பரங்கள் எல்லாம் வாசிக்கச் சொல்லி வற்புறுத்துவார். அதாவது கையில் கிடைத்தவற்றை மாத்திரமல்லாமல் கண்ணில் பட்ட வற்றையும் வாசிக்க வேண்டுமெனச் சொல்லுவார். அடிக்கடி செல்லும் கடையில் காணப்பட்ட அறிவித்தலை கவனிக்கத் தவறியதால் ஒரு தடவை எண்பது ரூபா நட்டம்.

1994ல் வவுனியாவில் நாடகம் மேடையேற்றுவதற்காக சில்லை யூரான், வரணியூரான் அடங்கலாக 16 பேர் கொண்ட குழுவுடன் கொழும்பிலிருந்து காலையில் வானொன்றில் புறப்பட்டோம். குருணாகல என்னும் இடத்தை எட்டு மணியளவில் வான் கடந்து சென்று கொண்டிருந்த போது சாப்பாட்டின் வரவை கலைஞர்களின் வயிறுகள் ஆவலுடன் எதிர்பார்ப்பதாக பல குரல்கள் ஒலித்தன.

'இன்னும் ஒரு கிலோ மீற்றர் போக எப்பாவல ஹோட்டல் வரும், வாகனம் நிற்பாட்டலாம், வசதியாகச் சாப்பிடலாம். Toilet வசதியும் இருக்கு' என்றேன். சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக கொழும்புக்கு வந்து போகும் வழியில் அந்த ஹோட்டலுக்குப் போய் வந்த அனுபவம். சில்லையூர் செல்வராசனின் கழுத்து மனைவியிருந்த பக்கம் நோக்கித் திரும்பியது: 'கமலினி!' என்றார்.

கமலினியும் ஜெயசோதியும் சேர்ந்து ஒரு பார்சலை எடுத்தனர். கமலினியின் அழைப்பு: 'தில்லையண்ணா Sandwich செய்து கொண்டு வந்தனான். சாப்பிடுவம். ''அது நல்லது, இதைச் சாப்பிட்டிட்டு ஒரு ரீ குடிப்பம்''- இது ராஜபுத்திரன் யோகராஜன்.

''பார்சலையும் கொண்டு ஹோட்டலுக்கு போவம். சாப்பிட்டு ஒரு நல்ல ரீ குடிச்சிட்டு வெளிக்கிட்டால் மத்தியானச் சாப்பாடு வவுனியாவில்.'' - எனது ஆலோசனையை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வாகனம் ஹோட்டலுக்கு முன்பாக நிறுத்தப்பட்டது.

வாகனத்திலிருந்து ஒவ்வொருவராக இறங்க இறங்க முதலாளியின் முகம் படிப்படியாக மலர்ந்து சுறுசுறுப்பாகச் செயற்பட்டார். அழைப்பு மணியைத் தொடர்ந்து அமத்திக்கொண்டு கடையில் வேலை செய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோரைப் பெயர் சொல்லி அழைத்து விரைவாக உணவு பரிமாறக் கட்டளையிட்டார்.

நாங்கள் உணவு பரிமாறுவோருக்கு சிரமம் கொடுக்காமல் தேநீருக்கு மட்டும் சொல்லி விட்டு நான்கு மேசைகளை ஒன்றாக இணைத்து பதினாறு நாற்காலிகளை மேசைகளைச் சுற்றிவர வைத்து சில்லையூர் தம்பதிகளின் பார்சலைப் பிரித்தோம். உறைப்புக்கறி உள்ளுடனாக அமைந்த பாணுக்கும் சுடச் சுடச் தேநீருக்கும் நல்ல பொருத்தம்.

‘சிகரட்’ என்ற சிப்பந்திக்கு ‘வேண்டாம்’ என்றதும் சிட்டை மேசைக்கு வந்தது. எதுவித விபரமும் இல்லாமல் 160 இலக்கம் மட்டும் காணப் பட்டதால் ‘இது என்ன 160?’ என்றேன். ‘160 ரூபா’ என்ற பதிலைக் கேட்ட எனது கண்கள் முதலாளிக்குப் பின்னாலுள்ள சுவரில் மாட்டப் பட்டிருந்த விலைப்பட்டியலை மேய்ந்தன.

‘வெறும் தேநீர் - 3 ரூபா. பால் தேநீர்- 5 ரூபா’ - சரியாகத்தான் எழுதப் பட்டிருந்தது. 16 ஐ 5ஆல் பெருக்கி 80 என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு மீண்டும் கணக்கைக் கேட்டேன். விடையில் மாற்றமில்லை, சிட்டையில் எழுதப்பட்டிருந்த தொகையில் மாற்றமில்லை. பொறுமை யிழந்த நான் முதலாளியிடம் முறையிட்டேன்:- ‘நாங்கள் 16 பேர் - 16 ரீ மட்டும் - 80 ரூபாதான் கணக்கு. பிழையாக 160 ரூபா கணக்குக்கு பில் போட்டிருக்கு. ‘முதலாளி சிப்பந்தியைக் கூப்பிட்டு ஏசுவார் என எதிர் பார்த்த எனக்கு ஏமாற்றம்’ முதலாளி சிரித்துக் கொண்டே சுவரில் ஒட்டப்பட்டிருந்த அறிவித்தலைச் சுட்டிக்காட்டினார்.

எத்தனை தடவை அந்தச் சாப்பாட்டுக் கடைக்குப் போயிருந்தும் அன்று தான் அந்த அறிவித்தலை வாசித்தேன்.- ‘வெளியிலிருந்து சாப்பாடு கொண்டு வந்து சாப்பிடுபவர்களிடம் ஒருவருக்கு 5 ரூபாவீதம் அறவிடப்படும்’

மயில்வாகனம் சர்வானந்தா கொடுப்புக்குள் சிரித்தார்: ‘கமலினியும் சோதியும் சொன்ன மாதிரி வானிலை வைச்சே சாப்பிட்டிருக்கலாம்’.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாட்களில் ஐஸ்கிறீம் விற்பனை செய்யாத கடைகளில் குளிர்சாதனப் பெட்டிகளைக் காண்பதரிது. பெரும்பாலும் போதியளவு எல்லாப் பொருட்களையும் உடனடியாகக் கொள்வனவு செய்வதிலேயே மக்கள் நாட்டம் மிக்கவர்களாகக் காணப்பட்டனர். சில பொருட்களை அவித்தோ அல்லது வற்றலிட்டோ பதப்படுத்தி அடுத்த சில நாட்களுக்குப் பயன்படுத்தினர். இப்போதுள்ளது போல பல நாட்களுக்கு குளிர்சாதனப் பெட்டியில் இறைச்சி மீன் முதலியவற்றை உறைய வைத்து உண்ணும் வழக்கம் இருக்கவில்லை. இந்நிலையில் முகவர் ஒருவரின் சாமர்த்தியத்தால் அப்பாவின் முதலாளி குளிர்சாதனப் பெட்டி ஒன்றை வாங்கினார். சோடா போன்ற குளிர்பானங்கள் வைத் தெடுப்பதற்கு இப்பெட்டி பயன்பட்டது. சாதாரண சோடாவை விட கூல் சோடாவின் விலை ஐந்து சதம் அதிகம். எதிர்பார்த்தளவுக்கு குளிர்சாதனப் பெட்டியால் வருமானம் வராதது ஒருபுறம் இருக்க குளிர்சாதனப் பெட்டியைத் தொடர்ந்தும் இயக்கியதால் மின்சாரக் கட்டணம் அதிகரித்தது முதலாளிக்கு வருத்தத்தைக் கொடுத்தது. அவரின் நண்பர் காட்டிய மாற்று வழி ''இரவில் மின்னிணைப்பைத் துண்டித்து குளிர்சாதனப் பெட்டியின் இயக்கத்தை நிறுத்த வேண்டும். நீர் நிறைந்த வாளிக்குள் அமுக்கி மீண்டும் குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்து விற்பனை செய்யலாம். சோடாவை விலை கூட்டி விற்கலாம். மின்சாரக் கட்டணமும் குறையும்''

காலையில் குளிர்பானம் விற்க வேண்டிய சந்தர்ப்பங்களில் ''கூல் கொஞ்சம் காணாது'' என்று சொல்லிக் கொள்வார்கள். அப்பா போலி வேலைகளுக்கு பச்சைக்கொடி காட்டாததால் குளிர்சாதனப் பெட்டி விற்கப்பட்டது.

எனது நிதி நிலை திருப்தியாக இருந்தபோது நான் ஒரு குளிர் சாதனப் பெட்டி வாங்கிய போது எனது நண்பர் ஒருவரும் குளிர்சாதனப் பெட்டி வாங்கினார். வாழைப்பழம் போன்றவற்றை அதனுள் வைக்கக் கூடாதென்றும் காலத்துக்குக் காலம் சுத்தமாக்க வேண்டுமென்றும் சொல்லித் தந்த அப்பா வேறு ஒரு விடயத்தையும் வற்புறுத்திச் சொன்னார்:

''சில பொருட்களை குளிர்சாதனப் பெட்டியிலிருந்து எடுத்ததும் தாமதிக்காமல் பயன்படுத்த வேண்டும். சில பொருட்களைக் குளிரில் வைத்திருந்தாலும் அவற்றின் காலம் காலாவதியாகும் முன் பயன்படுத்த வேண்டும். மின்சாரக் கட்டணத்தைக் கணக்கிலெடுத்து தொடர்ச்சியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின் இணைப்பைக் கொடுக்காமல் விட்டாலும் பொருட்கள் பழுதாகி விடும்''

இந்த விடயத்தில் நான் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. நான் மட்டுமல்ல, உயர் அதிகாரியான எனது நண்பரும் தான்.

இளவயதிலேயே நண்பரைச் சில வருத்தங்கள் வாட்டியதால் அடிக்கடி ஊசி மூலம் மருந்தேற்றிக் கொள்வார். அடிக்கடி ஆஸ்பத்திரி செல்வதும் டாக்டர் என அலைவதும் சிரமம் எனச் சொல்லி தனக்குத் தானே ஊசி மூலம் மருந்தேற்றப் பழகிக் கொண்டார். பார்மஸிகளில் ஊசி மருந்தை வாங்கி குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருப்பார். தனக்கு விருப்பமானபோது தானே வைத்தியம் பார்த்துக் கொள்வார்.

திருகோணமலையில் வேலை செய்த நண்பர் கடமையொன்றுக்காக சில தினங்கள் மட்டக்களப்புக்கு சென்று திருமலை திரும்பியதும் குளிர்சாதனப் பெட்டியை திறந்து பார்த்திருக்கிறார். வழமைபோல ஊசி மருந்தை எடுத்து தனக்குத்தானே ஏற்றிய பின் ஏதோ ஒரு வித்தியாசத்தை உணர்ந்து குடும்பத்தினருக்குச் சொன்னதும் அவர்கள் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர்தான் நடந்த விஷயம் தெரிய வந்தது. நண்பர் மட்டக்களப்பு சென்றபின் மின்னிணைப்பை நிறுத்தி குளிர்சாதனப் பெட்டியை துப்பரவாக்கிய போதும் சில நாட்களுக்குப் பின்தான் குளிர்சாதனப் பெட்டியை இயங்க வைத்திருக்கின்றனர்.

பழுதான மருந்தால் ஏற்பட்ட பாதிப்புக்கு இந்தியா சென்றும் ஏற்ற சிகிச்சை பெற முடியாமல் போனதால் மிகவும் திறமையான ஈழத்தமிழ் நிர்வாக உத்தியோகத்தர் ஒருவரை இளவயதில் இழந்து விட்டோம்.

அந்த சுற்றாடலில் இருந்த சாப்பாட்டுக் கடைகளை விட சில பொருட்களின் விலை சற்று அதிகம். நன்கு பழக்கமான வாடிக்கை யாளர் ஒருவர் என் காது கேட்கக் கூடியதாகச் சொன்னார்.-

''விலையெல்லாம் கூடச்சொல்லி இப்படி வயித்திலை அடிக் கிறீங்களே'' அப்பாவின் முகத்தில் மெல்லிய சிரிப்பு. ''விலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு மட்டுமில்ல எங்களுக்கும் கட்டுப்படியாகணும். கலப்பட மில்லாமல் சாப்பாடு செய்யிறதால விலை கொஞ்சம் கூட. வயித்தில அடிச்சாலும் இந்தச் சாப்பாட்டால வருத்தம் வராது.''

கலப்படம் இருக்கக் கூடாது என்பது கடையை ஆரம்பித்த தில்லைவனம் பிள்ளை முதலாளியின் கண்டிப்பான உத்தரவு. சாப்பிட வருவோர் அடுக்களை வரை வந்து சாப்பாடு தயாராகும் விதத்தைப் பார்க்கலாம். அரிசிமா, மிளகாய்த்தூள், கோப்பித்தூள் போன்றவற்றை ஆட்களைக் கொண்டுவந்து ஹோட்டலில் தயாரிப்பார்கள். பால் பெற்றுக் கொள்வதற்காக மாட்டுப் பண்ணையொன்றும் நடாத்தப்பட்டது. தேவை அதிகரித்ததால் வெளியே பால் வாங்கினாலும் மாட்டுப்பண்ணை தொடர்ந்தும் பேணப்பட்டது.

''நாளைக்கு ஆட்கள் வராவிட்டாலும் பரவாயில்லை, சாப்பாட்டைக் குறை சொல்லக்கூடாது. நேர்மையாகச் சம்பாதிக்கிற காசுதான் தங்கும். ஏமாத்திச் சம்பாதிக்கிற காசு எங்களை ஏமாத்திப்போடும்'' என அடிக்கடி சொல்லி கோதுமை மாவுடன் தவிட்டைக் கலந்து தயாரித்த இடியப்பத்தை அரிசிமா இடியப்பம் என்று விற்று பணம் சம்பாதித்த ஒருவர் இளவயதிலேயே நீரிழிவு நோய்க்கு ஆளாகி தவிட்டுப் பாண் சாப்பிடும் உதாரணத்தையும் சுட்டிக் காட்டுவார்.

கடை அந்த நாள் வழக்கப்படி 'சைவாள் காப்பி ஹோட்டல்' எனவும் அழைக்கப்பட்டது. கடையில் வேலை செய்பவர்கள் கூட முட்டை யென்றாலும் உள்ளே கொண்டு வந்தால் வேலையிலிருந்து நீக்கப் படுமளவுக்கு கடும் உத்தரவு. சைவத்தை விரும்பிச் சாப்பிடுவோர் முகம் சுளிக்காமல் வந்து போக வேண்டுமென்ற எதிர்பார்ப்பு. ஒரே ஒரு விதிவிலக்கு செல்லமாக வளர்த்து வந்த நாய்க்கு மட்டும். கடையின் மாற்று வழியொன்றினால் நாயாரின் தேவை கவனிக்கப்படும்.

சின்ன வயதில் இன்னுமொரு கெட்ட பழக்கம். நல்ல விடயங்களை விரும்பிக் கேட்கும் எனது காது தீப்பெட்டிக்குச்சு, கிளிப், ஊசி போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றையெல்லாம் கேட்கும் - காது குடைவதற்காக. சிலசமயம் கை ஏதாவது பொருளைத் தேடியெடுத்து காதினுள்ளே விட்டு பெரிய அட்டகாசம் செய்யும். அப்பா பார்த்து விட்டால் அவ்வளவு தான்.

''கட்டிக்கு எத்தனை தரம்...'' அவர் ஆரம்பித்ததும் அவர் பார்வை யிலிருந்து மறைவதைத் தவிர வேறு வழியில்லை.

'குளிக்கும் போது நீரூற்றி காதுகளைக் கழுவ வேண்டும். பின்பு சற்று தடிப்பான பழைய சீலைத்துண்டை திரிபோல உருட்டி காதில் விட்டு அழுக்கையகற்ற வேண்டும். கிளிப் ஊசி போன்றவை காதில் காயத்தை ஏற்படுத்தினால் புண் உண்டாகலாம். தீக்குச்சின் மருந்துள்ள முனை காதில் போனால் மேலும் அழுக்குச் சேரும். பயன்படுத்தி எறிந்த தீக்குச்சை எடுக்கிற போது நிலத்திலிருந்த அழுக்கையும் சேர்த்தெடுத்து காதுக்குள் சேமிக்கின்றோம்.

இரு முனைகளிலும் பஞ்சு வைத்து பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட காது குடையும் குச்சியை அப்பாவிடம் காட்டினேன். அதை வாங்கிப் பார்த்துவிட்டு அப்போதும் சிரித்தார். ஒரு முனையில் ஒட்டப்பட்டிருந்த பஞ்சு சிறிது கழன்றிருந்தது. 'நல்ல வேளை காது குடையும் போது காதுக்குள் கழன்றால்...' என நான் சிந்தித்த போது இன்னொரு சம்ப வத்தைச் சொன்னார்.

அப்பாவின் மருமகன் ஒருவன் பாடசாலைக்குச் செல்லும் நாட்களில் பொழுது போக்காக தும்பு சிறு குச்சு போன்றவற்றை மூக்கினுள் நுழைத்து தும்மலை வர வழைத்து மற்றவர்களைச் சிரிக்க வைப்பான். ஒரு நாள் அவனுக்கு கிடைத்த பொருள் கொப்பியில் எழுதுவதற்கும் எழுதியவற்றை அழிப்பதற்கும் சிறு இறப்பர் ஒரு முனையில் பொருத்தப்பட்ட பென்சில். இறப்பர் முனையை மூக்கினுள் விட்டு தும்மல் விளையாட்டு காட்டிய போது இறப்பர் கழன்று மூக்குத்துவாரத்தில் சிக்கி விட்டது.

தும்மி மற்றவர்களைச் சிரிக்க வைத்த மருமகனின் கண்கள் சிவந்து நீரைச் சிந்த மூச்சு விடுவதற்கும் வெகு சிரமப்பட்டான். பல முயற்சிகள் பயன் தராமல் போக ஆஸ்பத்திரியில் டாக்டர் வளைந்த கம்பி யொன்றை மூக்குக்குள் செலுத்தி இறப்பரை எடுத்தபின் மருமகனுக்குத் தும்மல் வருவதில்லை.

சில வேளை என்னை மறந்து ஊசியெடுத்து பல்லைக் குத்தினால், நகத்தைக் கிண்டினால் அப்பா என் முன்னால் நின்று ஏசுவது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் உணர்வு. உஷாராகி உள்ளத்தால் அப்பாவிடம் மன்னிப்புக் கேட்டு ஊசியை எறிந்து விடுவேன்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது 'சுதந்திரன்' வாரப்பத்திரிகையின் 'வளர்மதி' சிறுவர் பகுதியில் வெளியிடுவதற்காக 'உதவி புரிவோம்' என்ற தலைப்பில் எழுதி வைத் திருந்த கட்டுரையைப் படித்த தந்தை அது நல்ல கட்டுரை எனவும் திரும்ப அழகான கையெழுத்தில் எழுதியனுப்பும் படியும் சொன்னார்.

மீண்டும் எழுதி கட்டுரையை கடித உறையினுள் வைத்து ஒட்டியபின் உறையை வாங்கியவர் மேலும் கீழும் பார்த்தார். அவரே அந்தப் பார்வையை மொழி பெயர்த்தார்

''கடிதத்தை உறைக்கு அடங்கத் தக்க வகையில் பக்குவமாக மடித்து உறையில் வைத்து ஒட்டும் போது கடிதத்தைப் பெறுபவர் கிழிக்கும் போதுகூட தவறியேனும் கடிதம் கிழியாத வகையில் உறை யின் ஓரங்களுக்கு மாத்திரம் பசை தடவ வேண்டும்'' கடித உறைக்கு அளவுக்கதிகமாகப் பயன்படுத்திய பசை கட்டுரையையும் சேதமாக்கி விட்டது. இன்றைக்கு அலுவலகங்களுக்கு வரும் கடிதங்களில் பெரும் பாலானவற்றை உறையிலிருந்து எடுப்பதற்குள் அவை துண்டு துண்டாகி விடுகின்றன. கடிதங்கள் மட்டுமல்ல, காசோலைகளும் கூட.

சில விடயங்களை மனதைப் புண் படுத்தாமல் சுட்டிக் காட்டுவதில் கெட்டிக்காரர். ஒரு நாள் மாலை வீட்டுக்குத் திரும்பிய போது வீட்டில் அப்பா மாத்திரம் இருந்தார்.

''என்ன கட்டி சப்பாத்துக் காலிலை ஏதோ மிதிச்சிட்டீர் போலை யிருக்கு. ஒரே மணமாயிருக்கு.'' என்றார்.

காலைத் தூக்கிப் பார்த்து விட்டு ஒன்றுமில்லையென்றேன். அவர் விடவில்லை. ''அப்ப சப்பாத்துக்குள்ளயிருந்து மணக்குதா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாட்களாகக் காலுறைகளைத் தோய்க்காத காரணத்தால் வியர்வையும் அழுக்கும் சேர்ந்துவரும் துர்நாற்றம் என எப்படி அப்பாவுக்குச் சொல்வது?

மெதுவாக காலுறைகளையும் சவர்க்காரத்தையும் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் சென்ற என்னைப் பின் தொடர்ந்த அப்பாவின் கைகளில் அழுக்கான எனது பெனியன் கைலேஞ்சி.

''சேட்டையும் காற்சட்டையையும் மட்டும் தோய்த்து iron செய்தால் போதாது. எல்லா உடுப்புகளையும் சுத்தமாக வைச்சிருக்க வேணும். இல்லையெண்டால் ஊத்தை உடுப்புகளாலை உடம்பு கடிக்கும். வருத்தமும் வரும்'' என்று அப்பா சொன்னது மாலையில் வீட்டுக்குச் சென்று ஆடைகளை களையும் போது நினைவுக்கு வரும்.

அப்பா தொழில் செய்த கடைக்கு அருகிலமைந்த கட்டிடமொன்றில் பல அறைகள். ஒவ்வொரு அறையிலும் தங்கியிருந்தவர்கள் சாப்பிடு வதற்காக கடைக்கு வந்த போதும் சிலரின் அறைகளுக்குச் சென்ற போதும் பல தகவல்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. சொந்த ஊர் நிரந்தர வதிவிடம் வேறாக இருந்தாலும் சிறு சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதால் அவர்கள் யாழ்ப்பாண நகரத்தில் தங்கி யிருந்தார்கள்.

ஒருவர் ஐஸ்கிறீம் விற்பவர். இன்னொருவர் புதிய வீடுகள் கட்டிடங்கள் கட்டுமிடங்களில் சீமேந்து பைகளை வாங்கி வந்து சிறு சிறு பைகளாக ஒட்டி விற்பவர். விளம்பரப் பலகை எழுதுபவர், பாயசம் காய்ச்சி விற்பவர், தையற்காரர், தும்பு மிட்டாய் கச்சான் அல்வா செய்பவர் இப்படிப் பலர் அங்கே தங்கியிருந்தனர். அவர்களில் இரு வரை ஒரு நாள் யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் காணநேர்ந்தது. ஒருவர் கையில் சிறிய காட்போட் பெட்டி. மறு கையில் கண்ணாடிப் பேப்பரில் சுற்றப்பட்ட இனிப்புகள்.

''இருபது தோடம்பழ இனிப்பு பத்து சதம். தாகத்துக்கு நல்லது. இருபது தோடம்பழ இனிப்பு பத்துச் சதம்'' எனக்கூவி விற்றுக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரநிழலின் கீழே நின்ற மற்றவரைச் சுற்றிவர சிறுவர் கூட்டம். ஒரு அட்டைப் பெட்டியில் இனிப்புகளும் ஒரு சிறிய தகரத்தில் தண்ணீரும் வைத்திருந்தார். கையில் இரண்டு அங்குல நீளம் இரண்டு அங்குல அகலத்தில் வெட்டப்பட்ட காகித்தத் துண்டுகளை வைத்திருந்தார்.

அவரிடம் ஐந்து சதம் கொடுத்தால் கையிலிருக்கும் காகித் துண் டொன்றைக் கொடுப்பார். எதுவும் எழுதப்படாத காகிதத் துண்டை தகரத்திலுள்ள தண்ணீரில் போட்டதும் அத்துண்டில் ஒன்று முதல் இருபது வரையிலான இலக்கங்களுள் ஏதாவது ஒரு இலக்கம் தோன்றும். என்ன இலக்கம் தோன்றுகிறதோ அத்தனை இனிப்புகளைக் கொடுப்பார். வெற்றுக் காகிதத்தை தண்ணீரில் போட இலக்கம் தோன்றுவதும் இலக்கத்துக்கேற்ப இனிப்புக் கொடுப்பதும் வேடிக்கையாகத் தோன்ற சில நிமிடங்கள் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஐந்து சதம் கொடுத்து வாங்கும் துண்டுகளில் இடையிடையே 10 அல்லது 12 இலக்கங்கள் தோன்றும் போது அவர் பார்த்துப் பாராமல் இனிப்புகளை அள்ளிக் கொடுப்பதும் அநேகமாக 1 அல்லது 2 அல்லது 3 இலக்கங்கள் தோன்றும் போது கணக்காக இனிப்புகள் கொடுப்பதையும் கவனித்தேன். நானும் ஐந்து சதம் கொடுத்து துண்டு கேட்டபோது என்னை அடையாளம் கண்டு கொண்டதுடன் பணத்தைப் பெற்றுக் கொள்ளாமல் கைநிறைய இனிப்புகளை அள்ளித் தந்து அப்பாவிடம் சொல்ல வேண்டாம் என்றார்.

பணம் கொடுக்காமல் பலர் முன்னிலையில் நிறைய இனிப்புகளைப் பெற்றுக் கொண்டது சந்தோஷத்தைத் தந்தாலும் என மனதை ஏதோ உறுத்தியது.

அன்று மாலை நடந்ததை அப்பாவிடம் சொன்னேன்.

அப்பா அவரை அழைத்து பத்து ரூபா பணம் கொடுத்து ''இந்தாய்யா இனி சின்னம் சிறுசுகளை ஏமாத்தாம நான் சொன்னதைச் செய்'' என்றார்.

பின்னர் நான் அப்பாவிடமிருந்து தெரிந்து கொண்டது-

ஒருவர் பெரும்தொகையான இனிப்புகளை மொத்த விலைக்கு வாங்கி பத்து சதத்துக்கு இருபது இனிப்பு விற்பனை செய்கின்றார்.

மற்றவர் சவர்க்காரத்தை நீரில் கரைத்து அந்த நீரால் கடதாசியில் எழுதினால் அந்த இலக்கங்களை எழுத்துக்களை எல்லோரும் அறிந்து கொள்ளமாட்டார்கள் என எண்ணிக் குறைந்த பெறுமதியுள்ள கடதாசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை அதிக அளவில் குறிப்பாகச் சிறுவர்களை ஏமாற்றி இனிப்பு விற்பனை செய்கின்றார்.

அப்பாவுக்கு ஏமாற்றி வியாபாரம் செய்வதில் உடன்பாடில்லாததால் அவருக்கு அறிவுரை கூறியிருக்கின்றார். அவர் தனது வியாபாரத்தை மாற்றவேயில்லை.

இந்தச் சம்பவம் நடந்த சில நாட்களுக்குப் பின்பும் அவர் இலக்கத் துண்டுகளை வைத்தே இனிப்பு வியாபாரம் செய்ததைக் கண்டு அப்பாவிடம் சொன்னேன். ''அவன் கதையை விடு. நீ ஏமாறாதே'' என்றார்.

பின்னர் சுமார் ஆறேழு மாதங்கள் போயிருக்கும். அவர் பஸ் நிலையத்தில் பொரித்த பருப்பு கடலை டொபி விற்பனை செய்வதைக் கண்டு அப்பாவிடம் சொன்னேன். ''அவனுடைய பிள்ளையை யாரோ ஏமாத்திப் போட்டாங்களாம். என்னட்டச் சொல்லி அழுது கொண்டிருந்தான். அதுக்கப்புறம் ஆளே மாறியிட்டான்'' என்றார் அப்பா.

முற்றத்தை அலங்கரிக்கும் அழகான கோலங்களைப் போடுவது அம்மாவுக்கு கை வந்த கலை. தங்கை அம்மாவிடம் பயின்ற கலையை மேலும் மெருகுபடுத்தி தினமும் விதவிதமாகவும் வித்தியாசமான பொருட்களாலும் கோலம் போட்டு வீட்டைப் பொலிவாக்கி எங்களையும் மகிழ்வித்தாள். தங்கையின் முயற்சியையும் கலையார்வத்தையும் பாராட்டிய தந்தை இந்தியா சென்ற அவர் நண்பரிடம் சொல்லி கோலம் தொடர்பான புத்தகமொன்றை வாங்கிப் பரிசளித்தார்.

தங்கை சில நாட்களாக பலவிதமான பொருட்களைச் சேகரித்து ஒரு நாள் மாலை வீட்டு விறாந்தையையும் முற்றத்தையும் வண்ணக் கோலங்களால் நிரப்பினாள். பெரும்பாலும் மாவையும் தேங்காய்பூவையும் பயன்படுத்தியே கோலம் போடப்படும். தங்கை போட்ட கோலங்கள் வித்தியாசமானது - பல வடிவங்கள் நிறங்கள் உள்ள இலைகளைப் பயன்படுத்தி 'இலைக்கோலம்' அழகான அமைப்பும் கண் கவர் வண்ணமும் கொண்ட பூக்களைப் பயன்படுத்தி 'மலர்க்கோலம்' அரிசி உழுந்து பயறு பருப்பு போன்றவற்றால் 'தானியக்கோலம்' மாலை கோர்க்கப் பயன்படும் மணி போன்ற அலங்காரப் பொருட்களை வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மணிக்கோலம்' இப்படிப் பற்பல. இவற்றுடன் தேங்காய்ப்பூவுக்கு வர்ணம் சேர்த்து செய்யப்பட்ட கோலமும் இருந்தது.

காரணமில்லாமல் விழாக்கோலம் கொண்ட வீடு என்னை வியப்பில் ஆழ்த்த அம்மா வியப்பை விடுவித்தார்:- ''நாளைக்குக் காலமை சிநேகிதப் பிள்ளையள் வருகினமாம். அவைக்குக் காட்டுறதுக்கா பிள்ளை கோலம் போட்டிருக்கு."

''எந்தக்கோலம் வடிவு?" என்று தங்கை கேட்டபோது - ''வீட்டின் பிரதான முற்றத்தில் போட்டிருந்த கோலம்தான் வடிவு" என்றேன். அதிகம் செலவில்லாமல் சிரமமில்லாமல் அரிசிமாவினால் வரையப்பட்ட சாதாரணமான கோடுகளைக் கொண்ட கோலமானாலும் கலையழகையும் தனித்துவத்தையும் கொண்டிருந்த அக்கோலமே வடிவான கோலம் என்ற எனது கருத்தை அம்மாவும் அப்பாவும் ஏற்றுக் கொண்டனர்.

அடுத்த நாள் காலை தங்கையின் சிணுங்கல் சத்தத்தில் விழித்துக் கொண்டோம். வடிவான மாக்கோலத்தையும் தேங்காய்ப்பூக் கோலத்தையும் எறும்புகள் சுவைத்துப் பார்த்திருக்க வேண்டும். அலங்காரக்கோலம் சிதைந்தும் அழிந்தும் உருமாறி அலங்கோலமாயிருந்தது.

கோலம் போடுவதற்கான மாவைப் பக்குவப்படுத்தி கோலம் போடுவதற்குள் சிநேகிதிகள் வந்து விடுவார்கள் என்பதுதான் தங்கையின் கவலைக்குக் காரணம். அப்பா ஒரு சிறு ஓலைப் பெட்டியை எடுத்துக் கொண்டு அங்குமிங்கும் குனிந்து நிலத்திலிருந்து எதையோ எடுத்து ஓலைப் பெட்டிக்குள் போடுவதை அவதானித்தோம். அப்பா கல்லுரலை நிமிர்த்தி அலவாங்கைக் கொண்டு வரும்படி சொன்னார். அப்போதுதான் பெட்டியில் சேகரித்துக் கொண்டு வந்த பொருட்களைப் பார்த்தோம்.

சாதாரணமாக நிலத்தில் காணப்படும் சிறு சுண்ணாம்புக் கற்கள். அப்பா கற்களை உரலில் போட்டு அலவாங்கால் இடித்தார். உரலில் இடித்தவற்றை மீண்டும் பெட்டியில் போட்டுக் கொண்டே ''கோலப்பொடி ரெடி" என்றார்.

''சாதாரணமா ஒரு பிரயோசனமுமில்லாம இருக்கிற இந்த மாதிரிக் கல்லை பொறுக்கி மாவாக்கி தகர டப்பாவிலை போட்டு வைச்சா தேவையான போது கோலம் போடலாம். காசும் வேணாம். எறும்பும் தின்னாது" - அப்பா சொன்னது என் காதில் விழுந்து மனதில் பதிவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் வகுப்பில் ஒருநாள் மாலை நடைபெற்ற ஆங்கிலப் பாடம் என்னை மிகவும் பாதித்தது. ஆசிரியர் வெகு சாதாரணமாக ''What is your father?'' எனக் கேட்க மாணவர்கள் சிலர் டொக்டர், என்ஜினியர் என பெருமைப்பட பலர் கிளார்க் ரீச்சர் என்றனர். கிராமப்புற பாடசாலை யாதலால் சிலர் farmar என்றனர். எனது முறை வந்த போது நானும் farmar என்றேன். எனது பின்னணியை நன்கறிந்த ஆசிரியர் ''கொப்பர் எங்கை கமம் செய்யிறவர்? எத்தினை ஏக்கர் காணி வைச்சிருக்கிறார்?'' என்று கேள்வி மேல் கேள்வி கேட்க தடுமாற்றமும் வெட்கமும் என்னைப் பிடுங்கித் தின்றன.

ஆசிரியர் அத்துடன் நிறுத்தி விடவில்லை. ''கொப்பர் சமையல் வேலை செய்யிறார். My father is a cook எண்ட தலைப்பிலை ஒரு பக்க கட்டுரை எழுதிக்கொண்டு வரவேணும்''. என்றார்

ஒவ்வொரு மாணவனும் அடுத்த நாள் அவர்களுடைய தகப்பனின் தொழிலைப் பற்றி ஆங்கிலத்தில் ஒரு பக்க கட்டுரை எழுதி வர வேண்டுமென்பது ஆசிரியரின் கட்டளை. எல்லா மாணவர்களினதும் கேலிப் பொருளான நான் அன்றுதான் முதன் முதலாக cook என்ற ஆங்கிலச் சொல்லைக் கேள்விப்பட்டேன். வெட்கம் ஒரு புறமிருக்க ஒரு வசனம் கூட எழுத முடியாத நிலையில் ஒரு பக்கக் கட்டுரை.

எப்படி எழுதப் போகின்றேன் என்ற பயம். எனது வேதனைக்கான காரணமறிய அம்மா கையாண்ட தந்திரங்கள் தோல்வியைத் தழுவ எனது நல்ல காலம் தீடிரென அப்பா வீட்டுக்கு வந்தார். அடக்கி வைத்திருந்த வெட்கம் வேதனை எல்லாம் அலறியழும் கண்ணீராக மாறியது. எனது கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீரை அப்பாவின் கைகள் துடைத்தன.

''கட்டி சாப்பிட்ட பிறகு நான் சொல்றன். ஒரு பக்கமல்ல இரண்டு பக்கத்துக்கு சொல்றன் எழுதினாச் சரி''

எனது சந்தேகம் - ''அப்பாவுக்கு ஆங்கிலம் தெரியுமா? - cook என்ற சொல்லையே முதன் முதலாகக் கேள்விப்படும் என்னால் ஒரு பக்கம் ஆங்கிலத்தில் எழுத முடியுமா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவின் பக்கத்தில் கொப்பி பென்சிலுடன் அமர்ந்து புதிய பக்கமொன்றில் My father is a cook என ஆங்கிலத்தில் எழுதினேன். அப்பா கொப்பியைப் பார்த்து விட்டு cook என்ற சொல்லுக்குப் பதிலாக sweet maker என்று எழுதச் சொன்னார்.

ஆச்சரியத்துடன் பார்த்த எனக்கு அப்பா சிரித்துக் கொண்டே பதிலளித்தார்.

''கட்டி நான் செய்யிறது சாதாரண சமையலில்லை - அல்வா, கேசரி, போளி, பூந்தி, ஓமப்பொடி, காராசேவு, மைசூர்பாகு. அதில பல item ரெம்ப sweet ஆக இருக்கும். அதனால நான் சுவீட் மேக்கர்''. அப்பா தான் தயாரிக்கும் பதார்த்தங்கள் அவற்றுக்குத் தேவையான மூலப்பொருட்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்கள் உத்தேச விலை பதார்த்தங்களின் உணவுப் பெறுமானம் பயன்பாட்டுக் காலம் எல்லாவற்றையும் மிக தெளிவாக சிம்பிள் இங்கிலிசில் சொல்லியதால் சுமார் மூன்று பக்கம் எழுத முடிந்தது. அடுத்த நாள் சில நண்பர்கள் தகப்பன்மாரின் பெரிய உத்தியோகங்களை உச்சரித்த பின் வார்த்தைகளின்றித் தடுமாற எனது கட்டுரை ஆங்கில ஆசிரியரைத் தடுமாற வைத்தது. பல சொற்கள் அவருக்குப் புதிது என்பதை அவரே ஒத்துக்கொண்டார்.

அப்பா கடைகளில் உள்ள விளம்பரப் பலகைகள், லொறி, வான் போன்ற வாகனங்களில் எழுதியுள்ள ஆங்கில எழுத்துக்களை பார்த்து எழுத்துக்களை அறிந்து கொண்டதாகவும் பொருட்கள் பொதி செய்து வரும் பெட்டி தகரம் ஆகியவற்றிலுள்ள லேபிள்கள் சிட்டைகள் ஆகியவற்றிலிருந்து அநேக தகவல்களைப் பெற்றுக் கொண்டதாகக் கூறுவார். ''வெட்கப்படாமல் பயப்படாமல் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பேச வேண்டும் எழுத வேண்டும்'' என்று சொல்லுவார். இதனால் என்னைப் பற்றி, எனது தொழிலைப் பற்றி, எனது ஊரைப் பற்றி, எனது நாட்டைப் பற்றி, சமகால நிகழ்வுகளைப் பற்றி ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் சரளமாகக் கதைக்கவும் இதே விடயங்களை இன்னொருவரிடமிருந்து அறிந்து கொள்ள எத்தகைய கேள்விகளைக் கேட்க வேண்டுமென்பதும் தெரிந்து கொண்டேன். அவ்வளவுதான். ஆனால் நான் கடமையாற்றும் இடத்தில் தமிழ் ஆங்கிலம் சிங்களம் ஆகிய மூன்று மொழிகளும் தெரியுமென பிறர் நினைப்பதற்கு sweet makerரின் வழி காட்டல்தான் காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக யாழ்ப்பாணத்தில் பொருட்களை உடமையாக்கும் போது பொருட்களின் விளம்பரத்திலும் அழகிலும் மயங்காமல் நீடித்த காலம் பயன்படக் கூடிய பொருட்களைத் தேடி வாங்கிய காலம் ஒன்றிருந்தது. ஏ போர்டி கார், றலி சைக்கிள், சிங்கர் தையல் மெஷின் என்ற வரிசையில் பிக் பென் மணிக்கூடும் சேர்த்துக் கொள்ளப்படும். எங்கள் வீட்டில் பிக்பென் மணிக்கூடு பிழையில்லாமல் நீண்டகாலம் உழைத்த தற்கு ஒரு காரணமும் இருந்தது.

அந்தக்காலத்தில் பிரபலமான மணிக்கூடு திருத்தும் கடையொன்றிருந்தது. அக்கடையில் இரண்டு மூன்று நாட்களில் ஐந்து ரூபா கட்டணத்தில் மணிக்கூடு 'சேர்விஸ்' செய்து தருவார்கள். அந்தக் கடை ஞாயிற்றுக்கிழமைகளில் பூட்டப்பட்டிருப்பதால் அங்கே வேலை செய்பவர் தனிப்பட்ட வகையில் சில இடங்களுக்குச் சென்று திருத்த வேலைகளைச் செய்வார். அவர் அப்பா வேலை செய்யும் கடைக்கும் ஞாயிற்றுக் கிழமைகளில் வருவார். இரண்டு ரூபாவும் ஒரு போத்தல் மண்ணெண்ணை (அப்போது சுமார் இருபத்தைந்து சதம்)யும் கொடுத்தால் சிறிது நேரத்துக்குள் மணிக்கூட்டை சேர்விஸ் செய்து தருவார். இதில் லாபம் உடனடியாக எங்களுக்கு முன்பாக மணிக்கூடு சேர்வீஸ் செய்யப் படுவதால் களவு வேலைகளுக்கிடமிருக்காது எனப் பலர் நம்பினார்கள். காலத்துக் காலம் அவரால் எங்கள் மணிக்கூடும் சேர்விஸ் செய்யப் பட்டதால் மணிக்கூடு சரியான நேரத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. ஏதாவது உதிரிப் பாகங்கள் மாற்ற வேண்டியிருந்தால் அவர் குறிப்பிடும் உதிரிப் பாகங்களை வாங்கி வந்தால் எங்கள் முன்னிலையில் மாற்றி பழைய பாகங்களை மணிக்கூட்டு உரிமையாளரிடம் கொடுத்து விடுவார். உதிரிப் பாகங்கள் பொருத்துவதற்கென வேறு கட்டணம் வாங்கமாட்டார். இதனால் யாழ் நகரமெங்கும் அவருக்குப் பல வாடிக்கையாளர். நல்ல வருமானம். கடையில் மாதச்சம்பளம்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை கடையில் சில மணிக்கூடுகள் சேர்விஸ் செய்ய ஆரம்பித்த போது நானும் அவருக்குதவியாக நட்டுகளைக் கழற்றி சில பாகங்களை மண்ணெண்ணையில் கழுவி உதவி செய்தேன். அவரும் மணிக்கூடு திருத்தும் முறைகள் சிலவற்றைச் சொல்லித் தந்தார். அவரது மாதச்சம்பளம் ஞாயிற்றுக்கிழமை வருமானம் இவற்றை மனதில் கூட்டிப்பார்த்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா சிரித்தார்: ''வேணுமிண்ணா மணிக்கூடு ரிப்பயர் செய்யிற வேலையைப் பழகலாம். ஆனா ஒரு கடையில வேலை செய்து கொண்டு ஞாயிற்றுக்கிழமை வருமானத்துக்காக வேறை இடத்துக்கு போறது சரியில்ல. எப்பவும் நமக்குத் தொழில் தாறவங்க சம்பளம் தாறவங்கட்ட விசுவாசமாயிருக்கணும். அவங்களுக்கு துரோகம் செய்யக்கூடாது.''

''அப்படியெண்டால் அவரிடம் நாங்கள் மணிக்கூடு சேர்விஸ் செய்யச் சொல்லிக் கொடுக்கிறதும் பிழை'' என்றேன் நான்.

''பிழை தான். அவர் குடும்பம் பெரிசு. இப்படியப்படி உழைச்சாதான் குடும்பத்த காப்பாத்தலாம். அதுக்கு நாம செய்யிற பங்குதான் இது. இது சரியில்ல. இப்படி நாம உழைக்கக் கூடாது.''

இந்த சம்பவம் மனதில் நன்றாகப் பதிந்துள்ளதால் எனது மேலதிகாரிகளுக்கு விசுவாசமாகவும் உண்மையாகவும் நடந்து வருகின்றேன். அதனால் எனது தொழிலிலும் அலுவலக விடயங்களிலும் யாரும் இதுவரை குற்றம் குறை காண முடியவில்லை.

ஆரம்பத்தில் மற்றவர்கள் ஏற்பாடு செய்யும் கலை நிகழ்ச்சிகளில் தான் கலந்து கொண்டேன். பெரும்பாலும் நாடகங்களில் நடித்ததோடு 'நிகழ்ச்சித் தொகுப்பாளராக' அறிவிப்பு வேலைகளையும் செய்தேன். சொந்தமாக ஒரு சைக்கிள் வண்டி கூட இல்லாத நாட்களில் சைக்கிளில் அழைத்துச் செல்வதாக இருந்தால் மேடை நிகழ்ச்சிகளுக்கு சம்மதம் கொடுத்து பங்கு பற்றினேன்.

திடீரென ஒரு திருப்பம். 1972ல் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வவுனியாவில் காப்புறுதி இரவு கலை விழாவை நடாத்திய போது நிகழ்ச்சித் தொகுத்தளிக்க என்னை அழைத்திருந்தார்கள். கொழும்பிலிருந்து வந்த கூட்டுத்தாபன விளம்பர முகாமையாளர் டாபரேக்கு எனது அறிவிப்பு நன்கு பிடித்துக் கொண்டது. அவர் என்னைப் பாராட்டியதோடு வவுனியாக் கிளை முகாமையாளரிடம் ஏதோ இரகசியமாக சொன்னார். அடுத்த நாள் வவுனியாக் கிளை முகாமையாளர் நவரத்தினம் அறிவிப்பு செய்ததற்கான பாராட்டுக் கடிதத்துடன் 250 ரூபா தந்தபோது தான் விளம்பர முகாமையாளர் கிளை முகாமையாளருக்குச் சொன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரகசியம் புரிந்தது. மாதம் முழுவதும் வேலை செய்யும் கிளாக்கனுக்கு 300 ரூபா சம்பளம் - ஓரிரவு அறிவிப்புக்கு 250 ரூபா. பின்னர் மன்னார் கிளிநொச்சி திருகோணமலை போன்ற இடங்களில் அறிவிப்பு வேலைக்கு 250 ரூபாவுடன் போக்குவரத்து தங்குமிட வசதிகள் எனவும் கவனித் தார்கள். காணிவல் பொப்பிசை ஆகியனவும் அறிவிப்பு செய்ய அழைத்தன.

கையில் நல்ல பசை. இடையிடையே சில மணிநேரம் மேடையைக் கலகலப்பாக்கி பெறும் பல நூறு ரூபா பெரிதா? அல்லது மாதம் முழுக்க உழைத்து பெறும் 300 ரூபா பெரிதா? அப்பாவின் அறிவுரை. ‘‘அரசனை நம்பி புருஷனைக் கைவிடக் கூடாது’’ பெரிய நெருக் கடியிலிருந்து தப்பி நிரந்தர வருமானம் தரும் அரச உத்தியோகத்தைக் காப்பாற்றி உயர்வும் பெற முடிந்தது.

70-களின் நடுப்பகுதிகளில் இடையிடையே மேடைக் கவர்ச்சி எனக்கு வலை வீசியது. புகழ் என்பதைவிட பணத்தையும் விரும்பியது மனம். வானொலி மேடைக் கலைஞர்களை வளைத்து கலை நிகழ்ச்சி செய்யக் கூடிய திறமையிருந்தது. வேலை செய்த இடத்தால் பெற்ற செல்வாக்கு விளம்பரத்துக்கும் டிக்கட் விற்பனைக்கும் உதவி செய்தது. ஓரிரவுக்குள் பெரிய புகழ் மட்டுமல்ல - பல ஆயிரக்கணக்கான ரூபா பணமும் சேர்ந்து விட்டது.

ஒரு வித மயக்கத்தோடு ஒலிவாங்கியில் நான்: ‘‘பல சிரமங்களுக்கு மத்தியில்தான் இந்தக் கலை நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தேன். கடந்த சில நாட்களாக அங்குமிங்கும் அலைந்து திரிந்ததில் சரியான உறக்க மின்றி சாப்பாடில்லாமல் இந்த நிகழ்ச்சியை உங்களுக்காக ஒழுங்கு செய்தேன். இன்னும் சொல்வதானால் இரண்டு நாட்கள் ஒரு கண்ணுறக்க மில்லை. இன்று ஒன்றுமே சாப்பிடவில்லை.’’

எதுவோ சாதனை நிகழ்தியவன் போல நான் சொன்னதும் எனது நண்பர் சிலர் என்னை அலாக்காகத் தூக்கிக் கொண்டு மேடைக்கு முன்னால் ஊர்வலம் வந்தனர்.

அன்றிரவு அப்பாவிடம் வாங்கிக் கட்டினேன். ‘‘கட்டியை யாராவது இப்படியொரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யச் சொல்லிக் கேட்டாங்களா? எதுக்குப் பொய் சொல்ல வேணும்? கெஞ்சி மண்டாடி டிக்கட் வித்திட்டு சாப்பிடயில்ல - தூங்கயில்ல ஏன் பொய் சொல்லணும்? காசு கொடுத்து டிக்கட் எடுத்து program பார்க்க வந்திருப்பாங்களே தவிர கட்டியின்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சைக் கேட்க வந்திருக்க மாட்டாங்க. பேச்சில எந்தக் கலையழகும் இல்லை. பொருத்தமுமில்லை. ஓரே அறுவை. நீங்க ஒழுங்கு செய்யிற நிகழ்ச்சியில நீங்களே உங்களப் பாராட்டக் கூடாது. வேற நிகழ்சியில மற்றவங்க உங்களப் பாராட்டணும். அதுதான் உண்மையான பாராட்டு"

இதைவிட இன்னொரு முக்கிய விடயம் சொன்னார்: ''இப்போ கொஞ்ச பணம் வந்திருக்கலாம். இது நிலைக்காது. இப்படியே வாற பணம் இப்படியே போயிடும் கொஞ்சமெண்டாலும் நிரந்தர தொழில் மூலம் தேட முயற்சிக்க வேணும். கொடி கட்டிப் பறந்து இலட்சக் கணக்கில சம்பாதித்த சினிமாக்காரங்களே றோட்ல நிக்கிறாங்க.''

இரவுக் கலை நிகழ்ச்சியில் பலரிடம் டிக்கட் மூலம் பெற்ற பணத்தை இரவுக் கலை நிகழ்ச்சியே என்னிடமிருந்து பறித்துக் கொண்டது. இருந்தாலும் என்னை நான் பாராட்டக் கூடாது என்பதுடன் மேடைகளிலும் பொது இடங்களிலும் பேசும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் சிலவற்றையும் தெரிந்து கொண்டேன்.

அப்பாவுடன் நட்பைப் பேணிய பணக்காரக் குடும்பங்களில் அதுவு மொன்று. இரண்டு குடும்பங்களும் வாசிப்பதில் ஆர்வமுள்ளதால் புத்தகங்கள் கை மாறும். தொலைக்காட்சிப் பெட்டிகள் வருவதற்கு முன் வானொலிப் பெட்டிகள் செல்வாக்கு செலுத்திய காலம். ட்ரான் ஸிஸ்டர்கள் கண்டு பிடிப்பதற்கு முன்பாக வால்வுகள் இணைக்கப்பட்ட வானொலிப் பெட்டிகளின் இயக்கத்துக்கு ஏரியல் வயர் கட்டுவது அவசியம். வாசிப்பில் ஆர்வம் மிக்க குடும்பம் வானொலி வாங்கிய போதும் மரத்திலும் கூரையிலும் ஏறி ஏரியல் வயர் கட்டுவதில் வெற்றி பெறவில்லை.

புத்தகத்துடன் சென்ற என்னை மரத்தில் ஏற்ற முயன்று தோல்வி கண்டதற்குக் காரணம் எனக்கிருந்த பயமே! ஏரியல் வயர் கட்டும் போது பத்து ரூபா கூலி கொடுக்கக் காட்டிய தயக்கம் வானொலியின் இயக்கத்தைத் தாமதித்தது. அப்பாவிடம் அவர்கள் கதையைச் சொன்னேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘செட்டிக்கு வேளாண்மை சென்மப் பகை - பத்து ரூபாதானே - ஏறத் தெரிந்தவங்ககிட்ட சொல்லிக் கட்டிடுங்க. எல்லாருக்கும் அந்த வேலை சரிப்பட்டு வராது’’ என்றார்.

வீட்டுக்கார ஐயா நானூறு ரூபா கொடுத்து வாங்கிய வானொலிக்கு ஏரியல் வயர் இணைப்புக்கு பத்து ரூபா செலவழிக்க தாமதித்ததை அம்மாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ஒரு நாள் மாலை சுமார் ஏழு மணி. மெல்லிய இருட்டு. யாரும் வரமாட்டார்கள் என்ற எண்ணத்தோடு முற்றத்தில் நின்ற மரத்தினருகே மேசையை இழுத்துக் கொண்டு வந்து வைத்து மேசையின் மேலே கதிரையொன்றை வைத்து கதிரைக்கு மேல் ஸ்ரூல் ஒன்றை வைத்து ஏரியல் வயரையும் எடுத்துக் கொண்டு கால் பாதம்வரை நீண்டிருந்த சேலையை உயர்த்தி உள்ளே சொருகிக் கொண்டு சிரமத்தோடு மேலே ஏறியவேளை பார்த்து வந்த காரின் வெளிச்சம் அம்மாவை நிலை குலையச் செய்ய குப்புற விழுந்து விட்டார். ஒட்டகப்புலத்தில் புக்கை கட்டி நோவெண்ணை வாங்கிய செலவு பத்து ரூபாவைப் போலப் பல மடங்கு. சில சில்லறை விடயத்தில் கஞ்சனைப் போல நடந்து பெரும் தொகை இழக்கக் கூடாது. பெரிய ஆபத்தில் சிக்கக் கூடாது என்பார்.

❦ ❦ ❦

புதிதாக வியாபாரம் ஆரம்பிக்கும் கடையொன்றில் அப்பாவையும் அழைத்திருந்தார்கள். பால் காய்ச்சுவதற்கு முன்பாக அப்பாவின் கேள்விக்கு ‘‘சுத்தமான பால்’’ என்று யாரோ பதில் சொன்னார்கள். ‘‘பாத்திரம் சுத்தமாகக் கழுவியதா?’’ எனக் கேட்ட போது - ‘‘இது ஹோட்டலில் பாவிச்ச கரிப்பிடிச்ச பாத்திரமில்லை. புதிசா வாங்கினது’’ என்று யாரோ பதில் சொன்னார்கள்.

அடுப்பில் சூடாகிக் கொண்டிருந்த வெள்ளை நிறப்பால் சிவப்பு நிறமாக மாறிக் கொண்டிருந்த போது ஒவ்வொருவரும் ஒருவரையொரு வர் மாறி மாறிப் பார்த்தனர்.

எல்லோர் முகத்திலும் கேள்விக்குறி-

அப்பா அமைதியாகச் சொன்னார்: ‘‘பயப்படாதீங்க. பாத்திரம் புதிசு. மெழுகு பூசியிருக்காங்க (sealing wax) நீங்க சுத்தமாகக் கழுவ யில்ல.’’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா வேலை செய்யும் கடைக்கு அடுத்த கட்டிடத்தில் ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு தொழில் செய்வோர் வசித்து வந்தனர். இரண்டாவது அறையில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த தையல்காரர். சிறுவயதில் அவரின் கைவண்ணத்தில் உருவான சேட்டும் காற்சட்டையும் என்னை அழகுபடுத்தின. நேர்த்தியான தையல் சாதாரணமான கூலி. இதனால் அவரது தையல் மெஷின் எப்போதும் ஓடிக் கொண்டிருக்கும். பெருநாள் காலங்களில் இரவில் கூட தையல் மெஷின் தூங்குவதில்லை.

துணியைத் தைப்பதற்களவாக வெட்டிய பின் கழித்து விடப்படும் துண்டுகள் வெட்டுத்துண்டு என அழைக்கப்படும். மெஷினருகே வைக்கப் பட்டிருக்கும் காட்போட் பெட்டி வெட்டுத்துண்டுகளால் நிரம்பி வழியும். சிறு வயதில் வெட்டுத்துண்டும் எனது விளையாட்டுப் பொருள்களில் அடங்கும். அவற்றைப் பயன்படுத்தி காற்றாடிக்கு வால் கட்டுவேன். பொம்மைகள், சிறு அலங்கார வேலைகள் இப்படிப் பல.

வெட்டுத்துண்டுகள் தேவைக்கு மேலதிகமாகக் கிடைத்ததால் நண்பர்களுக்கு உபயம் செய்து நட்பையும் வளர்த்துக்கொண்டேன். வெட்டுத்துண்டுக்கு கிராக்கி அதிகமாகிய நேரத்தில் தையற்காரர் இடத்தை மாற்றி விட்டார்.

''அவர் இப்போ மலாயன் கபேக்கு முன்னால் பெரிய கடையெடுத்து பத்து மெஷின் போட்டு சேட் factory நடத்திறார்'' என்ற அப்பா ''இனிமே வெட்டுத்துண்டு எடுக்க முடியாது. கொஞ்சம் கூட waste இல்லாம சேட் தைச்சிடுவார்'' என்றும் தெரிவித்தார்.

ஒரு மெஷின் வைத்துத் தைக்கிற போதே வெட்டுத்துண்டால் பெட்டி நிரம்பி வழியும். பத்து மெஷின் எண்டால்... அப்பா பொய் சொல்கிறார் என்ற எண்ணத்துடன் மலாயன் கபேக்கு முன்னாலுள்ள தொழிற் சாலையைத் தேடிப்பிடித்தேன்.

அப்பா சொன்னது உண்மைதான். பத்து மெஷின்கள் வேறு வேறு அளவான சட்டைகளை உருவாக்கிக்கொண்டிருந்தன. இரண்டு சிறுவர்கள் சுறுசுறுப்பாக பொத்தான் தைப்பதிலும் பொத்தான் துவாரம் தைப்பதிலும் ஈடுபட்டுக்கொண்டிந்தனர். பெரிய மேசையில் நீளமான துணி விரிக்கப்பட்டு பல அளவுகளில் வெட்டப்படுகின்றன. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரங்குலத்துணி கூட வெட்டுத்துணியென கழிக்கப்படுவதில்லை. ஒருவர் சேட் தைப்பதற்கு இரண்டு யார் துணி கொடுத்தால் அதில் சிறிதளவு துணி வெட்டுத்துணியாகக் கழிக்கப்படுகிறது. நூற்றுக்கணக்கான சட்டைகள் தைக்கும் போது சிறிதளவு துணி கூட சேதமாகாமல் இருந்தது ஆச்சரியத்தை தந்தது.

இந்த அனுபவம் 'அருந்தலான வளங்களிலிருந்து உச்சப் பயன்பாடு' என்ற முகாமைத்துவ உரையைத் தயாரிக்க உதவியது.

''எப்படித் துடைத்தாலும் முகம் பார்க்கும் கண்ணாடி தெளிவா யில்லை. எண்ணை மாதிரியிருக்கு'' என்ற போது அப்பா பற்பொடியால் முகம் பார்க்கும் கண்ணாடியைத் துடைக்கச் சொன்னார். இப்படியே அரிக்கன் லாம்புச் சிம்னியை வீபூதியைப் பயன்படுத்தி துடைக்கச் சொன்னார்.

ஒரு நாள் எனது சீப்பு அழுக்காக இருந்ததால் துப்பரவாக்குவதற்காக சீப்புப் பற்களிடையே தும்பை விட்டு படாதபாடு பட்டேன். அப்பா அதை வாங்கி பாவித்த பல் துலக்கும் பழைய தூரிகையால் சவர்க்கார நீரையும் சேர்த்து நொடிப்பொழுதில் துப்பரவாக்கி விட்டார்.

பள்ளி மாணவப்பருவத்தில் பாடசாலை விடுமுறை நாட்களிலும் வார இறுதியிலும் யாழ்ப்பாணம் செல்லும் போது அப்பா மாலை வேளைகளில் முற்றவெளிக்கோ அல்லது கூட்டங்கள் நடைபெறும் இடங்களுக்கோ என்னை அனுப்பி வைப்பார். பின்னர் இரவுச் சாப்பாட்டுக் குப்பின் கூட்டங்களில் யார் யார் என்ன பேசினார்கள் என்பதை அப்பாவுக்குச் சொல்ல வேண்டும். அதன் பின்பு இரண்டாவது நாள் பத்திரிகைச் செய்திகளைப் பார்வையிட்டு நான் சொன்னவற்றை ஒப்பிடுவார். இது எனது கிரகிப்புத்திறனையும் பெரிய பேச்சுக்களை அவற்றின் சாரம் கெடாமல் சுருக்கிச் சொல்லக்கூடிய திறனையும் வளர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சனிக்கிழமை இரவு ஒன்பது மணிக்கு முற்றவெளியில் பிரமுகர் ஒருவர் பேசியது ஞாயிற்றுக்கிழமை பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக இடம் பெற்றிருந்ததால் தந்தையாரிடம் அது பற்றிக் கேட்டேன்.

''கொழும்புப் பத்திரிகைகள் சனிக்கிழமை மாலையில் அச்சிடப்பட்டு இரவு தபால் புகையிரத மூலம் யாழ்பாணம் வருகின்றன. அப்படியானால் இரவு ஒன்பது மணிக்கு இடம் பெற்ற பேச்சு...'' என நான் பேசி முடிப்பதற்கு முன்பாக அவர் சொன்னார். ''இது பெரிய இடத்து விஷயம். எழுதித் தயாரிக்கப்பட்ட பேச்சை முன்கூட்டியே பத்திரிகைக்கு கொடுத் திருப்பார்கள்..சில விஷயங்களைத் தெரிந்தாலும் தெரியாதது மாதிரி காட்டிக்கொள்வது நல்லது.''

காலம் போகப் போகத்தான் 'வாய் திறந்து மாட்டிக் கொண்டு முழிப்பதைக் காட்டிலும் வாயை மூடிக்கொண்டு ஒன்றும் தெரியாதது போல முழிப்பது நல்லது' என்பதை நன்றாக உணர்ந்து கொண்டேன்.

எங்கள் கிராமத்தில் எடுத்ததற்கெல்லாம் சாத்திரம் பார்ப்பார்கள். பல்லி விழுந்தால், பல்லி சொன்னால் பஞ்சாங்கத்தைப் புரட்டுவார்கள். காகம் கரைந்தால் அதற்கும் ஏதாவது சொல்வார்கள். ஓணான் குறுக்கே போனால் கூடாது என்று எப்போதும் ஏதாவது சொல்லிக் கொண்டே யிருப்பார்கள். அப்பா சகுனம் சாத்திரம் எல்லாவற்றிலும் நம்பிக்கை வைப்பதில்லை. தெய்வ நம்பிக்கை இருந்தால் வேறு நம்பிக்கை தேவை யில்லையென்பார் அணில் குறுக்காகச் சென்று நல்ல காரியம் ஒன்றும் ஆகவில்லை. அதனால் ஓணான் குறுக்காகப் போனாலும் கெட்டகாரியம் எதுவும் நடக்காது என்று சொல்லுவார்.

எழுது வினைஞனாகக் கடமையாற்றி நிர்வாக சேவைக்குப் பதவி உயர்வு பெற்றதும் அக்காலத்தில் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் இரவு புகையிரதத்தில் ஏறி கொழும்பு வருவதாக ஏற்பாடு. மறந்து போகக்கூடாது என்பதற்காக சாப்பாட்டை கட்டியெடுத்து வாசலருகே வைத்தனர். இரவு நேரமாகையால் அரிக்கன் லாம்பையும் கொழுத்தி வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை ஏற்றிச்செல்வதற்கான வாகனம் வந்தது தான் தாமதம். பூனை குறுக்கே குதித்தோட அரிக்கன் லாம்பு பூனையின் கால்களுக் குள் இடறுண்டு நிலத்தில் சரிய சிம்னி உடைந்து சிதறியது. விளக்கு உடைந்ததை ''ஐயோ! முழுவியளம் சரியில்லை'' என்று யாரோ சொன்னார்கள்.

அப்பாவின் சிரிப்பு : ''சாப்பாட்டை ருசியாகச் சமைத்தால் பூனை வரும். சாப்பாட்டுக்குக்கிட்ட விளக்கை வைச்சிருந்தா பூனை விளக்கைத் தட்டிப்போட்டு சாப்பாட்டை எடுக்கும். இதையெல்லாம் பார்த்தா ஒண்ணும் செய்ய முடியாது. தம்பி புறப்படும்''

முதல் முதல் ஒரு பெரிய பதவியை ஏற்பதற்காக புறப்படும் போது பூனை குறுக்கே வந்தது என்று தயங்கினாலும் அப்பா தந்த தைரியம் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தந்தது. பதவிக்கு வந்து 25 வருடங்கள் பூர்த்தி. எந்த விக்கினமும் இது வரை இல்லை.

எங்கள் ஊரில் ஒவ்வொரு காணிக்கும் ஒவ்வொரு பெயர். அப்பாவும் அம்மாவும் வாங்கிய காணியின் பெயர் ''கோரைத்தரை''. யாழ்பாணத்தில் பயிர்கள் செழித்து வளரும் பசளைத் தன்மை கொண்ட சிவப்பு நிறமண் கொண்ட நிலங்களும் உண்டு.

கோரைப்புல் நன்கு வளரும் மணற்பாங்கான நிலம் - கோரைத்தரை. நீரை உறிஞ்சுகின்ற தன்மை கொண்ட மண். வாய்கால் வழி நீர் பாய்ச்சி பயிர் வளர்ப்பது சிரமமென்பதால் சாப்பிட்ட பின் கை கழுவும் இடத்தில்- சட்டி பானை கழுவும் இடத்தில் வாழைக்குட்டி வைக்க சிறுவனான என்னை ஊக்குவித்தார். வாழைக்குலையில் இடைப்பழம் பழுத்ததும் பக்குவமாக வெட்டி ஒரு சீப்பு பழத்தை சாப்பிடச் சொல்லி மற்றவற்றை விற்றுப் பணத்தை என்னிடம் தந்து விட்டார். பழத்தையும் சாப்பிட்டு பணத்தையும் கண்டால் சும்மா இருப்பேனா? இப்படியே தங்கையை சமையல் வேலைகளிலும் வீட்டு வேலைகளிலும் அம்மாவுக்கு உதவியாக இருக்கப் பழக்கினார். அரிசி புடைக்கும் போது ஒதுக்கித் தள்ளும் குருணல் அரிசியை குப்பையில் வீசாமல் அதைப் போடு வதற்காக கோழி வளர்க்கச் சொல்லி முட்டை விற்கும் காசு தங்கைக்குச் சொந்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு வாழைத்தோட்டம், பயிற்றம் செடி, பப்பாசி எனச் சற்றுப் பெரிதானது. ஒரு கோழி வளர்க்க ஆரம்பித்த தங்கை படிப்படியாக எண்ணிக்கையைக் கூட்டி ஆடும் வளர்க்க ஆரம்பித்தாள். வீடு முற்றம் ஆகியவற்றைத் துப்பரவாக வைத்திருப்பதும் தங்கையின் கடமை. குப்பை விற்கும் பணமும் அவளுக்குத்தான் சொந்தம். மாணவர்களான பிள்ளை களிடம் பெற்றோர் கடனாகப் பணம் பெற்று சிறு வட்டியுடன் திருப்பிக் கொடுத்த சம்பவங்களும் உண்டு.

வீட்டுத் தோட்டத்தில் ஈடுபாடு அதிகரித்ததை அவதானித்த தந்தை ''இந்த வருடம் நல்ல மாங்கன்று கொஞ்சம் வாங்கி வைக்க வேணும்'' என்றார்.

தந்தையின் கருத்தை உள்வாங்கிக் கொண்ட தாயார் ஒருநாள் கிராமத்துச் சந்தையிலிருந்து பத்து சிறிய ஒட்டு மாங்கன்றுகளை வாங்கி வந்தார். மூங்கில் குழாய்களில் மண் நிரப்பி மாங்கொட்டையை விதைப்பார்கள். பின்னர் மாங்கொட்டையிலிருந்து செடி முளைத்துச் சிறு மரமானதும், நுனிப்பகுதியை வெட்டி ஏற்கனவே முதிர்ச்சி பெற்ற நல்ல இன மாமரத்தின் கிளைகளை வெட்டி ஒட்ட வைத்திருப்பார்கள். இப்படி ஒட்ட வைத்த மாமரத்தை யாழ்ப்பாணப் பகுதியில் 'ஒட்டுமா' என்றழைப்பர்.

விதையிலிருந்து முளைத்து வரும் மாமரம் வேறு வகையானதாக இருந்தாலும், சுவை நிறைந்த கனி தரும் மரத்தின் கிளையை ஒட்டி, அந்த மரத்தின் பழங்கள் எல்லாவற்றையும் சுவையானதாக அமையும்படி தோட்டக்காரன் மாற்றி விடுவான். குறுகிய காலத்துக்குள் நல்ல இனிப்பான கனி தரும் 'ஒட்டுமா'வைத் தேடி வாங்கி வைக்கும் வழக்கம் இருந்தாலும், சிலர் போலியான ஒட்டுமாவை உற்பத்தி செய்து ஏமாற்றும் வழக்கமும் இருந்தது.

அம்மா ஆவலுடன் வாங்கி வந்த 'ஒட்டுமா' போலியானது. சுவை யான பழத்துக்குப் பதில் புளிப்பான மாம்பழங்களையே நான்கு வருடங் களுக்குப் பிறகு பெறமுடிந்தது. மாமர விடயத்தில் வியாபாரி ஒருவனால் ஏமாற்றப்பட்ட கவலை அம்மாவுக்கிருந்தது.

அப்பா அம்மாவுக்கு ஆறுதலளித்தார், ''பரவாயில்லை. இது ஒரு பாடம். திருநெல்வேலி விவசாயப் பண்ணையிலோ அல்லது நன்றாகத் தெரிந்தவர்களிடமோ 'ஒட்டுமா' வாங்கி வைத்திருந்தால் ஏமாற வேண்டி யிருக்காது. பொருட்களை வாங்குவதற்கு முதல் விற்பவர் பற்றியும்



236766
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களின் தன்மை, விற்பவரின் குணநலன் பற்றியும் அறிந்திருக்க வேண்டும்.''

பின்பு சற்று விபரமாகச் சொன்னார்:- ''நிரந்தர முகவரியைக் கொண்ட நிறுவனங்கள், நன்மதிப்பைத் தேடி வைத்துள்ள வியாபாரிகள் தங்கள் பெயரைக் காப்பாற்றிக் கொள்வதில் எப்போதும் கவனமாக இருப்பார்கள். மலிவான பொருட்கள் எல்லாம் தரமான பொருட்கள் எனச் சொல்ல முடியாது. யாழ்ப்பாணத்தில் மிகக் குறைந்தளவு நிலப் பரப்பை தோட்டச் செய்கைக்குப் பயன்படுத்தினாலும் சிறந்த முறை களைக் கையாள்வதனாலேயே பயன்பெறுகிறார்கள். உதாரணமாக மாமரம், பலாமரம் போன்றவற்றை வைப்பதற்கு முன் பலன் தரக்கூடிய மரமா என்பதை அவற்றின் தாய் மரம் அல்லது விதை பெற பயன்படுத்தப் பட்ட மரம் என்பதிலிருந்து அறிந்து கொள்வார்கள் என்பதையும், ஒட்டு மரமானால், ஒட்ட வைப்பதற்காக கிளை எடுக்கப்பட்ட மரத்தைப் பற்றி அறிந்து கொள்வதிலும் அக்கறை காட்டுவார்கள். மரத்தை நாட்டும் போது இடத்தை தேர்ந்தெடுப்பதிலும் கவனமாக இருப்பார்கள். மரம் வளரும் காலத்தில் விலங்குகளால் பாதிக்கப்படாதிருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் பிடுங்கப்படாத இடத்தில் மரம் வைக்கப்பட்டு வளர்வதையும் உறுதிப்படுத்திக் கொள்வார்கள். செடி வளர்ந்த பின் தவறான மரம் என்றோ அல்லது வைத்த இடம் தவறான இடம் என்றோ கருதக் கூடாது. முன்னெச்சரிக்கையாக நடக்க வேண்டும் என்பதில் யாழ்ப்பாணத் தோட்டக்காரர் கரிசனையானவர்கள்'' என்றார்.

எரு, இலைகுழை போன்ற இயற்கைப் பசளைகளோடு தோட்டப் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்ட எங்கள் கிராமவாசிகளுக்கு செயற்கை உரம் விற்கும் கடையின் அறிமுகம் 50களின் பிற்பகுதியில் கிடைத்தது.

இந்த அறிமுகத்தினால் இயற்கைப் பசளைகள் பயன்படுத்தப்படாமல் வீணானது ஒருபுறமிருக்க ஏழ்மை நிலையில் வாழ்ந்த கிராமத்துத் தோட்டக்காரர்கள் செயற்கை உரக் கொள்வனவிற்கு பெருமளவு பணம் செலவிட்டு, உற்பத்திச் செலவை அதிகரித்தனர். அப்போது எங்கள் கிராமத்து தோட்டக்காரர் இரண்டொருவருடன் அடிக்கடி அப்பா பரிமாறிய கருத்துக்கள் 90களின் நடுப்பகுதிகளில் அரசாங்க அதிபராக கடமை யாற்றியபோது விவசாயிகள், தோட்டக்காரர்கள் மத்தியில் என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளத்தருநராக RESOURCE PERSONஆக அறிமுகம் செய்தது.

உதாரணமாக வீட்டுக்கூரைகளுக்கு வேய்ந்த ஓலைகள் ஓரிரு வருடங்களின் பின் அகற்றப்பட்டு, தோட்டங்களுக்குக் கொண்டு செல்லப் படுகின்றது. அந்த ஓலைகள் உரமாக நிலத்தில் தாழ்க்கப்படும் போது, அதே ஓலைகள் பசளையாக மட்டும் பயன்படாமல், அடி நிலத்திலிருந்து களைகள் முளைத்து மேலே வராமல் தடுக்கும் தடுப்பெல்லையாகவும், பயிர்களுக்காக ஊற்றப்படும் நீர் தரையின் கீழ்ப் பக்கத்தை நோக்கிச் செல்வதைத் தடுக்கும் தன்மை கொண்டதாகவும் WATER HOLDING CAPACITY ஓலைகள் இருக்கின்றன என அப்பா சொன்ன கருத்து என் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது.

தொழில் காரணமாக கொழும்புக்கும் பிற மாவட்டங்களுக்கும் சென்றபோது உணவுத் தேவைகளுக்காக சாப்பாட்டுக் கடைகளை நாடினேன். பிளாஸ்டிக் வகைகளைச் சேர்ந்த கோப்பைகள், கிளாஸ், பொலித்தீன் வகையைச் சேர்ந்த கண்ணாடிப் பேப்பர்கள் ஒருவகைக் கவர்ச்சியை ஏற்படுத்தின.

எழுபதுகளில் அவற்றை தில்லைப்பிள்ளை கிளப்பிலும் அறிமுகம் செய்ய வேண்டுமென்று அப்பாவிடம் எடுத்துச் சொன்னபோது அவர் தடுத்துவிட்டார். ‘‘வாழையிலையும் வாழைத்தடலும் இல்லாத காலத்தில் பொலித்தீனைப் பற்றி யோசிப்போம். அலுமினியப் பாத்திரங்கள் பழசானாலும் அவற்றை உருக்கி இன்னொரு பொருளாக்குவார்கள். பிளாஸ்டிக்கை எரித்தால் வரும் புகை மனிதனுக்குக் கூடாது. மண்ணில் தாழ்த்தாலும் அது மண்ணில் உக்காது. கடலில் எறிந்தாலும் அது தாழாமல் மிதக்கும்’’ இப்படி பலவற்றைச் சொல்லி தடுத்துவிட்டார்.

ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு ‘பொலித்தீன் பாவனைக்குத் தடை’, பிளாஸ்டிக்கால் ஏற்படும் தீங்குகள்’ என்ற தலைப்பில் வரும் செய்திகளை படிக்கும்போது தில்லைப்பிள்ளை கிளப் பசியைப் போக்க மட்டுமில்லாமல் சூழலைப் பாதுகாக்கவும் நடவடிக்கை மேற்கொண்டது போல என்னால் உணர முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தின் மத்தியில் மூன்று வீதிகளும் இணையும் சந்திக்கருகே பலவிதமான பொருட்களையும் விற்பனை செய்யும் சில கடைகள் இருந்தன. சந்திக்குச் சிறிது தூரம் தள்ளி தார்வீதியுடன் ஓர் ஒழுங்கை இணையும் இடத்தில் இருந்த கடைக்குப் பெயர் மூலைக்கடை. 'மூலைக்கடை' என விளம்பரப் பலகை இல்லாத போதும், தார்வீதி வழியாகப் போவோர் வருவோர் வீதியோரம் நின்று பொருட்களைக் கொள்வனவு செய்யும் அதேவேளை ஒழுங்கை வழியாக வருவோர் தார்வீதிக்கு வராமல் ஒழுங்கையோரம் நின்று பொருட்களைக் கொள் வனவு செய்யக்கூடிய வசதியும் இருந்தது.

எங்கள் வீட்டிலிருந்து பல கடைகளைத் தாண்டித்தான் மூலைக் கடைக்குச் செல்ல வேண்டியிருந்தாலும், மூலைக்கடையிலேயே பொருட் களை வாங்க வேண்டும் என்பது அப்பாவின் உத்தரவு. அதற்கான காரணத்தை அப்பாவே சொன்னார்.

சில ஆசிரியர்கள், பல பெரியவர்கள் சிகரெட், சுருட்டு போன்ற வற்றைப் புகைப்பதால் மாணவர்களையும் குழந்தைகளையும் கடை களுக்கு அனுப்பி புகைத்தல் பொருட்களை வாங்குவது வழக்கம். மூலைக்கடை உரிமையாளர் வளர்ந்தவர்களுக்கு மட்டுமே சிகரெட், சுருட்டு போன்றவற்றை விற்பனை செய்தார். அவரிடம் ஆசிரியர்களின் பெயர் சொல்லியோ பெற்றோர்களைச் சொல்லியோ பணம் கொடுத்தும் சிகரெட், பீடி, சுருட்டு வாங்க முடியாது. இலாபம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. தன்னால் சமூகம் நட்டப்படக் கூடாது என்ற மூலைக் கடைக்காரரின் இலட்சியம் அப்பாவுக்குப் பிடித்துக் கொண்டது.

அந்த மூலைக்கடைக்காரரும் அப்பாவும் பல விடயங்களைப் பகிர்ந்து கொண்டது தெரியும். ஒரு தடவை மனித சமுதாயத்துக்குச் செய்யும் நன்மையாகக் கருதி விற்பனை கூடிய வாரப் பத்திரிகை சிகரெட் விளம்பரங்களைத் தனது சஞ்சிகையில் இடம் பெறாது எனப் பகிரங்கப்படுத்திய போது, மூலைக்கடை வியாபாரியும் இலாபம் தரக் கூடிய சிகரெட் விற்பனையை நிறுத்திவிட்டார்.

மாணவனாக இருந்த காலத்தில் சமுதாயச் சிந்தனையைப் பற்றி நான் பெரிதாக கருதாத போது ஓரளவுக்கு வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடைந்துள்ள இன்றைய நிலையில் அப்பாவின் சிந்தனையையும், மூலைக்கடைக்கார முதலாளியின் சிந்தனையையும் பல தடவை எண்ணி யுள்ளேன். இலாபத்தை மட்டும் நோக்காகக் கொண்டு செயற்படாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளிகளும் இருக்கின்றனர்.

தீபாவளி வருஷம் என பெருநாட்கள் வரும்போது கடையிலுள்ள தொழிலாளிகள் சட்டை, சாரம், வேட்டி போன்ற புது உடுப்புகள் வாங்குவார்கள். வாங்கிய புது உடுப்புகளை இரவு கடை பூட்டியதும் மற்றவர்களுக்குக் காட்டி மகிழ்வார்கள்.

அந்த இளம் தொழிலாளி அதிகம் படிக்காத போதும் அழகான ஆடைகளுக்காக அதிக பணம் செலவழித்ததோடு தன்னைப் படித்தவன் என்று மற்றோருக்கு காட்டுவதற்காக இரண்டொரு சஞ்சிகைகளையும் கையில் வைத்திருப்பான். சில படங்களைப் பார்ப்பதற்காகவும் மற்றவர்களுக்குக் காட்டுவதற்காகவும் ஆங்கில சஞ்சிகையையும் வைத்திருப்பான். அவன் புதிதாக வாங்கி வந்த 'சேட்' மிக நன்றாக இருந்தது.

''சேட் பிரமாதம்'' என அப்பாவும் ஒரு பாராட்டு கொடுத்தார்.

பாராட்டுகளினால் மனம் நிறைந்த தொழிலாளி சொன்னான், ''இது நல்ல திறமான துணி. சாயம் போனாலும் துணி கிழியாது. தையலும் அறாது.''

''அப்படியா?'' வேறு சில தொழிலாளரின் ஆச்சரியம்.

அவன் தொடர்ந்தான். ''துணி கிழிந்தாலும் சாயம் போகாது. நிறம் மாறாது''

மீண்டும் சில தொழிலாளர் ஆச்சரியப்பட்டனர். ''அப்படியா?''

அவனின் அசட்டுச் சிரிப்பு, ''இது ஒரே ஒரு சேர்ட்தான் இருந்தது. நிறம் மாறினாலும் சேட் கிழியாது. சேட் கிழிஞ்சாலும் நிறம் மாறாது. எனக்காக புடவைக்கடை முதலாளி விலை குறைச்சுத் தந்தவர்''

அப்போதுதான் அப்பா பெரிதாகச் சிரித்தார், ''என்னய்யா சொன்னே! நிறம் மாறினாலும் துணி கிழியாது. துணி கிழிந்தாலும் நிறம் மாறாது. ஒரே ஒரு சேர்ட்தான் இருந்தது. அதையும் முதலாளி விலை கொறைச்சுக் கொடுத்தார். இது வழக்கமாக எல்லா முதலாளிமாரும் சொல்லுறது. செய்யிறது. நாம ஏமாறக் கூடாது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா சொல்லிய பின்தான் முன்னுக்குப் பின் முரணாக தொழிலாளி சொல்லியதும், சேட் விற்பனை செய்பவரால் அவன் ஏமாற்றப்பட்டதையும் உணர முடிந்தது.

இன்றும் கூட, ஊடகங்கள் சிலவற்றின் ஊடாக காதில் விழுபவை, கண்ணில் படுபவை முன்னுக்குப் பின் முரணாக அடுத்தடுத்த வரிகளில் விளம்பரங்களை தரும்போது நினைவுக்கு வருவது 'நல்லதுணி. சாயம் போனாலும் துணி கிழியாது. துணி கிழிந்தாலும் நிறம் மாறாது. தரமான துணி."

ஏப்ரல் மாத விடுமுறையில் அப்பாவுடன் நிற்கும்போது, அப்பாவுடன் நெருங்கிப் பழகும் ஒருவர் கைமாற்றாக ஐந்து ரூபா கேட்டார். அவரை வெளியில் நிற்க வைத்துவிட்டு, அப்பா தனது பெட்டியிலிருந்து பத்து ரூபா நோட்டைக் கொடுத்து, ''மாத்தின காசில்ல. சாவகாசமா திருப்பித் தா'' எனக் கொடுத்தார்.

பெட்டியில் ஐந்து ரூபா நோட்டு இருக்கத்தக்கதாக அப்பா பத்து ரூபா கொடுத்ததால் காரணத்தை அறிய முயன்றேன்.

''பத்து ரூபா நட்டம்தான்! ஆனா பழகியிட்டான். பத்து ரூபாவுக்கு மேல நட்டம் வராமல் பாதுகாக்க முடியும்'' என்றார்.

இரண்டு நாள் கழித்து அவர் பத்து ரூபாவுடன் அப்பாவைச் சந்தித்தார்.

''அவசரமில்ல. பிறகுத் திருப்பித் தரலாம்'' என்று அப்பா சொல்லியதும் அவர் பணத்தைத் திருப்பிக் கொடுக்காமல் சென்று விட்டார்.

மீண்டும் இரண்டு நாள் கழித்து அப்பா சம்பளம் எடுத்த சில நிமிடங்களுக்குள் வந்தார், பத்து ரூபா கடன்காரர். இப்போது அவர் கடனாகக் கேட்ட தொகை ஐம்பது ரூபா.

அப்பா சிரித்தார், ''கொஞ்சம் முன்னாடி வந்திருக்கப்படாது. ஊர்லேயிருந்து வந்தவரிடம் சம்பளத்தைக் கொடுத்திட்டேன். காசிருந்தா ஐம்பது இல்லே நூறுகூடத் தருவேனே''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சம்பவத்தைப் பற்றி அப்பா கூறும்போது ''சில ஆட்களுடன் பழக வேணும். பகைக்கக் கூடாது. பணம் கொடுக்கல் வாங்கல் செய்து பகைக்கக் கூடாது. அஞ்சு கேட்கிறபோது பத்தைக் கொடுத்து கொடுக்கல் வாங்கலுக்கும் பத்தோடே முற்றுப்புள்ளி போட்டால் பத்து ரூபா மட்டும் நட்டம்'' என்றார்.

இந்தச் சம்பவம் தந்த படிப்பினையால் ஆயிரக் கணக்கில் ஏற்பட வேண்டிய எனது நட்டம் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

இன்னுமொரு சம்பவம் -

சுமாரான சம்பளம் வருமானம் என்று எனது நிலை உயர்ந்த பின் ஊரில் நிதிச்சேகரிப்பு பட்டியலுடன் தெரிந்தவர்கள் வந்திருந்த போது விறாந்தையில் அப்பாவும் இருந்தார்.

சம்பிரதாயபூர்வமான உரையாடல்களைத் தொடர்ந்து எனது பங்களிப்பை வழங்கும் எண்ணத்துடன் பணம் எடுப்பதற்கு அறைக்குள் நுழைந்தபோது பின் தொடர்ந்த தந்தை கேட்டார்,

''கட்டி எவ்வளவு பணம் என்று கேட்டீர்களா?''

நான் இல்லையென்று தலையசைத்து ''ஒரு 250/- ரூபா கொடுக்கலாம்'' என்றேன். தந்தை 100/- ரூபா போதுமென்றார்.

அவர் விருப்பப்படியே வெளியே சென்ற நான் மீண்டும் நிதி சேகரிப்பு பட்டியலை வாங்கி ''எவ்வளவு பணம் எதிர்பார்க்கிறீங்கள்'' என்றேன்.

என்ன ஆச்சரியம், ''100/- ரூபா எண்டாலும் நீங்கள் போடவேணும்'' என்றவர்களிடம் 100/- ரூபாவைக் கொடுத்து நிதிசேகரிக்கும் பட்டியலிலும் பதிவு செய்தேன்.

அப்பா தந்த விளக்கம், ''பாத்திரமறிந்து பிச்சை இடு. அவர்கள் குறைய எதிர்பார்க்கிறபோது கூடக் கொடுக்கக் கூடாது. அவங்கள் அதிகமாக கேட்டு உனது பொருளாதார நிலை இடம் கொடுக்காவிட்டால் அதிகம் கொடுத்து நீ நட்டப்படக் கூடாது. தனக்கு மிஞ்சியதுதான் தானம். ஆகவே தண்டலுக்கு வருவோரிடம் என்ன எதிர்பார்க்கிறீங்க என்று கேட்டு அளவாகக் கொடுக்க வேண்டும். கேட்கும் அளவு அதிகமானால் இருப்பு அறிந்து கொடுக்க வேண்டும்''.

இதனால் அன்று 150/- ரூபா மீதப்படுத்த முடிந்தது போல பின்னரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சந்தர்ப்பங்களில் சிலவற்றை மீதப்படுத்த முடிந்தது.

ஆங்கிலப் பாடம் படிக்கும்போது AN APPLE A DAY KEEPS THE DOCTOR AWAY என்று படித்ததும் வீட்டுக்குச் சென்று அம்மாவுடன் போராட்டம்.

''ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அப்பிள் பழம் சாப்பிட்டால் வருத்தம் வராது'' என்று பிடிவாதம் பிடித்தேன்.

அப்பா அமைதியாகச் சொன்னார், ''அது இங்கிலிஸ் புத்தகமான தால அப்பிள். பொதுவாக ஒரு பழம் சாப்பிட்டால் நல்லது. அப்பிளை விட வாழைப்பழம் நல்லது. நம்ம ஊர்ல வருஷம் முழுவதும் வாழைப் பழமும் கிடைக்கும். பப்பாசிப்பழமும் கிடைக்கும். சீசனுக்கு மாம்பழமும் பலாப்பழமும் கிடைக்கும். இதைவிட நல்ல பழம் வேறையில்லை.''

வேலைக்குச் சென்ற புதிதில் கொழும்பிலிருந்து அன்னாசி, இறம் புட்டான், மங்குஸ்தான் என யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்தாலும் முக்கனியான மா, பலா, வாழைக்கு மற்ற பழங்கள் ஈடு கொடுக்க முடியாது என தெரிந்து கொண்டேன்.

கடமை தொடர்பாக வெளிநாடுகளுக்குச் சென்றபோது அப்பிள் திராட்சையை விட அதிக விலை கொடுத்து வாழைப்பழம் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறேன். அப்படியொன்றும் அதிக விலையல்ல. ஒரு பழத்தின் விலை 150/- ரூபாவிலிருந்து 250/- ரூபாவரை.

எனவே அப்பிள் பழத்தின் சத்து வாழைப்பழத்திலும் இருக்கிறது. ஒப்பீட்டளவில் எங்கள் நாட்டில் மிக மலிவான வாழைப்பழம் அப்பிள் ஏற்றுமதியாகும் நாடுகளில் EXPENSIVE ITEM தான்.

எங்கள் மண்ணின் பெருமையையும், மண்ணில் விளையும் பொருட்களின் அருமையையும் அப்பா உணர்த்தியும் பல வருடங்களின் பின்பாகவே என்னால் உணர முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை நாட்களில் நெல்லிக்காய் தோடம்பழம் போன்றவற்றில் விற்றமின் 'சி' இருப்பதாகப் படித்ததும் இவற்றைத் தேடியலைந்தேன்.

எளிதாக எப்போதும் பெறக்கூடிய பொருள் தேசிக்காய் என்பதால் தேசிக்காயைப் பிழிந்து குடித்தால் விற்றமின் 'சி' கிடைக்கும் என ஆசிரியர் சொல்லியதைக் கேட்டு, பழுத்த எலுமிச்சம் பழங்கள் மூன்றை வாங்கி வந்து அவற்றைப் பிழிந்து பின்னர் நீரூற்றி சீனி போட்டுக் கலக்கிய போது அப்பா தெரிவித்த தகவல்:-

''எல்லோரும் வழமையாக முதலில் சாற்றைப் பிழிந்து சீனியோ சர்க்கரையோ போட்டு கலக்கிய பின் அல்லது இரண்டு பாத்திரங்களை எடுத்து மாற்றி மாற்றி ஆற்றி தேசிக்காய் நீரைத் தயாரித்துப் பருகு வார்கள். இப்படி கலக்கும் போதும், ஆற்றும் போதும் விற்றமின் சத்து வெளியேறி விடும் எனவும் உண்மையான விற்றமின் சத்து தேவையானால் தண்ணீரில் சீனியையோ அல்லது சர்க்கரையையோ சேர்த்துக் கரைத்து சரியான பக்குவத்திற்கு வந்த பின் தேசிக்காயைப் பிழிந்து சீனிக் கரைசலில் ஊற்றி அதிகம் கலக்காமலோ ஆற்றமலோ பருகும் போது தான் விற்றமின் 'சி'யைப் பெறக்கூடியதாயிருக்கும்'' என்றார்.

ஆரம்பத்தில் அப்பாவின் இக்கருத்துடன் உடன்படத் தயங்கினாலும், சற்று வளர்ந்த பின் காய்கறிகளை சட்டியால் மூடி அவிக்காவிட்டால் விற்றமின் வெளியேறிவிடுமென வைத்திய நிபுணர்களின் கருத்துக்களைப் பத்திரிகைகளில் படித்தபோது அப்பாவுடன் உடன்பட முடிந்தது. உயிர்ச் சத்தான விற்றமின் இருப்பதாக நாங்கள் வாங்கும் பொருட்களைத் தவறாகப் பதப்படுத்துவதாலும் பக்குவப்படுத்துவதாலும் உயிர்ச்சத்திழந்த உணவுப் பொருட்களையே உட்கொள்கின்றோம்.

கிராமத்துச் சூழலில் அமைந்த மண்வீட்டில் சிறிய மேசையொன்றின் மத்தியில் வைக்கப்பட்டிருக்கும் அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் இரவு ஆறுமணியிலிருந்து, அம்மா சாப்பிடுவதற்காகக் கூப்பிடும் வரை நானும் தங்கையும் படிக்க வேண்டும் என்பது அப்பாவின் கட்டளை.

அம்மா சாப்பிடுவதற்காக் கூப்பிடும் வரை எட்டு எட்டரை மணிவரை அமைதி நிலவும். அப்பாவும் அம்மாவும் கூட ஒருவரோடொருவர் பேச மாட்டார்கள். அப்பாவுடன் அல்லது அம்மாவுடன் கதைப்பதற்கு யாராவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தால் வெகு தந்திரமாக அவர்களை வீட்டுக்கு வெளியே அழைத்துச் சென்று மெல்லிய குரலில் சுருக்கமாகக் கதைத்து அனுப்பி விடுவார்கள். பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளைகளான எங்கள் படிப்பும் கவனமும் கதைகளால் குழம்பி விடக்கூடாது என்பதில் அப்பா கவனமாக இருந்ததுடன் அம்மாவையும் அதற்கேற்ப தயார்படுத்தி வைத்திருந்தார்.

சில வீடுகளில் இரவில் நடைபெறும் உரையாடல்களும் வாக்கு வாதங்களும் நான்கைந்து வீடுகளுக்காவது வெகுதெளிவாகக் கேட்கும் என்பது வேறுகதை.

மாணவப் பருவத்தில் திடீரென ஒரு சந்தேகம். May மாதத்தில் முப்பது நாட்களா? முப்பத்தொரு நாட்களா? என்பதுதான் சந்தேகம். இந்த சந்தேகம் வருடத்தின் கடைசிப் பகுதியில் வந்ததாலும் நாட்காட்டி திகதிகள் கிழிக்கப்பட்டதாலும் வேறு சாதனங்களைத் தேடவேண்டிய சூழ்நிலையில் அப்பா இடதுகை விரல்களை மடித்து வலது கை விரல்களால் விரல்களின் இறுதி மொழியைத் தடவி விட்டு முப்பத்தொரு நாட்கள் என்றார். பின்புதான் நாட்காட்டி, நாட்குறிப்பு இல்லாமல் எளிதாக ஒவ்வொரு மாதத்திலும் எத்தனை நாட்கள் என்பதை அறியக் கூடிய வழியைச் சொல்லித் தந்தார்.

இடது கையின் பெருவிரல் தவிர்ந்த ஏனைய நான்கு விரல்களும் உள்ளங்கையைத் தொடும் வண்ணம் பொத்திப் பிடிக்க வேண்டும். பின்னர் மறுகையிலுள்ள ஆட்காட்டி விரலால் பொத்திப் பிடித்த கையில் விரல்கள் ஆரம்பமாகும் மொழியையும் விரல்களுக்கு மத்தியிலுள்ள பள்ளப் பகுதியையும் ஆட்காட்டி விரல் மொழியிலிருந்து தொட்டு ஜனவரி, பெப்பிரவரி, மார்ச் என பன்னிரெண்டு மாதங்களையும் சொல்ல வேண்டும். அப்போது ஆட்காட்டி விரல் ஜனவரி மாதத்திலுள்ள முப்பத்தொரு நாளையும், மோதிர விரல் மே மாதத்திலுள்ள முப்பத்தொரு நாளையும் நினைவுக்குக் கொண்டுவரும். சிறியவிரல் மொழியை முதல் தடவை ஜுலை எனவும், மீண்டும் அதே மொழியை இரண்டாவது தடவை தொட்டு ஓகஸ்ட் எனவும் சொல்லி அதாவது சிறுவிரல் மொழியை அடுத்தடுத்து இரண்டுதரம் தொட்டு ஜுலை, ஓகஸ்ட் ஆகிய இரண்டு மாதங்களிலும் முப்பத்தொரு நாள் என்பதை நினைவுக்குக் கொண்டு வரலாம். பின்னர் மோதிர விரல் மொழியைத் தொட்டு ஒக்டோபரிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்தொரு நாளையும், நடுவிரல் மொழியைத் தொட்டு டிசம்பர் மாதத்திலுள்ள முப்பத்தொரு நாளையும் நினைவுக்குக் கொண்டு வரலாம். மொழிகளைத் தொடும்போது வரும் மாதங்கள் முப்பத்தொரு நாளைக் கொண்டதாகவும் இருவிரல்களுக்கும் இடையிலுள்ள பள்ளப் பகுதியைத் தொடும்போது வரும் மாதங்கள் அதாவது ஏப்ரல், ஜூன், செப்டெம்பர், நவம்பர் மாதங்கள் முப்பது நாளைக் கொண்டதாகவும் இருக்கும். ஆட்காட்டி விரலுக்கும் நடுவிரலுக்கும் இடையிலுள்ள பள்ளத்தைத் தொடும் போது பெப்பிரவரி எனச் சொல்வோம். பெப்பிரவரியில் 28 நாட்களும் லீப் வருடத்தில் 29 நாட்களும் வரும்.

கிராமப்புறங்களில் இரவுத் திருவிழா, நாடகம், கலைவிழா முதலியன இரவு எட்டு ஒன்பது மணிக்கு ஆரம்பமாகி அதிகாலைவரை நடை பெறும். சுமார் இரவு ஏழு மணியளவில் நாடகம் பார்க்கப் புறப்பட்ட போது, ''கட்டி, டோர்ச் லைட்டையும் கொண்டு போங்க. பின்னிருட்டு. லைட்டைக் கொண்டு போனால் திரும்பி வாறதுக்கு சுகமாயிருக்கும்'' என்றார் அப்பா. வானத்தில் நிலவு இருந்ததால் வெளிச்சம் தேவை யில்லை என்ற எண்ணத்துடன் சென்றுவிட்டேன்.

நாடகம் முடிந்து அதிகாலை மூன்று மணியளவில் இருட்டில் தட்டுத் தடுமாறி வீட்டை வந்தடைந்தபோது அப்பா ஏசுவார் என எதிர்பார்த்தேன். அவர் இன்னுமொரு விடயத்தைச் சொல்லித் தந்தார்.

''இரவுக் காலம் பன்னிரெண்டு மணித்தியாலம் கொண்ட பகுதி. முழு இருட்டான அமாவாசை நாளிலிருந்து பதினைந்து நாளில் பூரண நிலவு தோன்றும். பின்னர் பதினைந்து நாளில் நிலவு தேய்ந்து தேய்ந்து அமாவாசை தோன்றும். மழையில்லாவிட்டால் அமாவாசையின் பின் தோன்றும் நிலவு ஒவ்வொரு நாளும் 45 நிமிடம் என வானில் தோன்றும் நேரத்தை அதிகரித்துச் சென்று பதினைந்து நாளில் முழு வளர்ச்சி பெற்று முழுநிலவாக பூரணைச் சந்திரனாக பறுவத்தன்று பவனி வரும். பின்னர் ஒவ்வொரு நாளும் இருள்காலம் 45 நிமிடங்களால் அதிகரித்துச் செல்லும். மாலையானதும் ஆரம்பமாகும் இருட்டு 'முன்னிருட்டு' எனவும், அதிகாலைக்கு முன்பு காணப்படும் இருட்டு 'பின்னிருட்டு' எனவும் அழைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிச்ச வசதி இல்லாத காலத்தில் கிராம மக்கள் போக்குவரத்துச் செய்யும் போது 'முன்னிருட்டு', பின்னிருட்டு' வேளைகளைக் கவனத்தில் கொண்டு காரியமாற்றினார்கள்.

எழுது வினைஞன் பதவியிலிருந்து நிருவாகச் சேவைக்கு தெரிவு செய்யப்பட்டதும், கடமைகளைச் சரியாகச் செய்வதற்காக பல விடயங் களைப் படிக்க வேண்டியிருந்தது. விடுதலையில் செல்லும் போது அரசாங்க நிதிப் பிரமாணங்கள், தாபன விதிக்கோவை என சிலவற்றை காவிச் சென்று படித்தேன், பாடமாக்கினேன்.

அப்போது அப்பா வெகு சாதாரணமாகச் சொன்னார், ''கட்டி, இவையும் பார்க்கத்தான் வேணும். படிக்கத்தான் வேணும். இன்னுமொரு முக்கிய விடயம். எப்போதும் உங்களுக்கு சில மேலதிகாரிகள் இருப்பாங்கள். சிலர் உங்கடை மட்டத்திலே வேலை செய்யிற உத்தி யோகத்தராக இருப்பாங்கள். சிலர் டிரைவர், பிடீயோன் என்று உங் களுக்கு கீழை வேலை செய்யிறவங்களாக இருப்பாங்கள். அவங் களை எடைபோட்டு யார் எப்பிடியிருப்பாங்க. அவங்களுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது. எப்ப ஒத்துப் போகலாம், எப்ப வெட்டி விடலாம், எப்ப நழுவலாம் என்பதை படிச்சிட்டால் சுகமாக வேலை செய்யலாம்'' என்றார்.

'ஆட்களைப் படிக்க வேண்டும்' என்று அறிவுரை வழங்கிய அப்பா, ''மற்றவர்கள் உன்னைப் படிக்கிறளவுக்கு நீ நடந்து விடாதே'' என்றும் சொல்லி வைத்தார்.

நாலாம் வகுப்பில் படிபித்துக் கொண்டிருந்த ஆசிரியர் சில நாடு களைக் குறிப்பிட்டு, அங்கேயுள்ள கிணறுகளிலிருந்து 'மண்எண்ணெய்' எடுக்கப்படுகிறது என்று சொல்லியதும், நான் அவசரப்பட்டு ''தெரியும், யாழ்ப்பாணத்தில் பெற்றோல் செட் சந்தியிலிருக்கும் கிணறுகளிலை யிருந்தும் மண்எண்ணெய் எடுக்கினம்'' என்று சொல்லியதும் ஆசிரியர் கேலியாகச் சிரிக்க ஆரம்பித்தார். சக மாணவர்கள் என்னைப் பார்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

``ஓம் சேர். பஸ் ஸ்ரான்டிலையிலிருந்து கஸ்தூரியார் றோட்டாலை போறபோது, வின்ஸர் தியேட்டர் சந்தியிலை மூண்டு பக்கமும் பெற்றோல் செட் இருக்குது. அந்த பெற்றோல் செட்டிலை மண்எண்ணெய் குடுக்கிறதுக்கு பிறம்பாக ஒரு பைப் வைச்ச டாங் இருக்கு. அதுக்குப் பக்கத்திலை மண்எண்ணெய்க் கிணறு இருக்குது'' என்றேன்.

ஆசிரியர் சிரிப்பை அடக்கிக் கொண்டு ``அது மண்எண்ணெய் கிணறுகள் இல்லை. தண்ணீர்க் கிணறுகள். இலங்கையில் எண்ணெய்க் கிணறுகள் இல்லை'' என்றார்.

அப்பாவுக்கு இந்த சம்பவத்தைச் சொன்னதும், அப்பா கஸ்தூரியார் றோட்டும், ஸ்ரான்லி றோட்டும் சந்திக்கும் வின்ஸர் தியேட்டர் சந்திக்கு என்னை அழைத்துச் சென்றார். மூன்று எரிபொருள் நிரப்பும் நிலையங் களிலும் தனித்தனியாக மண்எண்ணெய் வழங்குவதற்கான பகுதிகள் இருந்தன. அவற்றுக்கருகே தண்ணீர் எடுப்பதற்காக கிணறுகள் கட்டப் பட்டிருந்தன. அவற்றைத்தான் தவறுதலாக மண்எண்ணெய்க் கிணறுகள் என எண்ணியதையும் உணர்ந்து கொள்ள அதிகநேரம் பிடிக்கவில்லை.

அப்பா சொன்னார், ``எல்லா விடயங்களையும் நன்கு அவதானிக்க வேண்டும். சரியாக ஒரு விடயத்தை அறிந்த பின்புதான் பதில் சொல்ல வேண்டும். அவசரப்பட்டு எதையாவது உளறிக்கொட்டி முட்டாள் பட்டம் எடுக்கக் கூடாது. சந்தேகம் ஏற்பட்டால் தகுந்தவர்களிடம் கேட்டுச் சந்தேகத்துக்குத் தெளிவு பெறவேண்டும்.

மிகச் சிறிய வயதிலேயே அரசாங்க வேலைபெற்று கொழும்புக்கு வந்தபோது வழிபடுவதற்காக சிறிய அளவிலான முருகன் சிலை யொன்றையும் எடுத்துக் கொண்டு வந்தேன். சைவசமயமல்லாத வேறு மதத்தைச் சேர்ந்த மூதாட்டியொவருக்குச் சொந்தமான கூட்டுவிடுதியில் தங்குவதற்கு ஒழுங்குகள் செய்து கொண்டேன்.

ஹோலில் வைக்கப்பட்டிருந்த மேசையில் எனது படிப்பு, எழுத்து வேலைகள் செய்தேன். அந்த மேசை மீது முருகன் சிலையை வைத்து தினமும் வழிபட்டு வந்தேன். அந்தக் கூட்டு விடுதியில் எனது அறை வாசியான ஜெறோம் வேறு மதத்தைச் சேர்ந்தவன். ஆனாலும் ஓரளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமயம் பற்றிய அறிவும் உள்ளவன்.

ஒருநாள் மாலை நான் கந்தோரிலிருந்து திரும்பி வந்ததும், ''நடராசா. உன்னுடைய பிள்ளையார் சிலைக்கு நான் பூ வைத்தனான்'' என்றார் வீட்டுரிமையாளரான மூதாட்டி.

நான் மெதுவாகச் சிரித்தேன். ''அம்மாச்சி இது பிள்ளையார் சிலையில்லை. முருகன் சிலை''

மூதாட்டி தனது குரலை உயர்த்தினார், ''இல்லையில்லை நடராசா. யானை மாதிரியிருக்கிறதுதான் முருகன். இது பிள்ளையார்'' என்றார்.

தொடர்ந்து நான் மறுத்தேன், ''அம்மாச்சி ஊரிலை இருக்கிறபோது ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோவிலுக்குப் போறனான். இது முருகன் சிலை. யானை முகத்துடன் இருப்பவர்தான் பிள்ளையார்'' என்றேன்.

மூதாட்டி, ''நடராசா, நீ சின்னப்பெடியன். உனக்கு ஒண்டும் தெரியாது. இது பிள்ளையார்'' என்றதும்

''ஓம் அம்மாச்சி. நீங்க சொன்னது சரி'' என்ற சரணாகதியடைந்ததும் எனது அறைவாசி ஜெறோம் கேட்டான்,

''என்ன மச்சான், சரணடராகியிட்டாய். இது முருகன் சிலை யெல்லே?'' என்றான்.

என்றோ ஒருநாள் அப்பா சொன்னதை ஜெறோமுக்குச் சொன்னேன்.

''நின்று தர்க்கிப்பதில் பலனில்லை. சைவசமய அறிவில்லாதவருடன் ஏன் இவ்விடயத்தை விவாதப் பொருளாக்கி நேரத்தையும் சக்தியையும் செலவிட வேண்டும். ஏதாவது பலன் ஏற்படுமென்றால் விவாதிக்கலாம். விளக்கம் கொடுக்கலாம். இப்போ எனக்கு நேரம் மிச்சம். வீண் வாக்கு வாதம் இல்லை. வீட்டு மூதாட்டியும் சிலவேளை திருப்திப்பட்டிருப்பார், தனக்கு எல்லாம் தெரியும் என்று.''

இது போன்ற விடயங்களில், விதண்டாவாதம், குதர்க்கம் ஆகியவற்றில் பொன்னான நேரத்தை மண்ணாக்காதிருக்கப் பழகிக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாத்மா காந்தியின் போதனைகளாலும் செய்கைகளாலும் கவரப்பட்ட அவர் நாலு முழ வேட்டிதான் உடுத்துவார். அதுவும் வர்ணக் கரை எதுவுமற்ற கதர் வேட்டி. அறுபது எழுபதுகளில் யாழ்ப்பாணத்தில் கதர் வேட்டி அருமையான பொருளாகி விட்டது. ''சுதந்திரத்துக்குப் பிறகு கதர் வேட்டி வாங்கக் கூடிய சுதந்திரமில்லை'' என்று சொல்வார்.

''நான் உழைக்கிறேன். நல்ல வேட்டி சட்டை வாங்கித் தருகிறேன்'' என்று சொன்னால் - ''உடுப்பு சுத்தமாக இருக்க வேண்டும். வடிவாக இருக்க வேண்டும். பெருமை தர வேண்டும். விலை கூடினதாக அலங்காரமானதாக இருக்கக் கூடாது'' என்று சொல்வார்.

அப்பா கடை வேலையிலிருந்து நீங்கிய பின்பு விரும்பிக் கேட்கும் பொருட்கள் இரண்டு.

ஒன்று - 'வாசிப்பதற்குச் சில பத்திரிகைகள்'

இரண்டாவது - 'நாலு முழ வேட்டி'

1990

~~1960~~ ஜனவரி மாதம் அவராகக் கேட்காமல் நான்கு வேட்டிகள் வாங்கிக் கொடுத்தேன். அவருக்கு மகிழ்ச்சி.

1990

மீண்டும் ~~1960~~ பெப்ரவரி மாதம் அவரைப் பார்க்கச் சென்றபோது, ''தம்பி இரண்டு வேட்டி'', என்றார்.

''நான்கு வேட்டிகள் எடுத்துக் கொடுத்து ஒரு மாதமாகவில்லை. பிறகும் வேட்டியா?'' எனது சிந்தனையைப் புரிந்து கொண்ட தந்தையார்-

''தம்பி அந்த வேட்டியள் இருக்கு. அது அங்காலை போறபோது தேவைப்படும்'' என்று சொல்லிய தந்தையாரின் கண்கள் வானத்தை நோக்கின. அவை மீண்டும் கீழிறங்கின.

''இப்போ கட்டுறதுக்கு இரண்டு வேணும்'', என்றார்.

இரண்டு வேட்டிகள் கொடுத்தேன். அவைதான் தந்தையாருக்கென நான் வாங்கிக் கொடுத்த கடைசி வேட்டிகள்.

1990 மார்ச் மாதம் தந்தையார், அவருக்கு விருப்பமான நாலு முழ சாதாரண வேட்டியுடன் தனது யாத்திரையைப் பூர்த்தி செய்து கொண்டாலும் தினமும் எங்கோ ஒரு சந்தர்ப்பத்தில் ஏதோ ஒரு பாடத்தைப் படிப்பித்துக் கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

236766

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப் பிரசித்தி பெற்ற கன்யாகுமரிப் பிரதேசத்தை அடுத்துள்ள ஊர் தான் கரல்வாய்மொழி. அங்கு 1911ம் ஆண்டில் சிவகாமிநாதபிள்ளை - பார்வதி அம்மாவுக்குப் பிறந்தவர் தான் சிங்காரம்பிள்ளை. வாழ்க்கை வசதியற்ற காரணத்தால் படிப்பதையே கைவிட்டு விட்டுத் தனது எட்டாவது வயதில் கொழும்பு வந்தவர், இவர். பின்னர் யாழ்பாணம் வந்தவரைத் தில்லைப்பிள்ளை இனம் உள்வாங்கிக் கொண்டது. செய்யும் தொழில் மீது தேவதா விசுவாசம் கொண்ட சிங்காரம் பிள்ளை கட்டம் கட்டமாகத் தன்னை மேம்படுத்திக் கொண்டதுடன் தான் தொழில் செய்துவந்த நிறுவனத்தையும் வளர்த்துக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து உடுப்பிட்டியைச் சேர்ந்த இராசம்மாவை வாழ்கைத் துணையாக ஏற்றுக்கொண்டார். இந்தியா சுதந்திரமடைந்தது. அப்போது பிறந்த மகனுக்குச் சுதந்திரன் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தார். மகளுக்கு பரதாமணி என நாமமிட்டார். உழைப்பை மாத் திரம் நேசித்து வந்த இவர் அதிகம் ஆசைப்பட்டவரல்ல, நேர்மையாகவும், நெஞ்சு நிறைந்த நட்புணர்வுடனும் கடைசி வரையும் இந்த மண்ணில் உழைத்து வந்த இவர் 1990 ல் உயிர் நீத்தார்.

எஸ். தில்லைநடராஜா
(மகன்)

ISBN 955825030-9
9 789558 250303 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org